காவேரி

DECEMBER 1944

தாரண-மார்கழி

22 DEC 1944
MADRAS

4-5

-/6

idest Circulated Monthly

நடனகலாமணி

A. N. பெரியநாயகி

(கும்பகோணம்)

பந்தணைநல்லூர் நாட்டிய கலாநிதி மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களின் மாணவி

பரதநாட்டியம் & அபிநயக்கச்சேரி

22—12—44 **P. S. V.** எலக்ட்ரிக் தியேட்டர், பாலக்காடு.

24—12—44 பைன் ஆர்ட்ஸ் ஸொஸைடி, கள்ளிக்கோட்டை

2—1—45 செயிண்ட் மேரீஸ் ஹால், தமிழ் இசைமாநாடு, மதராஸ்

12 DEC 1944

இந்தியக் கைத்தொழிலை நீங்கள் ஆதரியுங்கள்

குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கு நீங்கள் வெறுங்கையுடன் போக மாட்டீர்கள். கைக்கு எளிதாய் உங்கள் பணப்பைக்கும் எளிதாய் **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர் மெண்ட் ஒரு டின் வாங்கிக் கொண்டு போங்கள். **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர்மெண்டையே குழந்தைகள் விரும்பித் தின்னும். அக்குழந்தைகளின் மென்மொழிகளில் இப்பெப்பர்மெண்டின் இனிமையை நீங்களே கண்டு ஆனந்தப்படுவீர்கள். உயர்ந்த முறையில் கை தேர்ந்த வேலைக்காரர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.

தென் இந்தியா கன்பெக்ஷனரி தொழிற்சாலை

புரோப்ரைட்டர்கள்:— **வி. எஸ். & ஸன்ஸ்**

கும்பகோணம்.

The Southern India Confectionery Factory

Proprietors:- V. S. & Sons,

KUMBAKONAM.

இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபிஸ்: மாயவரம் ★ ஸென்ட்ரல் ஆபிஸ்: மதராஸ்

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	25,00,000
வெளியிடப்பட்ட மூலதனம்	ரூ.	21,25,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ.	18,75,000
காப்பு (ரிசர்வ்) திரவியம்	ரூ.	3,00,000
மொத்த வரவு சிலவுகள்	ரூ.	2,50,00,000மேல்

பிராஞ்சுகள்:

அமதலவால்லா	மதராஸ்	மாயவரம்	திருநெல்வேலி
அனகாபள்ளி	மாம்பலம்	பாலக்காடு	திருச்சினுப்பள்ளி
சிதம்பரம்	மைலாப்பூர்	புதுக்கோட்டை	வேலூர்
காஞ்சீவரம்	திருவல்லிக்கேணி	சீயாழி	விஜயபுரம் (திருவாரூர்)
ஈரோடு	பேரியமேட்	தாட்பள்ளிக்கூடம்	விருதுநகர்
காரைக்குடி	மதுரை	தஞ்சாவூர்	விஜயநகரம்
கும்பகோணம்	சாலூர்	பார்வதிபுரம்	திருச்சூர் (கொச்சி ஸமஸ்தானம்)

நிர்வாக போர்டார்:

ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி, C. I. E. (சேர்மென்)
,, வி. வெங்கட்ராம அய்யர், M.A.,B.L.,
,, ஆர். எஸ். எ. சங்கர அய்யர்
ஸ்ரீ ஆர். விஸ்வநாத அய்யர், B.A.,B.L.;
,, கே. சிவஸ்வாமி அய்யர்
,, எஸ். என். என். சங்கரலிங்க அய்யர், மானேஜிங் டைரக்டர்.

ஜவுளி தினுசுகள் :: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்

புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.

(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினுப்பள்ளி.

N. B.-உயர்ந்த பனாரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.



T.V.S. முன்னிற்கிறது!



T.V.S. கியாஸ் பிளாண்டுகள் மூன்று வருஷ காலமாக விற்பனையாகி வருகின்றன. இந்தியாவில் இன்று 6000 க்கு மேல் உபயோகத்திலிருக்கின்றன. இதன் சிறந்த உழைப்பையும், சிக்கனச் செலவையும் கண்டு, கார், டிரக் சொந்தக்காரர்கள் பூரண திருப்தி அடைந்திருக்கின்றனர். தமது வெகுநாளைய அனுபவத்தால்தான் T. V. S. இஞ்சினீயர்கள் தலைசிறந்த கியாஸ் பிளாண்டுகளைத் தயாரிப்பது சாத்தியமாகிறது.

இந்தப் பிளாண்டின் திறமையைப் பிரத்யக்ஷமாக காண்பிக்கும்படி டிஸ்ட்ரிப்யூட்டர்களிடம் கேளுங்கள்.

பிரதான அம்சங்கள்

- ஸ்டார்டிங் அதிசுலபம்:—சீக்கிரத்தில் ஸ்டார்ட் ஆகிவிடும்.
- சமக்னம்:—டயர் தேய்வு குறைவு. பிரேக்கிற்கு பந்தோபஸ்து அதிகம்.
- மும்முறை வடிகட்டும் வசதி:—சுத்தமான கேஸ். மேற்பார்வை செலவு குறைவு.
- மிகவும் நம்பிக்கையானது:—ஆரம்பத்திலிருந்து முடிவுவரை நம்பிக்கையான உழைப்பு.
- நேர்த்தியான தோற்றம்:—மற்றெல்லா பிளாண்டுகளையும்விட சிறந்த தோற்றம்.

வாங்குமுன் **T·V·S** கியாஸ் பிளாண்ட் மாதிரிகளைப் பாருங்கள்.

(கார், லாரிகளுக்கு ஏற்றவை)

T.V. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ், லிமிடெட்

மதுரை & சென்னை.

TVS.K-7 TM



ஒரு வங்காளி வீடு—
தேநீர் அருந்தும் நேரம்

கவிஞர்கள், கலைஞர்களுடைய சம்பிரதாயத்துக்கு இணங்க, அமைதி நிறைந்து ஆடம்பரமில்லாத ஒரு வங்காளி வீட்டில் ஒரு தனிப்பட்ட வசியம் இருக்கத்தான் செய்கிறது.

அன்றாட வேலை முடிந்தபின் வீட்டில் பேச்சுநடக்கும். இந்தப் பேச்சுக்குத்தோழன் தேநீர். வீட்டுக்காரி அமைதியுடன் கெட்டிலிலிருந்து தேநீரை ஊற்றி, அவரவர்கள் ருசிக்குத் தகுந்தபடி பாலையும் சர்க்கரையையும் அதில் கலக்கிறாள். பேசுவதும், இடையிடையே பேலாவிலும், கோப்பையிலும் உள்ள தேநீரை உறிஞ்சுவதும் என்ன அற்புதமான காட்சி!

இந்தியாவின் மற்றப் பிரதேசங்களைப்போலவே இங்கேயும் புத்தப்புதிதான ப்ரூக் பாண்ட் தேயிலைக்கு நல்ல கிராக்கி இருக்கிறது.

ப்ரூக் பாண்ட்

(இரு இலையும் ஒரு மொட்டும்)

மஹாமகம்

அகில இந்திய ஸ்வதேசி பொருட்காட்சி

கும்பகோணம்

12-2-45 முதல் 8-3-45 வரை

உங்கள் வியாபாரத்தை பெருகச்செய்ய
நீங்கள் தயாரிக்கும் பொருள்களை விளம்பரப்படுத்த
லக்ஷக்கணக்காகக் கூடும் மக்களுக்கு அறிமுகப்படுத்த
} அரிய சந்தர்ப்பம்

ஸ்டால்களுக்கு முந்துங்கள்.

சுமார் 10 லக்ஷம் ஜனங்கள் கூடும் தருணம்

அகில இந்திய சங்கீத மஹாநாடும்

நடைபெறுகிறது.

பிரபல வித்வான்களின் இன்னிசை
கானத்தையும் அனுபவிக்கலாம்

வியாபாரிகள், சங்கீத வித்வான்கள், பொதுஜனங்கள் எல்லாருடைய ஒத்துழைப்பும் கோரப்படுகிறது.

—விபரங்களுக்கு—

Dr. M. V. தியாகராஜ அய்யர்,
தலைவர்.

C. ராமசர்மி முதலியார்,
C. L. ஆராவமுத அய்யங்கார்,
காரியதரிசிகள்.

டிரேட் மார்க்கை
கவனியுங்கள்!



ஒவ்வொரு
வீட்டிலும்
உட்வார்ட்ஸ்
க்ரைப் வாட்டர்
இருக்கவேண்டும்

WOODWARD'S GRIPE WATER

keeps baby well

I-WW112-111 W. WOODWARD LTD. LONDON ENGLAND

Agent:— **T. T. KRISHNAMACHARI,**
12A Lingha Chetty Street, :: G. T. MADRAS

பொருளடக்கம்

தாரண மலர் 4 — மார்கழி இதழ் 5

டாக்டர் வைஸிராய் ... 9

கதம்பம் ... 13

புது யுகத் திட்டங்கள் ... 17
க. சந்தானம்

ஸங்கீதம் ... 20
ஆர். கே. விசுவநாதன்

அழகு மயக்கம் ... 25
ஜி. எஸ். மணி

தையல்கார குமரசாமி ... 37
ரா. வீழிநாதன்

வறண்ட பார்வை ... 40
எம். எஸ். கமலா

லக்ஷ்யச் சிதைவு ... 50
கே. சுந்தரம்மாள்

வரப்பிரசாதி ... 63
கமலா பத்மநாபன்

இதென்ன உலகம் ... 67
கிருத்திவாஸ்

ஜன்னலுக்கு வெளியில் ... 69
சாரி

குறிப்பு :—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

ஆயுள் ஆபீஸுகளுக்குள்
மிகவும்
முன்னேற்ற மடைந்தது

21906.

ஹிந்துஸ்தான்

புதிய பிஸினஸில்
எட்டிப்பிடிக்க முடியாத
ரிகார்ட் உள்ளது

குறிப்பிட்ட இடங்களுக்கு
ஸ்பெஷல் ஏஜண்டுகள் தேவை
இவர்களுக்கு கமிஷன், அலவன்ஸ் எல்லாம்
அளிக்கப்படும்.

விபரங்களுக்கு:—

கிளை ஆபீஸ்
ஹிந்துஸ்தான் கோ - ஆபரேடிவ்
இன்ஷ்யூரன்ஸ் சொஸைடி லிமிடெட்
ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்
மதராஸ்

காவேரி

தாரண மலர் 4	"சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார்	மார்கழி இதழ் 5

டாக்டர் வைஸிராய்

வைஸிராய் லார்ட் வேவல் இன்று டாக்டராக மாறிவிட்டார். இந்திய அரசியல் நோயைத் தீர்ப்பதற்கு மருந்தொன்று இருக்கிறது எனக் கண்டுபிடித்து விட்டாராம்.

முதலில் ஸோல்ஜராக இருந்தவர் தளகர்த்தரானார். அதில் எத்தகைய வெற்றி கண்டார் என்பது உலகமறிந்த விஷயம். பிறகு இந்திய வைஸிராயாக நியமிக்கப்பட்டபொழுது அரசியல் நிலையைச் சீர்படுத்தி விடுவார் என எதிர்பார்க்கப்பட்டது; பலனில்லை. தமது செல்வாக்கைக்கொண்டு செய்ய முடியாததை இன்று ஹிதோபதேசத்தினாலும் நம்பிக்கை மருந்தினாலும் தீர்த்து விடலாமெனக் கண்டுபிடித்திருக்கிறாராம். இதை நேற்றுக் கல்கத்தாவில் பேசுகையில் வெளியிட்டார்.

"கட்சிப் பிளவினால் ஏற்பட்ட ஜ்வரதாபத்தால் இந்தியா இன்று அல்லல் படுகிறது. அதைத் தீர்க்கப் பாகிஸ்தான் என்ற பெரிய ஆபரேஷன் தேவையில்லை. 'இந்தியாவினின்று வெளியேறுங்கள்' என்ற கலப்பு மருந்தும் சத்தியாக்கிரஹ மாத்திரைகளும் உங்களுக்குப் பலன் அளித்ததாகத் தெரியவில்லை. மருந்தை அறவே ஒழியுங்கள். பிரிட்டிஷாரின் நல்லெண்ணத்தில் நம்பிக்கை வையுங்கள். பழைய வித்யாஸங்களை மறந்து விடுங்கள்" இவ்வாறு நீண்டதொரு உபதேசம் செய்துள்ளார்.

நமக்கு நோய் இருப்பதென்னவோ வாஸ்தவம். அதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அந்த நோய்க்கு மூலகாரணம்—நமது உடல் நலம் குன்றிமெலிந்துவருவதற்குக்காரணம்—நம்மைப் பிடித்து உறிஞ்சிவரும் அட்டை. அதைக் கிள்ளி எறிந்தால் வியாதி தானே தீர்ந்துவிடும் என்பதுதான் நமது காந்திபோன்ற தலைவர்களின் வாதம். வகுப்புவாதம், ஒற்றுமையின்மை இவையெல்லாம் ரத்தக் குறைவினால் ஏற்படும் தொல்லைகள். அட்டை ரத்தத்தை உறிஞ்சி வருகையில் ரத்த விருத்திக்கு மருந்து சாப்பிடுவது மதியீனம்.

அட்டை ஒட்டிக்கொண்டிருப்பது வாஸ்தவம். ஆனால் அதை நீங்கள் பொருட்படுத்தாது, அதன் மீது நம்பிக்கை வைத்து ரத்த விருத்தி செய்வதில் முனையுங்கள் என்று வைஸிராய் உபதேசிக்கிறார்.

இது எவ்வளவு நியாயமான வாதம் என்பதை நேயர்களே உணரலாம்.

இன்னும் சில விசித்திரமான நோக்கங்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

இந்தியாவில் இன்று தேசிய அரசாங்கம் பதவி வகித்து வருகிறதென்றும், அது முற்றிலும் இந்திய மயமென்றும், முக்கியமான அலுவல்களை அது நடத்திவருகிறதென்றும் கூறுகிறார். தேசமக்களின் நலனைப் பாதுகாத்து நடத்துவதில் பல கஷ்டங்களினால் தவறுகள் நேரிடினும், யுத்த முயற்சி விஷயத்தில் இந்த மத்திய தேசிய சபையார் ராணுவ தளகர்த்தர்கள் மனமொப்ப நடந்து வருகிறார்களாம். யுத்தத்திற்குப்பிறகு ஏற்படும் பல பிரச்னைகளைக் குறித்தும் மிக்க ஊக்கத்தோடு திட்டங்கள் தயாரித்தும் வருகிறார்கள் என்று தட்டிக்கொடுத்தார்.

இதற்கு அர்த்தம் என்ன? வைஸிராய் நிர்வாக சபை அங்கத்தினர்கள் பொது மக்கள் நலனைக் காப்பதில் திறமை வாய்ந்தவர்கள் என்றோ சரிவர நிர்வாகம் நடத்தி வருகிறார்களென்றோ வைஸிராய் அவர்களால் கூறமுடியவில்லை. ஆனால்

ராணுவ அதிகாரிகளின் தாஸர்களாக இருக்கிறார்கள் என்பதை மட்டும் குறிப்பிடுகிறார்.

மக்களின் ஆதரவு அவர்களுக்கு இல்லை, இருக்கமுடியாது என்பது இதிலிருந்து தெளிவாகிறது. ஆனால் வசிஷ்டர் வாயால் பிரும்மரிஷி என்று சொல்லிவிட்டால் அதனை இக் கலிகால மக்கள் ஒப்புவதில்லை. இந்தியாவில் தேசிய அரசாங்கம் இருப்பதாக வைஸிராய் அவர்கள் சொல்லிவிட்டால், அவர் நடத்தும் நிர்வாகம் தேசியமாகிவிடாது. செய்கையிலும் அது தேசிய அரசாங்கமன்று என்று அவர் வாயிலிருந்தே வெளிவந்து விட்டது. ராணுவ அதிகாரிகளைத் திருப்தி செய்து யுத்த முயற்சிக்கு உதவி புரிந்துவிட்டால் அது தேசிய அரசாங்கமாகிவிடுமா? இது அர்த்தமற்ற பிதற்றல்.

தேசிய அரசாங்கம் வேண்டும் என்ற கிளர்ச்சிக்குப் பதிலளிப்பதுபோல் இன்றே அது நடந்து வருகிறது என்று உலகமக்களை ஏமாற்றச் சொல்லும் புரட்டுச்சொல்லே அது.

இது வெறும் புரட்டு, தம்மை எவரும் நம்பமாட்டார்கள் என்று அவருக்கே தோன்றிவிட்டதுபோலும்! உடனே பேச்சை மாற்றிக்கொண்டார். 'முக்கிய அரசியல் கட்சிகளின் ஆதரவு பெற்ற தேசிய அரசாங்கம் ஏற்பட்டால் இந்தியாவுக்கு நன்மை பயக்கும் என்பதை நான் மறுக்கவில்லை' என்று சேர்த்துக்கொண்டார். 'அத்தகைய அரசாங்கம் யுத்த காலத்திலேயே ஏற்படக் கூடுமானால் தற்போதுள்ள அரசியல் அமைப்பின் வரம்பிற்குட்பட்டுத்தான் அது நடக்க வேண்டும். அதன் முக்கிய நோக்கம் யுத்த முயற்சிக்கு ஆதரவளிப்பதாக இருக்க வேண்டும், வெறும் வாய்ச்சொல்லில் மட்டுமன்று, முழுமனதுடனும், ஹிருதய பூர்வமாயும்' என்றார்.

தேசிய அரசாங்கம் என்பது பொறுப்புள்ள ஆட்சி. இப்பொழுது நடந்துவரும் ஆட்சி அதற்கு நேர் விரோதமானது. வைஸிராய் அவர்கள் எல்லாக் கட்சிகளின் பலத்தைப் பெற்ற தேசிய அரசாங்கம் சிலாக்கியமானது என ஒப்புக்கொண்டவர், இன்று இருந்துவரும் ஆட்சி வரம்புக்குள்ளேயே அதுவும் அமையவேண்டுமென்று வற்புறுத்தினால் அது எப்படித் தேசிய ஆட்சியாகும்?

ஸர் ஸாப்ரூவின் தலைமையில் கூடிய கட்சியற்ற மஹாநாட்டு நிர்வாகக் கமிட்டி தற்போதுள்ள அரசியல் அமைப்பின் வரம்பிற்குள்ளேயே பொறுப்புள்ள அரசாங்கம் அமைக்கக்கூடும் என்று எடுத்துக் காட்டியுள்ளது. மஹாத்மா அவர்கள் யுத்த முயற்சிக்குக் காங்கிரஸ் விரோதியல்ல என்பதையும் தெளிவாக்கியிருக்கிறார். இப்படியிருக்கையில் பொறுப்புள்ள அரசாங்கத்தை அமைப்பதில் என்ன சங்கடம்?

உண்மையில் இன்றைய அரசியல் அமைப்பும், இன்றைய போலி மத்திய அரசாங்கமும் மாறுவதைப் பிரிட்டிஷார் விரும்பவில்லை. தாங்கள் இருமுறை முயற்சி செய்தாய்விட்டதாம். ஆகையால் இனி முயற்சி செய்யப் போவதில்லை என்று பின்பு கூறியிருக்கிறார்.

வைஸிராய் அவர்களிடமிருந்து சாதாரண நிர்வாகத்தில் தலையிடுவதில்லை என்ற வாக்குறுதி வருமானால் ஒருவாறு பொறுப்புள்ள தேசிய அரசாங்கம் அமைந்துவிடும். இப்படிச் செய்யப் பிரிட்டிஷாருக்கு மனமில்லை. மனமற்ற சொற்கள் வைஸிராய் பேசியவை. யுத்தகாலத்தில் யாதொரு மாறுதலும் கிடையாது என்று மூடுமந்திரமில்லாமல் சொல்லியிருக்கலாம். பிரிட்டிஷ் ராஜதந்திர முறையில் இதையேதான் நீண்ட பிரசங்கத்தில் மழுப்பியிருக்கிறார்.

அட்டையை நீக்கக் கைகளும் கால்களும் ஏகோபித்து நடக்கவேண்டும். இவைகளை மனம் தூண்டவேண்டும். அப்பொழுது தான் அந்த உறிஞ்சும் பிராணி அகலும். இதைச் செய்யத்தான் ஸர் ஸாப்ரூவின் தலைமையில் கூடியுள்ள சமரஸக் கமிட்டி கிளம்பியுள்ளது. பாகிஸ்தான் ஆபரேஷன் வேண்டுமா வேண்டாமா என்பது நாம் தீர்த்துக்கொள்ளவேண்டிய பிரச்னை. வைஸிராய் அவர்களின் சிகிச்சை நமக்குத் தேவையில்லை.

சமரசக் கமிட்டி

ஸர் தேஜ் பகதூர் ஸாப்ருவின் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட சமரசக் கமிட்டி இந்திய நிலைமையில் ஒரு புரட்சிகரமான மாறுதலை உண்டுபண்ணக்கூடும் என்பதை யாரும் மறுக்க முடியாது. அக் கமிட்டியில் அங்கத்தினர்களாக அமைந்துள்ள அனைவரும் யாதொரு கட்சியுடனும் ஐக்கியமாகாதவர்கள். அப்படியே எக்கட்சியின்பாலாவது அவர்களுக்கு அதிகப் பற்று இருக்குமேயானாலும் அதைத் தள்ளிப் பொது விஷயத்தில் நியாயாதிபதிகள்போல் விஷயங்களைச் சீர்தூக்கி முடிவு கூறும் ஆற்றல் உடையவர்கள். தங்கள் விருப்பு வெறுப்புக்களைத் தாங்கள் கூறும் முடிவில் புகுத்த எண்ணமாட்டார்கள். இத்தகைய பொதுஜனக் கமிட்டி இதுவரை இந்திய அரசியல் விஷயங்களைத் தீர்த்து வைப்பதற்காக நிறுவப்பட்டதில்லை எனவே கூறலாம்.

நாட்டிலுள்ள பிரதமக் கட்சிகளுக்குள் தீவிர அபிப்பிராய பேதம் உள்ளது. இது நாடு முன்னேற்றமடைய முட்டுக்கட்டையாக அமைந்து விட்டது. அதுமட்டுமன்றி மக்களிடையே ஒருவருக்கொருவர் விரோத மனப்பான்மையை வளர்த்து வருகிறது. தலைவர்கள் சமரசத்திற்கு வர முயன்றார்கள்; ஆனால் சமரசம் ஏற்படவில்லை. மக்களிடையே ஓர் ஏக்கம் உண்டாகிவிட்டது. இதைப் பயன்படுத்திக்கொண்டு பிரிட்டிஷார் யதேச்சாதிகாரத்தை நீட்டித்து வருகிறார்கள். தங்கள் பிடியைத் தளர்த்தும் யோசனையைக்கூட அறவே விட்டுவிட்டார்கள் எனவும் தோன்றுகிறது.

இந் நிலையில்தான் இக் கட்சிகள் ஒன்றிலும் சம்பந்தப்படாத - நாட்டிலுள்ள - பிரபலஸ்தர்கள் அடங்கிய ஒருகமிட்டி, கட்சிகளுக்கிடையேயுள்ள வித்தியாசங்களைத் தீர்க்கக் கங்கணம் கட்டிக்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. நாடு ஒன்றுபட்டு, அடிமைத் தளையை அகற்ற முற்படவேண்டுமென ஆர்வம்கொண்ட எந்தத் தேசாபிமானியும் இக் கமிட்டியின் முயற்சிக்கு ஆதரவளிக்காமல் இருக்கமுடியாது.

இப்பொழுது நாட்டிலுள்ள சீர்கேடான நிலைமையைக் கட்சியில்லா மஹாநாட்டின் நிரந்தரக் கமிட்டி வெகு தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது.

பல மாகாணங்களில் மந்திரி சபைகள் ராஜீநாமா செய்ததை வியாஜமாகக் கொண்டு கவர்னர்களின் யதேச்சாதிகாரம் சென்ற ஐந்து வருடங்களாகத் தலைவிரித்தாடி வருகிறது. புதிய வரிகள் வசூல், கேள்விமுறையற்ற செலவுகள், மக்களின் பிரதிநிதி சபைகள் கூடாதிருத்தல், இவை சில உதாரணங்கள். வருங்காலதிட்டங்கள் என்று சொல்லப்பட்டுக் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டும் வருகின்றன. கல்வி, போக்குவரத்துச் சாதனங்கள், சுகாதார வசதிகள் இவைகளை விஸ்தரிக்கத் திட்டங்கள் போடப்படுகின்றன. ஆனால் மக்களையோ அவர்களின் பிரதிநிதிகளையோ கலப்பதில்லை. கவர்மெண்டு தாஸர்களடங்கிய ஆலோசனைச் சபையில் தீர்மானிக்கிறார்கள். சீமையிலிருந்து புதிய புதிய வெள்ளையர்கள் வரவழைக்கப்படுகிறார்கள். ஸிவில் உத்யோகங்களுக்கு ராணுவ ஆபீஸர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

யுத்த முடிவில் இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்கப்படும் என்று வாக்குறுதி கொடுத்திருக்கையில் இந்தியன் ஸிவில் ஸர்விஸுக்கும் இந்தியன் போலீஸ் உத்யோகங்களுக்கும் வெள்ளையர்களைப் பழைய நிபந்தனை, பென்ஷன் முதலிய பந்தோபஸ்துகள் உள்பட லண்டனிலுள்ள செகரடரி ஆப் ஸ்டேட் நியமித்து வருகிறார். ராணுவத்தில் இந்திய ஆபீஸர்கள் பிரக்யாதி அடைந்து இருக்கிறார்களல்லவா? அவர்களை ஏனோ ஸிவில் உத்யோகங்களுக்கு ஏற்பதில்லை? வெள்ளையர்களுக்குத்தான் எல்லா யோகமும்.

இதற்கெல்லாம் முடிவு உண்டா? யுத்தம் சீக்கிரம் முடியுமா என்றாலோ அதை ஒருவராலும் நிச்சயமாகக் கூறமுடியவில்லை.

இந்தப் பெருத்த அநீதிகளை உடனே நிறுத்தவேண்டுமென்று கட்சியற்ற மஹாநாட்டின் நிரந்தரக்கமிட்டி வற்புறுத்தியிருக்கிறது.

தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டுக்கிடக்கிறார்களல்லவா? இதற்குச் சட்டரீதியாக ஆதாரமில்லை என்றும் நாட்டின் நிலைமை மாறிவிட்டது என்றும் எடுத்துக்காட்டி, அவர்களை உடனே விடுவிக்கவேண்டுமென்றும் அப்படிச் செய்தால் நாட்டில் ஒரு புத்துணர்ச்சி ஏற்படுமென்றும் எடுத்துக்காட்டியிருக்கிறது.

பிரிட்டிஷ் கவர்மெண்டார் மத்திய அரசாங்கத்தைப் பொறுப்புள்ளதாக மாற்றுவதில் யாதொரு முயற்சியும் மேற்கொள்ளவில்லையே என வருந்தி, இப்பொழுது இருக்கும் சட்ட வரம்பிற்குள்ளேயே அதைத் தேசீய அரசாங்கமாகச் செய்யக்கூடும் என்பதை வலியுறுத்தியிருக்கிறது.

மாகாண சட்டசபை அங்கத்தினர்கள் தங்களாலானவரை மாகாணங்களில் பொறுப்புள்ள இந்திய ஆட்சி ஏற்படுமாறு செய்ய வேண்டுமென்றும் அக்கமிட்டி கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த அரசியல் நிலையை எப்படி ரத்து செய்வது? முதலில் கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள வித்யாஸங்களை அகற்றவேண்டும். இது மிகவும் கடினமான காரியம். இதை நன்கு உணர்ந்து நாட்டிலுள்ள பிரபலஸ்தர்களில் நடுநிலைமை வகிக்கக்கூடியவர்களும் கட்சிக் கலப்பில்லாதவர்களுமானவர்களைப் பொறுக்கி இத்தொண்டில் ஈடுபடுத்தியிருக்கிறார் ஸர் ஸாப்ரூ.

இதில் சமரசக் கமிட்டியார் வெற்றி பெறுவார்களானால், இந்தியாவின் சரித்திரத்தில் ஒரு பெரிய ஸ்தானத்தை அவர்கள் எய்துவார்கள் என்பதில் சந்தேகமில்லை. அதற்குக் கட்சித் தலைவர்களின் ஒத்துழைப்பும், மக்களின் ஆசியும்தான் தேவை. இவை இரண்டும் அவர்களுக்குக் கிட்டும் எனவும் அவர்கள் நாட்டிலுள்ள கட்சிகளுக்குள் ஒரு நிரந்தரமான சமாதானத்தைத் தேடிவைப்பார்கள் எனவும் எதிர்பார்க்கிறோம்.

இப்பீடிகைகளிலிருந்து ஸர் ஸாப்ரூவின் சகபாடிகள் நாட்டின் நிலையை நன்கு உணர்ந்திருக்கிறார்களென்பது தெளிவாகிறது. அவர்களது நோக்கம் மிக உயர்வானது என்பதில் யாதொரு ஐயமுமிருக்க இடமில்லை.

முகப்புப் படம்

ஸர் ஸி. பியின் உருவப்படம் நமது முகப்பை அலங்கரிக்கிறது.

ஸ்ரீ தியாகப்ரம்ம உத்ஸவத்தை இவ்வருடம் திருவையாற்றில் திறந்துவைக்கும் பாக்கியம் ஸர் ஸி. பி. அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. சங்கீத சம்பந்தமாகத் திறப்பு விழாவில் அவர் நிகழ்த்தவிருக்கும் அரிய கருத்துக்களை ஆவலுடன் எதிர்பார்ப்போம்.

ஸ்ரீ தியாகப்ரம்ம உத்ஸவம் இவ்வருஷம் மிகச்சிறப்பாக நடைபெறும் என்று அறிகிறோம். உதவிக்காரியதரிசியான சந்துரு அவர்கள் பெருமுயற்சி எடுத்து வருகிறார் என்பதைச்சந்தோஷத்துடன் இங்கேகுறிப்பிடுகிறோம். அனைவரும் திரள்திரளாக உத்ஸவத்தில் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கிறோம்.

ஸர் ஸி. பி. அவர்கள் வருகையை முன்னிட்டு, தஞ்சை ஜில்லா பிரபல மிராசுதார்கள், மேட்டூர் திட்டத்தை ஏற்படுத்தி இந்த ஜில்லாவின் பல பாகங்களைச் செழிப்புறச் செய்த அப்பேரறிவாளருக்கு ஒரு பெரிய விருந்து அளிப்பதுடன் 'ஒரு ஞாபகார்த்தப் பரிசும்' வழங்குவார்கள் என்று தெரிகிறது. இச்செயலை அனைவரும் ஆதரிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

ஜீவசத்துக்களை (விட்டமின்) புழக்கடைத் தோட்டத்தில் உற்பத்தி செய்யுங்கள்!

நல்ல ஜாதி நாட்டுக் காய்கறி விதைகள்

20 பாக்கெட்டுகள் ரூ. 2—8—0

முன் பணம் அனுப்பினால் தபால் செலவு இல்லை.

இன்னும் விதவிதமான ஜாதி ஒட்டு மா, எலுமிச்சை, நார்த்தை, சபோடா, ரோஸ் க்ரோடன்ஸ் முதலிய பழ, புஷ்பச்செடி தினுசுகள்

விபரங்களுக்கு

சீனிவாஸா கார்டன்ஸ்

கடலங்குடி

நாச்சியார்கோவில் வழி, (கும்பகோணம்.)

கதம்பம்

கேலிக்கூத்து !

"இழுத்துவைத்து மாரடித்தல்" என்று சொல்வார்கள்! பிரிட்டனும் அமெரிக்காவும் தங்கள் சுய லாபத்தை உத்தேசித்து ஏதாவது மகாநாடு கூட்டினால் அதற்கு இந்தியப் பிரதிநிதியென ஒருவர் அனுப்பப்பட்டு, பட்டை நாமம் சாத்தப்படுவது வழக்கமாகிவிட்டது!

அகில உலக வியாபாரிகள் மகாநாடென அமெரிக்காவில் ஒரு திருக்கூட்டம் நடைபெற்றது. முக்கியமாகப் பங்கெடுத்துக்கொண்டவை பிரிட்டனும், அமெரிக்காவும். உலகத்திலுள்ள மூலப் பொருள்களை எவ்வாறு லாபகரமாகப் பங்குபோட்டுக்கொள்வது, உலக வியாபாரத்தில் எவ்விதம் போட்டி போடுவது இவைபோன்ற முக்கிய விஷயங்களைப்பற்றிப் பிரிட்டனும் அமெரிக்காவும் முடிவுகட்டின. பெரிய வல்லரசுகள் திட்டம் போட்டால் அது, மற்றத் தேசங்களை, முதலாவதாக அடிமை நாடுகளை, பெரிதும் பாதிக்குமென்பது சொல்லாமலே விளங்கும்.

இந்தியப் பிரதிநிதியாக வந்திருந்த அப்துல் ரஹ்மான் சித்திக் என்பவருக்கு அவமானம் தாங்க முடியவில்லை. அவர் இருப்பதையே மறந்து காரியங்கள் நடைபெற்றன. "எனது நாட்டின் வியாபார அபிவிருத்தி சம்பந்தமாகச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்" என்றார். தலைவர் காரியவாதி. "மகாநாட்டு நடவடிக்கைகள் முடிவடைந்துவிட்டன, தாராளமாகத் தோன்றியதைச் சொல்லுங்கள்" என்று பேச்சுச் சுதந்தரத்தைக் காக்கும் வீரராகக் கிளம்பிவிட்டார். இந்தியப் பிரதிநிதி அங்கே பேசியும் யாதொன்றும் பயனில்லை என்பதைக்கண்டு வெளியேவந்து ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்!

"இந்திய நோக்கத்திற்கும் பிரிட்டிஷ் அமெரிக்க நோக்கங்களுக்கும் அடிப்படையான வித்தியாசங்கள் இருக்கின்றன. வலுவுள்ளதும் செல்வம் செழித்துள்ளதுமான தேசங்கள் பலஹீனமடைந்துள்ள கோடிக்கணக்கான ஐரோப்பிய, ஆசிய மக்களின் நலத்தை அறவே புறக்கணிப்பது அடாது! "உலக நன்மை" என்று பிரிட்டன், அமெரிக்கா சொல்வதெல்லாம் குறுகிய பொருள்படும்படி செய்வது நேர்மையல்ல. மற்ற நாடுகளின்மூலம் பொருள்களைச் சுரண்டமட்டும் நினைப்பது நியாயம் அன்று. மகாநாட்டில் பிரிட்டன் அமெரிக்கா இவைகளது சுயநலமே தாண்டவமாடிற்று"

இந்த உண்மையை உணர ஆயிரக் கணக்கான மைல்கள் கடந்து செல்லவேண்டுமா? எல்லாம் கேலிக்கூத்து!

"நீலத்திட்டம்" (Blue Print)

"அனுமாரே! உமது கிருபையால் பத்து லக்ஷ ரூபாய் சம்பந்தப்பட்ட வழக்கு எனக்கு வெற்றிகரமாக முடியட்டும், உமக்கு வடைமாலை சாத்தி, அரையணாவுக்குப் புஷ்பம்வாங்குகிறேன்; காலணாவுக்குக் கர்ப்பூரமும் உமக்குக் காட்டுகிறேன்." இவ்விதமாக ஒரு லோபி வேண்டிக்கொண்டானாம். இந்தக் கதையாகத் தானிருக்கிறது பிரிட்டிஷ் கான்ஸர்வேடிவ் கட்சியார் பர்மா சுதந்திர விஷயமாய் வெளியிட்டிருக்கும் திட்டம் (Blue Print).

பர்மாவுக்குச் சிபார்சு செய்யப்படும் சுதந்திர திட்டத்தைக் கவனிப்போம்.

ஜப்பானைத் தோற்கடித்துப் பர்மாவை மீட்ட பிறகு:—

(1) ஆறு வருஷங்கள் சென்றபின் பர்மாவுக்கு ஒருவிதமான குடியேற்ற நாட்டு அந்தஸ்து அளிக்கப்படும் என வாக்குறுதி அளித்தல்.

ஆனால் பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம் இவைகளைப் பிரிட்டனே கவனித்துக்கொள்ளும்.

(2) விமான நிலயங்கள், கடற்கரைத் தளங்கள், மற்றும் அவசிய ராணுவத்தைப் பற்றியவை இவைகளைப் பிரிட்டன் தன் ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ளும்.

(3) இந்த ஆறு வருஷ காலத்தில் கவர்னரே சர்வாதிகாரம் வகித்து, சுய ஆட்சி முறைமையில் மக்களைத் தயார் செய்வார்!

(4) அதற்குப் பிறகு பிரிட்டனின் வியாபார விஷயமாய் ஓர் உடன்படிக்கையில் பர்மா கையெழுத்துப் போடவேண்டியது! பிரிட்டிஷ் வியாபார சம்பந்தமாய்ப் போதிய தற்காப்புக்கள் வேண்டும்.

(5) மற்றப்படி விவசாயிகளுக்கு அதிக உரிமை, சட்ட சபைகளில் பேச்சு உரிமை, இன்னும் பிரிட்டனைப் பாதிக்காத முறையில் சகல உரிமைகளும் புதிய பர்மாவுக்கு உண்டு!

இத் திட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு சென்ற வாரம் பார்லிமெண்டில் சில கான்ஸர்வேடிவ் கட்சியினர் பர்மாவுக்கு இத்தகைய சுதந்திரமளிப்பதாக வாக்குறுதி அளித்துவிட வேண்டும் என வற்புறுத்திப் பேசினர்.

ஆறு வருடங்களுக்குப் பின் அளிப்போம் என வாக்குக் கொடுத்தால் பர்மியர்கள் பிரிட்டனை நம்பி, பர்மாவை ஜப்பானியர்களிடமிருந்து மீட்க உதவிபுரிவார்கள். பிரிட்டிஷ் கவர்மெண்டார் தங்கள் நோக்கத்தை உடனே வெளியிட வேண்டும் என்று எடுத்துக் கூறினர்கள்.

ஆனல் அமெரி துரை இதற்கும் தயாராயில்லை. விஷயத்தைச் சாதுர்யமாக மழுப்பிவிட்டார். நிலைமை சீர்திருந்தினல் கூடிய சீக்கிரத்தில் பர்மா பூர்ண சுயஆட்சி அடைவதற்குப் பிரிட்டன் உதவி அளிக்கும் என்று மட்டுமே அவரால் சொல்ல முடிந்தது. இன்றுள்ள நிலையில் அதற்குமேல் ஒன்றும் சொல்ல முடியாது எனக் கூறிவிட்டார்.

பர்மாவின் அதிருஷ்டமே அதிருஷ்டம்!

பிரிட்டனின் இந்த உறுதிமொழியில் பர்மியர்கள் மோகங்கொண்டு, அப்படியே சொக்கி, அறிவிழந்து, பிரிட்டன் பர்மாவை மீட்பதற்கு உதவிசெய்ய ஓடோடி வருவார்களல்லவா?

நரையை ஒழியுங்கள்!

நரை எவ்வளவு முதிர்ந்ததாக இருந்தாலும் கேசத்திற்கு முன்போல் நிரந்தரமாகக் கருமை அளிப்பதில் **விவலேன் ஹேர் ஆயில்** நிகரற்றது. சென்ற 10 வருஷங்களாகப் பிராபல்யத்துடன் இருந்து வருகிறது. பெரிய பாட்டில் ரூ. 3/4. சிறிய பாட்டில் ரூ. 2/- முழு சிகிச்சைக்குத் தேவையான 3 பாட்டில்கள் வாங்கினல் தபால் செலவு இனம்.

ஏஜண்டுகள்: **அப்பா & கோ.,**

கெமிஸ்ட்ஸ், எஸ்ப்ளனேட், மதராஸ்.

பிறவிக் குருட்டைத் தவிர

கேடரைன்

மற்றெல்லாக் கண் உபாதைகளையும் மாயமாக நிவர்த்திக்க வல்லது. கண்ணுடி போடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். கேடரைன் உபயோகித்து மீண்டும் யதாப் பிரகாரம் கண் பார்வையைப் பெறுங்கள். கண் படலத்திற்கு (Cataract) உத்தரவாதத்துடன் கூடிய நிர்ப்பயமான சிகிச்சை. ரூ. 2/.

ஏஜண்ட்ஸ்: **அப்பா & கோ.,** கெமிஸ்ட்ஸ்,

286, சைனு பஜார் ரோட், மதராஸ்.

பர்மாவின் ஒத்துழைப்பை அலட்சியம் செய்ததினுலேயே பர்மா இழக்கப்பட்டது. அந்தத் தவறுதலையே மீட்பதிலும் கைக்கொள்ளத் துணிவது என்ன அறிவீனம்!

பொம்மலாட்டம்.

பெயரளவில்தான் சுய ஆட்சி ஸ்தாபனங்கள்; உண்மையில் அவை கவர்மெண்டார் ஆட்டிவைக்கும் பொம்மைகளே. கவர்மெண்டார் இழுக்கும் கயிறு மென்னியைத் திருகினும் வாய்விட்டுக் கதறவும் தைரியமற்றுவிட்டது நமது ஸ்தல ஸ்தாபன அங்கத்தினர்களுக்கு. இவர்களது மனப்பான்மையை நன்கு கண்டுகொண்டார்கள் கவர்மெண்டார். அவர்கள் இஷ்டப்படி இவர்களை நடிக்கச் செய்கிருர்கள். தேசியக்கொடியை நாட்டக் கூடாது, தேசியத் தலைவர்களின் படங்களை மாட்டக்கூடாது என்ற பல உத்தரவுகள் இடப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர உள் நிர்வாக விஷயங்கள் ஒவ்வொன்றிலும் கவர்மெண்டு உத்தரவின்படிதான் நடக்கவேண்டுமென்ற கட்டுப்பாடு.

எதைச் சொன்னுலும் தலையாட்டிக்கொண்டு வருகிருர்கள் நமது கவுன்ஸிலர்கள். இவர்களுக்கெல்லாம் கொஞ்சம் சொரணை உண்டாகும்படி சென்னை கார்ப்பரேஷனைச் சேர்ந்த மிஸ்டர் தியபால்ட் என்றவர் நடந்துகொண்டிருக்கிருர். ஸ்டான்லி பிரிட்ஜின் கண்காணிப்பைச் சென்னைக் கார்பரேஷன் ஏற்றுக் கொள்ளமுடியாது என்று சொல்லிற்று. ஆனல் கவர்மெண்டார் அதை வற்புறுத்தினர்கள். இப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாவிடில் கவர்மெண்டார் யாதொரு பொருள் உதவியும் கார்பரேஷனுக்கு அளிக்கமாட்டார்களெனத் தெரியப்படுத்தவே, கார்பரேஷன் கவுன்ஸிலர்கள் பிரிட்ஜைத் தாங்களே நிர்வகித்துவர ஒப்புக்கொண்டார்கள்.

"இப்படிப் பயமுறுத்தி இணங்கச்செய்வது ஸ்தலஸ்தாபனங்களின் சுய ஆட்சியைக் கேலிக்கூத்தாக அடிப்பதாகிறது; தப்பிதம் செய்யக்கூட ஸ்தல ஸ்தாபனங்களுக்கு உரிமை வேண்டும்" என்று கூறிக் கவர்மெண்டாரின் செய்கையைக் கண்டித்து, தியபால்ட் அவர்கள் தம் பதவியை ராஜினுமா செய்திருக்கிருர். மற்ற அங்கத்தினர்கள் அநீதியான உத்தரவுகள் பிறக்கும் பொழுதாவது இத்தகைய உணர்ச்சியைக் காட்டுவார்களானல் கவர்மெண்டார் கொஞ்சம் திருந்தி, அதிகமாகத் தலையிடுவதை நிறுத்திக்கொள்வார்கள். காவல் கைதிகளாகவுள்ள தலைவர்களின் படங்களையோ சிலைகளையோ ஸ்தலஸ்தாபனங்களில் திறந்து வைக்கக்கூடாது என்ற உத்தரவைக் கவர்மெண்டார் பிறப்பித்துள்ளார்கள். இது சென்னை கார்பரேஷன் கவுன்ஸிலில் சமீபத்தில் விவாதத்திற்கு வந்தது. சிலர் இதை ஆக்ஷேபிக்கவேண்டுமென்று வாதாடினர்கள். ஆனல் முடிவில் அந்த உத்தரவை மறுப்

றிப் பதிவு செய்துகொண்டார்கள். அந்தோ என்ன தேசாபிமானம்! இதுதான் இந்தக் கவுன்ஸிலர்களின் வீரியம்போலும்!

தியபால்டு என்ற வெள்ளையரின் உணர்ச்சி இவர்களுக்கு ஏன் ஏற்படவில்லை? அடிமை மனப்பான்மை ரத்தத்தில் ஊறிவிட்டது. என்ன பரிதாபம்!

என்று முடியும்?

யுத்தம் என்று முடியும்? இப்பிரச்னை உலக முழுதிலும் கேட்கப்படுகிறது. ஐரோப்பிய யுத்தம் இன்னும் கொஞ்ச காலம் நீடிக்கலாம் என்று அபிப்பிராயப்படுகிறார் ஸ்மட்ஸ் துரை. அமெரிக்காவில் யுத்தம் தற்போது முடியப்போவதில்லை என்ற நம்பிக்கையினால் ஷேர் பத்திரங்களின் மதிப்பு அதிகரித்துக்கொண்டே வருகின்றனவாம். அமெரிக்க அரசாங்கத்தாரும் யுத்தம் நெடுநாள் நீடிக்கலாம் என்று பிரசாரம் செய்யத் தொடங்கி விட்டார்களாம். ஜர்மானியர்கள் மனக்குழப்பத்துடன் இருக்கிறார்கள், ஆகையினால் எதிர்ப்பே ஓய்ந்து விடும் என்று எதிர்பார்த்ததெல்லாம் பொய்யாய்விட்டது.

ஐரோப்பிய யுத்தம் ஓய்வதைப்பற்றியே நிச்சயமாகக் கூறமுடியாத நிலையில் ஜப்பானிய யுத்தம் என்று ஓயும் என்று யாரால் சொல்ல முடியும்? 1945-௵ முடிவதற்குள் ஐரோப்பிய யுத்தம் முடிந்து விடுகிறது என்று வைத்துக்கொள்வோம்; அதன் பிறகு குறைந்தது இரண்டு வருடங்களாவது ஜப்பானிய யுத்தம் நீடிக்கலாம் என்று சொல்லுகிறார்கள்.

ஜப்பானியர்களின் தந்திரத்தையோ பலத்தையோ முழுதும் உணர்ந்தவர்களில்லை. ஏககாலத்தில் நேருக்கு நேர் விரோதமாகப் பிரசாரம் நடந்து வருகிறது. ஜப்பானியர்களின் பலம் மிகவும் குன்றிவிட்டது என்று பத்திரிகைகளில் வெளியாகின்றன. அடுத்த நாள் அவர்கள் பலத்தைக் குறைத்து மதிப்பிடுவது மதியீனம், அவர்கள் விமான பலத்தைக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று ஒரு ராணுவ அதிகாரி கூறுகிறார்.

அமெரிக்கப் படைகள் லேய்டி தீவில் ஜப்பானியர்களை முறியடித்ததாகச் செய்திகள் வந்தன. அமெரிக்கப் படைகள் அங்கே புகுந்து சுமார் இரண்டு மாதங்கள் ஆகின்றன. இன்னும் அங்கே சண்டை நடப்பதாகவே தெரிகிறது. மார்ஷல் சியாங் கே ஷேக்கின் தலைமையில் சீனப்படைகள் ஜப்பானியர்களைப் புறங்காட்டி ஓடச் செய்து வருகின்றன என்று மனமகிழ்ந்தோம். ஆனால் இப்பொழுது வரும் செய்தியில் சைனாவின் கதி அதோகதியாகிவிடுமோ என்று சந்தேகிக்கவேண்டி வருகிறது. அமெரிக்க உதவி சைனாவுக்கு அபாரம் என்று சொல்லப்பட்டது. இதெல்லாம் உண்மையா என்ற சந்தேகம் தோன்றுகிறது.

எல்லா விஷயங்களையும் ஆராய்ந்து பார்த்தால் இந்தியாவுக்கு இன்னும் குறைந்தது மூன்று வருட யுத்த நிலை இருக்கிறது என்று தோன்றுகிறது.

இந்திய மக்களின் இன்றைய நிலை மிகவும் மோசமாயிருக்கையில் இன்னும் எவ்வளவு நாளைக்குத்தான் அவர்களால் இதைச் சமாளிக்க முடியும் என்று சொல்ல முடியவில்லை. வைஸிராய் வேவல் அவர்கள் யுத்தத்தினால் இந்தியா பலமடைந்திருக்கிறது என்று கூறுகிறார். ஆனால் பிரதம தளபதி ஸர் ஆகின் லெக் இந்திய மக்கள் இந்த யுத்தத்தினால் மிகவும் பீடிக்கப்பட்டுள்ளார்கள், அவர்களின் தியாகம் சொல்லத் தரமன்று என்று இந்தியா முழுமையும் சுற்றிப்பார்த்துவிட்டுக் கூறியிருக்கிறார். சாதாரண மனிதன்கூட தன்னை அறியாமலேயே இந்நாட்டில் யுத்தத்தின் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளான் என்பதை எடுத்துக் கூறியிருக்கிறார். ஜப்பானிய யுத்தம் தீவிரமாக நடத்தப்படுமானால் இந்திய மக்களின் கஷ்டம் அதிகரிக்கும்.

இப்பொழுதே பசிப்பிணியின் கொடுமையினால் மக்கள் மடிகிறார்கள். இன்னும் ஜப்பானிய யுத்தம் காரணமாக நாட்டின் பொருள்களைச் சுரண்டினால் பெருத்த அபாயம் ஏற்படுவது திண்ணம்.

இதைத் தடுத்து மக்களைக் காப்பதற்கு ஒரே வழிதான் உண்டு. அதுதான் தேசிய அரசாங்கம் அமைப்பது. இது இன்று ஸோல்ஜர் வைஸிராய் மூளையில் ஏறவில்லை என்பது ஆச்சரியப்படக் கூடிய விஷயமன்று. ஆனால் பொதுமக்கள் மட்டும் தங்களாலியன்றவரையில் ஜாக்கிரதையாக இருந்து வரவேண்டியது அவசியம்.

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற குழந்தைகளின்

டானிக்

ரேடியோ ஸர்விஸிங்
ஸினிமா தியேட்டர் ஸர்விஸிங்
பொதுக்கூட்டங்களில் ஒலிபெருக்க ஏற்பாடு
இதர எல்லா ஒலிபெருக்கி ஏற்பாடுகளும் செவ்வனே செய்யப்படும்.

ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள்
எழுதுவதைக் கவனியுங்கள்

6—1—44ல் கும்பகோணம் வாணி விலாஸ ஸபையில் நடந்த தியாகபிரும்ம உத்ஸவ ஸீரிஸில் எனது கச்சேரிக்கு அமைக்கப்பட்டிருந்த கும்பகோணம் "ஸவுண்ட் ஸர்விஸாரின்" ஒலிபெருக்கி செட்டுக்கள் நவீனமாயிருப்பதுடன் எனக்கும் பொது ஜனங்களுக்கும் மிகுந்த திருப்தியை அளித்தன.

கான மந்திர், கொடுமுடி.
7—1—44.

K. B. சுந்தராம்பாள்

ஸவுண்ட் ஸர்விஸ்

டவுன் ஹைஸ்கூல் ரோடு :: கும்பகோணம்

திருப்தி நிச்சயம்

நாகரிகம் வாய்ந்த நவீன கலர்களில் சாயத்திற்கும் உறுதிக்கும் உழைக்கக்கூடிய கொள்ளேகாலம் முறுக்குப் பட்டில் எங்களுக்கென்றே ஸ்பெஷலாகத் தயாராகிவரும் 19, 18, 16, 12 முழங்களில் சேலைகளும் பலவூர் புதுமாதிரியான நூல் சேலைகளும் நவீன பார்டர்களுடன் எப்பொழுதும் விலை நயமாகக் கிடைக்கும்.

V. N. சுப்பிரமணிய அய்யர்
ஜவுளி வியாபாரம் "மணி பவனம்"
பெரிய தெரு — கும்பகோணம்
பிராஞ்சு: 227, ராஜவீதி, கோயமுத்தூர்.

★

சென்னை நகரில்
நமது ஸோல் ஏஜண்டு
சுதேசமித்திரன்
புத்தகசாலை
மவுண்ட் ரோடு, மதராஸ்.

பிரதிகள் வேண்டுவோர் இவர்களிடமிருந்தோ அவர்கள் ஸப் ஏஜண்டுகளிடமிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

★

புது யுகத் திட்டங்கள்

க. சந்தானம்

சண்டை முடிந்ததும் இந்தியாவில் ஓர் புது யுகம் சிருஷ்டி செய்வதற்காகப் பல கோஷ்டிகள் திட்டங்கள் போட்டுக் கொண்டிருக்கின்றன. அவைகளுக்குள் மூன்று கோஷ்டிகள் முக்கியமாகக் கவனிக்கத் தக்கவை. இந்திய சர்க்கார் சென்ற இருநூறு வருஷங்களாகத் தாங்கள் செய்யாத காரியங்களை எல்லாம் இப்பொழுது செய்துவிடுவதாகத் தீர்மானம் செய்திருக்கின்றனர். ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்து விவசாயத்தை சாஸ்திரீய முறையில் புதுப்பிக்கப் போவதாக விளம்பரம் செய்திருக்கின்றனர். நாற்பது வருஷங்களில் இந்திய மக்களனைவருக்கும் கல்விபயில்வித்து, இந்நாட்டில் நிரக்ஷரகுக்ஷிகளே இல்லாமல் செய்துவிடப்போகிறார்களாம். 500 கோடி ரூபாய்களுக்கு ரோட்டுகள், 400 கோடிக்குப் புதிய ரயில் வசதிகள், மற்றும் பல துறைகளில் நூற்றுக்கணக்கான கோடிகள் செலவழித்துச் சீர்திருத்தத் திட்டம் போட்டு, அதற்காகத் தனி இலாகாவை நிர்மாணித்து அதன் தலைவராக ஓர் பிரபல இந்தியரை நியமித்திருக்கிறார்கள். இந்நிலைமையில் இந்தியாவுக்குச் சுதந்திர மளித்துவிட்டால் ஏழை இந்தியரின் நிலைமை என்னவாகுமோவென்று இங்கிலாந்தில் அமெரி கூட்டத்தாருக்கும் இந்தியாவில் வைசிராய் முதலிய பெரிய உத்தியோகஸ்தர்களுக்கும் தீராக் கவலை தோன்றியிருக்கிறது. கிரிப்ஸ் தூது சமயத்தில் வாக்களித்ததை மறுக்க விரும்பவில்லை. ஆனால் இந்தியாவை ஏழையாகவும், உலகத்திலேயே கல்வியற்ற பிற்போக்கான நாடாகவும் விட்டுப்போகவும் விரும்பவில்லை. அப்படிச் செய்தால் சரித்திரத்தில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைப் பற்றி அவதூறாக எழுதமாட்டார்களா? இந்தத் தர்ம சங்கடத்தில் இந்தியர்களே பிரிட்டிஷாரின் மானத்தைக் காப்பாற்றுவார்களென்று எதிர்பார்க்கிறார்கள். அவர்களுக்குதவி செய்யச் சில கூட்டத்தார்களும் இங்கு இருக்கிறார்கள். முஸ்லிம்களுக்குச் சுய நிர்ணய உரிமை கொடுப்பதைக் காட்டிலும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ் ஒற்றுமையே மேலென்று டாக்டர் மூஞ்சே முதலியவர்களும், சீனிவாச சாஸ்திரி சார்பார்களும் வாதிக்கின்றனர். பாகிஸ்தானில்லாவிட்டால் ஹிந்துஸ்தானத்தைவிட பிரிட்டிஷ் ஸ்தானமே இருக்கலாமென்று சில முஸ்லிம் கோஷ்டிகள் பிடிவாதம் செய்கின்றன. இவர்கள் ஒத்துப்போனாலும் நமது சூரிய, சந்திர வம்ச ராஜாக்கள், ஆதி திராவிடர்கள் மற்றும் பல சாரார்கள் அன்னிய ஆட்சிக்கு ஆதாரமளிக்கத் தயாராயிருக்கின்றனர். இந்த நிலை பிரிட்டிஷ் சாம்ராஜ்ய வாதிகளுக்கு மிகவும் சாதகமாகவுள்ளது. இவர்களையும், புது யுகத் திட்டங்களையும் கொண்டு சுயராஜ்யக் கிளர்ச்சியைத் தோற்கடித்துவிட்டால், பிறகு பொருளாதாரத் திட்டங்கள் அடுத்த யுத்தம் வரையில் பெட்டியில் அடக்கம் செய்யப்பட்டுவிடும். சண்டைக்காக நோட்டுக்களை அச்சடித்து வழங்குவது இன்றியமையாதது. அவற்றை மீட்க வேண்டிய காலத்தில் கல்விக்கும், சுகாதாரத்திற்கும், விவசாயத்திற்கும் ஓர் அன்னிய அரசாங்கம் பணம் தேடும் என்று எதிர்பார்ப்பவர்கள் பரம சாதுக்களாக இருக்க வேண்டும்.

இந்தியாவின் பெரிய முதலாளிகளில் சிலர் சேர்ந்து ஓர் திட்டம் போட்டிருக்கின்றனர். இது 'பம்பாய் திட்டம்' என்று பிரசித்தி பெற்றிருக்கிறது. பதினைந்து வருஷ காலத்திற்குள் இந்தியாவின் மொத்த வருமானத்தை மூன்று மடங்காக்க வேண்டுமென்றும், அதற்காகப் பதினாயிரம் கோடி முதல் போட வேண்டுமென்றும் அதில் காணப்பட்டிருக்கிறது. கல்வி, சுகாதாரம், விவசாயம் எல்லாவற்றிற்கும் நியாயமான ஏற்பாடுகள் செய்ய வழிகாட்டப்பட்டிருக்கிறது. ஆனால் யார் முதல் போடுவது, அதையார் நிர்வகிப்பது, வருமானத்தை எப்படிப் பங்கிட்டுக் கொள்வது என்னும் முக்கிய விஷயங்களெல்லாம் அதில் காணப்படவில்லை. அவற்றைப்பற்றிச் சீக்கிரம் விவாதங்கள் தயார் செய்து பிரசுரம் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் தயார் செய்தவர்களில் ஒருவரான ஸ்ரீ தலால் இந்திய சர்க்காரின் புது யுக இலாகாவின் தலைவராகிவிட்டார். இந்திய முதலாளிகளைத் தம் வசப்படுத்தி, பிரிட்டிஷ் முதலாளிகளோடு பங்காளிகளாகச் செய்துவிட வேண்டுமென்பது பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் நோக்க மென்பதில் சந்தேகமில்லை. எல்லா இந்திய முதலாளிகளும் இதற்கு உடன்பட மாட்டார்கள். ஆனால் நமது முதலாளி வர்க்கம் அரசியல் கக்ஷிகளைப்போல் பிளவு பட்டுவிடக் கூடும்.

இந்தியப் பொருளாதாரச் சாஸ்திரிகளும் புது யுகத் திட்டங்கள் போடுவதில் மும்முரமாக முனைந்திருக்கிறார்கள். இந்த யுத்தத்தால் அவர்களுக்கு மிக்க கௌரவமேற்பட்டிருக்கிறது. பெரிய சர்க்கார் உத்தியோகங்கள் கிடைத்துவருகின்றன. பத்திரிகைகளிலும் அவர்களுடைய செல்வாக்கு ஓங்கி வருகின்றது. பண்டைக் காலத்திய குக்கிராம நாகரிகமுள்ள பாரத தேசத்தை ருஷியாவைப்போல் துரிதமாக ஓர் நவீன நாடாக்கி, இயந்திரத் தொழிலிலும், செல்வத்திலும், போக சாதனங்களிலும் முன்னணியில் நிற்கும்படி செய்யவேண்டுமென்பதில் இவர்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கின்றனர். ஆனால் திட்டங்கள் வகுக்கப் புகும்பொழுது பலத்த வித்தியாசங்கள் தோன்றுகின்றன. முதலாளித் தத்துவத்தை முழுதும் அனுசரிக்க முடியாது. கார்ல் மார்க்ஸின் பொதுவுடைமைக் கொள்கையையும் இவர்கள் ஏற்பதில்லை. அது அவர்கள் படித்திருக்கும் பொருளாதார சாஸ்திரத்திற்கு விரோதமாக இருப்பதுமன்றி, அரசியல் முறையில் அபாயமானது. முதலாளித் தத்துவத்திற்கும் பொது உடைமை வழிக்குமுள்ள முரண்பாடுகளை ஒரு வழிப்படுத்துவதே இவர்களுடைய முக்கிய வேலையாக இருக்கிறது. ஆனால் அது நாய் வாலைப்போல் வளைந்த வண்ணமாக இருக்கிறது.

இந்த மூன்று கோஷ்டிகளுக்குள் பெரிய வித்தியாசங்கள் இருந்தபோதிலும், இவர்களுடைய திட்டங்களுக்கெல்லாம் ஒரு பொதுக் கொள்கை அடிப்படையானது. அதாவது, இந்திய மகாஜனங்கள் தாங்கள் செய்ய வேண்டியதொன்றுமில்லை. சர்க்கார் திட்டத்தில் இவர்கள் மாப்பிள்ளைகளைப்போல் மௌனமாக உட்கார்ந்து கொண்டு அவர்களுக்குச் சரமாரியாய்ப் பொழியப்படும் பரிசுகளை மலர் முகத்துடன் ஏற்றுக்கொள்ள வேண்டிய கடமை ஒன்றுதான். மற்றவையெல்லாம் பெற்றோர் ஸ்தானத்திலும் கார்டியன் ஹோதாவிலும் இருந்துவரும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பார்த்துக் கொள்ளுவார்கள். இந்திய முதலாளிகளோ நொண்டி மாடுபோல் இருந்துவரும் நமது ஜனங்களைப் பந்தயக் குதிரைகளாகப் பழக்க விரும்புகிறார்கள். அதற்காகச் சில சமயம் சவுக்கடி கொடுக்க வேண்டும். பழமும் வெல்லமும் தீனியில் கலந்து கொடுக்கப்படும். நன்றாக ஓடிப் பந்தயத்தில் பெறும் பரிசுகளை முதலாளிகளிடம் கொடுத்துவிட வேண்டும். பொருளாதார சாஸ்திரிகள், நமது ஜனங்களை ரண சிகிச்சை செய்யவேண்டிய நோயாளிகளாகக் கருதுகின்றனர். ஆபரேஷன் மேஜையில் படுக்கவைத்து எவ்விதச் சிகிச்சை எவ்விடத்தில் செய்யவேண்டுமென்று தீவிரமாக வாதிக்கின்றனர்.

இவர்களிடம் புதுயுகத் திட்டம் போடுவதை இந்திய மகாஜனங்களிடமே விட்டுவிடுங்கள் என்றால், மூன்று கோஷ்டியாரும் திகைப்பார்களென்பது நிச்சயம். இப்படிக் கூறுபவனுக்கு ஏதோ மூளைக்கோளாறு ஏற்பட்டுவிட்டதென்று ஏகோபித்து முடிவு செய்துவிடுவார்கள். ஆனால் இவ்வித மூளைக் கோளாறு எனக்கு ஏற்பட்டிருக்கிறதென்பதை நான் ஒப்புக்கொள்ளவேண்டும். மற்றவர் எவரும் நாற்பதுகோடி இந்திய மக்களை உத்தாரணம்செய்ய முடியாது. அவர்கள் தங்களைத் தாங்களே எவ்வளவு தூரம் சீர்படுத்திக் கொள்கிறார்களோ அவ்வளவே தான் இந்தியாவும் முன்னேறும். மற்றவர்கள் செய்யக்கூடியது, இதற்கு வேண்டிய அதிகாரத்தையும் பணத்தையும் அவர்கள் கையில் கொடுத்துவிட்டு, அவர்களுக்குப் புத்திமதி கூறி வழிகாட்டுவதே.

இது செய்வதெப்படி? முதன் முதலில் ஒவ்வோர் கிராமத்திலும் பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்தி அதன் கையில் நிலவரியை ஒப்புவித்துவிடவேண்டும். அதோடு கிராமத்துக்கு வெளியில் வசிக்கும் நிலச்சுவான்தாரர்களின் குத்தகைகளில் கால்பாகத்தையும் பஞ்சாயத்திற்குக் கொடுத்துவிடவேண்டும். இப்படி ஏற்பாடு செய்தால், ஆயிரம் ஏகராவுள்ள கிராமத்தின் பஞ்சாயத்திற்கு வருஷம் சுமார் பதினாயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கும். இந்த வருமானத்தைக்கொண்டு அந்தக் கிராமத்தின் கல்வி, சுகாதாரம், கிராமப்பாதைகள், வீடு வசதி, மின்சாரம் பாய்ச்சல், வடிகால் முதலிய சௌகரியங்களையெல்லாம் கிராமத்தாரே பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சட்டப்படி விதி செய்து, ஒவ்வோர் கிராமமும் தனக்குத்தோன்றியவாறு புது யுகத்தைத் தேட விட்டுவிடப்பட வேண்டுமென்பது எனது உறுதியான கொள்கை. இப்படிச் செய்தால் பத்து வருஷங்களில் இந்தியாவில் உண்மையாகப் புது யுகம் ஏற்படும். இல்லாவிட்டால் சிறு சிறு கூட்டத்தார்களுக்கு ஏதாவது சௌகரியங்கள் ஏற்படுவதைத்தவிர, பொதுஜன நிலைமையில் விசேஷ மாறுதல் உண்டாகாதென்று நிச்சயமாகக் கூறுவேன்.

கிராமங்களில் கட்சிச் சண்டைகள் உண்டு. பொதுப் பணத்தைப் பல கிராமங்களில்

வீணாக்கிவிடுவார்கள்; துர்விநியோகம் செய்துவிடுவார்கள். ஆனால் பல கிராமங்களில் பஞ்சாயத்துகள் தங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்யும். பாதிப் பஞ்சாயத்துகள் சரியாக வேலை செய்தால், அதனால் ஏற்படக் கூடிய நன்மையில் ஓர் சிறு அம்சங்கூட சர்க்கார் திட்டங்களால் உண்டாகாது. மத்திய மாகாண சர்க்கார்கள் பொதுப் பணத்தைச் சரியாக உபயோகப்படுத்துகிறார்கள் என்றோ இனி உபயோகப்படுத்துவார்கள் என்றோ நம்புவது மூடத்தனம். இந்தியாவில் பஞ்சம் தாண்டவமாடும்போது உணவு விருத்திக்காக மத்திய சர்க்கார் செலவு செய்திருக்கும் தொகை, புது டில்லியில் சண்டைக்காலத்திற்காக வந்திருக்கும் குமாஸ்தாக்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் தற்கால விடுதிகளுக்காகப் போட்டிருக்கும் பணத்தைவிட மிகக் குறைவு. சென்ற வருஷம் வங்காளத்தில் பஞ்சத்தைவிட லஞ்சப்பேச்சே அதிகமாயிருந்தது. எந்த அதிகாரவர்க்கமும் பிறருக்கு நன்மை செய்யும் சாக்கை வைத்துக் கொண்டு தன் சௌகரியத்தைத் தேடுவது சகஜம்.

"நிலவரியைக் கிராமங்களுக்குக் கொடுத்துவிட்டால் மாகாண அரசாங்கங்கள் என்ன செய்யும்?" என்று ஆத்திரத்துடன் அதிகாரிகள் கேட்கலாம். புது யுகத் திட்டங்களுக்காக அவர்கள் வைத்திருக்கும் நூற்றுக் கணக்கான கோடிகளில் எடுத்துச் செலவழிக்கலாமென்று பதில் கூறினால் உடனே அந்தக் கோடிகள் திட்டங்களின் புள்ளி விவரங்களே யாதலால், உண்மையான வருமானத்தை விடமுடியாதென்று கூறுவார்கள். சார்ஜெண்ட் போட்டிருக்கும் கல்வித் திட்டத்தில் தற்போது சென்னை மாகாணத்தின் வரி மொத்தத்திற்குமேல் கல்வி ஒன்றுக்கே செலவழிக்க வேண்டும். அவ்வளவு பணம் சம்பாதிக்கச் சாமர்த்தியமிருக்கும் அதிகாரிகள் ஆறு கோடி நில வரியைக் கிராமங்களுக்குக் கொடுத்துவிட முடியாதென்றால், இந்தத் திட்டங்களின் யோக்கியதையை வாசகர்களே நிர்ணயித்துக்கொள்ளலாம். உண்மையை ஆராய்ந்தால் நில வரியைக் கிராமங்களுக்குக் கொடுத்து விடுவதால் மாகாண சர்க்கார்களுக்கு அதிகக் கஷ்டமில்லை. இப்பொழுது கிராமங்களில் செய்யப்படும் செலவு குறையும். மீதிக்கு வருமான வரி, விற்பனை வரி, மின்சார வரி முதலிய வரிகளைக்கொண்டு ஈடு செய்துவிடலாம். நில வரியை விட்டுவிட்ட பிறகே, மாகாண அரசாங்கங்களுக்கு நாட்டின் தொழில், வியாபாரங்களை விருத்தி செய்து அதன் மூலம் தங்கள் நிர்வாகச் செலவுகளுக்கு வரி வசூல் செய்துகொள்ள வேண்டிய அவசியமும் ஏற்படும். அவ்வாறே கிராமத்தில் நிலத்தை விட்டுவிட்டு நகரங்களில் உல்லாச வாழ்க்கை நடத்தும் நிலச்சுவான்தாரர்களுக்கும் தமது குத்தகை குறைந்தால்தான் ஏதாவது தொழில் செய்து பிழைக்க வேண்டுமென்ற புத்தி வரும்.

பிறர் பணத்தையும், உழைப்பையும் தாம் கையாண்டு சமூகத்தைச் சீர்திருத்த வேண்டுமென்று செய்யப்படும் திட்டங்கள் போலியாகவே முடியும். நாட்டிலுள்ள கிராமங்களும், நகரங்களும் தம்தம் முன்னேற்றத்தைத் தாமே தேடுவதை அடிப்படையாகக் கொண்டு அதற்கு உதவியளிக்கும் அரசியல் முறையும், பொருளாதாரத் திட்டமும் ஏற்படும்பொழுதே இந்தியாவின் வறுமை ஒழிய வழியுண்டாகும்.

ஆப்டோன் ப்ளாக்குக்களும்
அழகான கலர் ப்ளாக்குக்களும்
செய்யுமிடம்!

★

★

எம். ஸி.
அப்பாசாமி செட்டி & கோ.,
14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி,
மதராஸ்.

ஸங்கீதம்

ஆர். கே. விசுவநாதன்

கலைகள் எல்லாவற்றிலும் மேன்மையானது ஸங்கீதக் கலை. மனிதனது மனவெழுச்சிகளை முறைப்படுத்தி வெளியிடுவதையே எல்லாக் கலைகளும் முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. இவை எல்லாவற்றிலும் ஆனந்தம், கற்பனை, மேதா விலாசம் போன்ற அம்சங்களைக் காணலாம். முதன் முதலில் ஸங்கீதத்தின் வசிய சக்தியை மனிதன் எப்பொழுது உணர்ந்தான் என்று திட்டமாகச் சொல்லமுடியாது. நம்மிடையே வழங்கிவரும் புராண கதையிலிருந்து கிருஷ்ண பரமாத்மாவின் ஸங்கீதத் திறமை எத்தகையதாயிருந்தது என்பதை உணரலாம். இதைப் பற்றி ஒரு கவி, "கடும்புலிகள் அயர்ந்து சித்ர காயமெனும் பெயர் விளங்க, கொடும் பணிகள் மாலையதாய்க் குலரத்ன விளக்கேற்றக், கருங்கல்தான் வெண்ணெயெனக் கரைந்தோட" என்று வர்ணித்துக்கொண்டே போகிறார். ஹிந்துக்களாகிய நாம் ஸங்கீதக் கலைக்கு ஒரு தெய்விகத் தன்மைகூட அளிக்கின்றோம். கடவுளை நாதப் பிரம்மம் என்று போற்றுவார் அனேகர். இதுபோல நாகரிகம் வாய்ந்த ஒவ்வொரு தேசத்தினரிடையேயும் ஸங்கீதக் கலை உன்னத ஸ்தானத்தை வகித்து வருகின்றது. மேல்நாட்டாரின் ஸங்கீதத்திற்கும் நம்முடைய கர்நாடக ஸங்கீதத்திற்கும் உள்ள சில ஒற்றுமை வேற்றுமைகளை இக்கட்டுரையில் காண்போம்.

ஸங்கீதத்திற்கு முக்கியமாக மூன்று அம்சங்கள் உண்டு. அவை Rhythm, Melody, Harmony எனப்படும். முறையே இவற்றை லய இசை என்றும், ஒழுங்கு இசை என்றும் ஒருங்கு இசை என்றும் குறிப்பிடலாம். லய இசை எனப்படுவது, ஒலிகளுக்கிடையேயுள்ள கால அளவைக் குறிக்கும். இதனால் ஏற்படும் சுகத்தையே மக்கள் முதன்முதலில் அனுபவிக்கக் கற்றுக்கொண்டார்கள். ஒழுங்கு இசை எனப்படுவது, ஒலிகளைச் சுருதி ஏற்றத் தாழ்வுகளுடன் அடுத்தடுத்துத் தொகுதிகளாக உச்சரிக்கும்போது, அவைகளினிடையே உண்டாகும் சம்பந்தத்தினால் ஏற்படும் இன்ப உணர்ச்சியைக் குறிக்கும். ஒருங்கு இசை எனப்படுவது, பல ஒலிகளைச் சேர்ந்தாற்போல் உச்சரிக்கும்போது உண்டாகும் இன்ப உணர்ச்சியைக் குறிக்கும். பின்னே கூறிய இரண்டு அம்சங்களும் முதல் அம்சத்தைக் காட்டிலும் அதிகமாக எல்லோராலும் போற்றப்பட்டு வருகின்றன. இதனால் லய இசை அவ்வளவு முக்கியமானதன்று என்று முடிவுகட்டக்கூடாது. அதற்கு ஓர் அளவுக்குத்தான் ஸங்கீதத்தில் இடமுண்டு என்று அறியவேண்டும். மேனாட்டார்கள் ஒருங்கு இசையைப் பிரதானமாகக் கொண்டு அவர்கள் ஸங்கீதத்தை அபிவிருத்தி செய்துவருகின்றார்கள். கர்நாடக ஸங்கீதத்தில் ஒழுங்கு இசை என்ற அம்சமே முக்கிய ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது. இவ்வேற்றுமையைச் சற்றே விவரிப்போம்.

ஒலிகளெல்லாம் துடிக்கும் பொருள்களிலிருந்து வெளிப்படுகின்றன என்பது யாவரும் அறிந்த விஷயம். இவற்றில் சில இனிமையாகவும் மற்றவை வெறுப்பாகவும் இருப்பதைப் பார்க்கலாம். இனிமையான ஒலிகளுக்கெல்லாம் தமக்கென்று ஒரு குறிப்பிட்ட சுருதியுண்டு. சுருதி என்பது ஒலியை உண்டாக்கும் பொருளின் துடிப்பு வேகத்தைச் சார்ந்திருக்கும். அதாவது துடிப்புக்களின் எண்ணிக்கை (Vibration number) சுருதியை நிர்ணயிக்கும். பாடும்போது ஒலிகளைச் சேர்த்தோ அல்லது ஒவ்வொன்றாகவோ உச்சரிக்கின்றோம். ஒலிகளின் சுருதியை மாற்றும்போது படிப்படியாக மாற்றுவதைக் கவனிக்கலாம். இப் படிக்கட்டுக்களைத்தான் நாம் ஸ்வரஸ்தானங்கள் என்று கூறுகிறோம். இவற்றை ஸ, ரி, க, ம; ப, த, நி என்று குறிப்பிடுகிறோம். 'ரி' என்ற ஒலியின் துடிப்பு எண் 'ஸ' என்ற ஒலியின் துடிப்பு எண்ணைக் காட்டிலும் அதிகமாகவும், 'க' வின் எண், 'ரி' யின் எண்ணைக் காட்டிலும் அதிகமாகவும் இருக்கும். இவ்வாறே மற்ற ஸ்தானங்களின் துடிப்பு எண்கள் ஒவ்வொன்றும் அதிகரித்துக்கொண்டே போகும். இம்மாதிரி ஒலியின் சுருதியைப் படிப்படியாக உயர்த்திக்கொண்டே சென்று திரும்பவும் அதே மாதிரியாகக் குறைத்துக்கொண்டே வருகின்றோம். இந்த ஆரோஹண அவரோஹணக் கிரமத்திற்குத்தான் Musical scale அல்லது ராகம் என்று பெயர். இதையே நாம் மேளகர்த்தா என்று குறிப்பிடுவது. நம்மிடம் எழுபத்திரண்டு மேளகர்த்தாக்கள் பிரபலமாயிருக்க மேனாட்டார்களிடம் இரண்டே ராகங்கள் தான் அனுஷ்டானத்தில் உள்ளன. இவ்விரண்டையும் மேனாட்டார்கள் Major scale என்றும் Minor scale என்றும்

குறிப்பிடுகிறார்கள். மேஜர் ஸ்கேல் நம்முடைய சங்கராபரணராகத்தைப் போலவும். மைனர் ஸ்கேல் கரகரப்ரியையைப் போலவும் இருக்கும். நாம் ஸ, ரி, க, ம, ப, த, நி என்று ஸ்வர ஸ்தானங்களைக் குறிப்பிடுவதுபோல் அவர்கள் ஸ்வரங்களை C, D, E, F, G, A, B என்று குறிப்பிடுகிறார்கள். ஸ்வரங்களுக்கிடையேயுள்ள அளவு சம்பந்தத்தைக் கவனிப்போம். உதாரணமாக, மேனாட்டாரின் மேஜர் ஸ்கேலை அதாவது நம்முடைய சங்கராபரண ராகத்தை எடுத்துக்கொள்ளுவோம். ஒரு குறிப்பிட்ட துடிப்பு எண் உள்ளவாறு ஆதார சுருதியைவைத்துக்கொண்டு முதலில் ‘ஸ’ என்ற ஸ்வரத்தை அச் சுருதியில் உச்சரிக்க வேண்டும். பின்னர் இத் துடிப்பு எண்ணைக் காட்டிலும் $\frac{9}{8}$ மடங்கு துடிப்பு எண்ணுள்ள ஒலியை ‘ரி’ என்று உச்சரிக்கவேண்டும். அப்பொழுதுதான் சங்கராபரண ரிஷபஸ்தானம் பேசும். இவ்விரண்டு ஸ்வரஸ்தானங்களின் துடிப்பு எண்களுக்குண்டான தகவை (ratio) இடைவெளி (interval) என்று கூறுவார்கள். எனவே ஸ-வுக்கும் ரி-க்கும் உண்டான இடைவெளி $\frac{9}{8}$ ஆகும் என்று அறியலாம். மேனாட்டாரின் மேஜர் ஸ்கேலில் C—D இரண்டிற்கும் உள்ள இடைவெளியும் $\frac{9}{8}$ ஆகும் என்று அறியலாம். முறையே க-ரி, ம-க, ப-ம, த-ப, நி-த, ஸ்-நி என்ற இரண்டிரண்டு ஸ்வரங்களுக்கும் உண்டான இடைவெளி $\frac{10}{9}, \frac{16}{15}, \frac{9}{8}, \frac{10}{9}, \frac{9}{8}, \frac{16}{15}$ என்று இருக்கும். இவ் இடைவெளிகள் இம்மாதிரி அமைந்திருந்தாலன்றி, சங்கராபரண ராகமோ அல்லது மேஜர் ஸ்கேலோ உண்டாகாது. ஒவ்வொருராகத்தின் ஸ்வரரூபமும் இந்த இடைவெளிகளைப் பொறுத்துதான் இருக்கிறது. ஸங்கீதம் அப்பியசிப்பதற்கு முன் இவ்விடைவெளிகளை நன்கு உணருவதற்கும், உச்சரிப்பதற்கும், பல ராகங்களில் ஸரளிவரிசைகளைப் பாடக் கற்றுக்கொடுப்பார்கள். இதில் மேனாட்டார்களுக்கும் நமக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. நம்முடைய ராகங்களிலோ, பாட்டுக்களிலோ இடைவெளிகள் சற்றும் ஏற்றக் குறைவு இல்லாமல் சுத்தமாக இருக்கவேண்டும். அவர்களுக்கு இது வேண்டியதில்லை. அவர்கள் பெரும்பாலும் வாத்திய ஸங்கீதத்தையே விரும்புவார்கள். பல ஒலிகளைச் சேர்ந்தாற்போல் பலவித வாத்தியங்களிலிருந்து எழுப்பவேண்டியிருப்பதால் சௌகரியத்தை உத்தேசித்து, இடைவெளிகளின் அளவுகளைச் சுத்தமாகப் பிடித்துப் பாட்டுக்களை வாசிப்பதில்லை. சுத்தமாக இருப்பின் அவர்கள் விரும்பும் ஆதாரச் சுருதி மாற்றலைச்செய்ய முடியாமல்போய்விடுகிறது. எனவே அவர்

TRADE MARK

குழந்தைகளுக்கு

கிரைப்-விட்-டி

‘நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்’ என்பது ஓர் அமுதமொழி. அதனினும் நோயில்லாமல் குழந்தைகளை வளர்க்கும் பாக்கியத்தைவிட சிறந்தபாக்கியம் வேறொன்றுமில்லை. ஆனால் குழந்தைகளுக்குக் குடல் சம்பந்தமாய் வயிற்றில் சில கோளாறுகள் சகஜமாய் ஏற்படுகின்றன. வயிற்றில் வலி, வாந்தி, வயிற்றுப்போக்கு வயிற்றில் புளிப்பு முதலியன. இவைகளுக்கு “கிரைப்-விட்-டி”யைக் கொடுத்தால் அதிலிருக்கும் மிகவும் அருமையான மருந்துச் சத்துக்கள் ஜீரணமாகாது இறுகிய பாலைப் பக்குவப் படுத்தியும், புளிப்பு ஏற்பட்டிருந்தால்அதை முறித்தும் வெகு சீக்கிரத்தில் ஜீரணமாக்குவதற்கு உதவி செய்கின்றன. சில குழந்தைகள் பால் குடித்த உடனே வாந்தி எடுப்பதும் உண்டு; அம்மாதிரியான குழந்தைகளுக்குப் பால் கொடுப்பதற்கு முன்னே ஒரு டோஸ் “கிரைப்-விட்-டி”யைக் கொடுத்து வந்தால் வாந்தி நின்றுவிடும்.

தாய்மார்களே! உங்கள் கண்ணுக்குக் கண்ணான குழந்தையைக் காப்பாற்றுங்கள். நோய்க்கு இடங்கொடுக்காதீர்கள். அநேக விதமான நோய்கள் வரும் முன் அவற்றை வராமல் தடுத்துவிடுங்கள். அதற்காக “கிரைப்-விட்-டி”யை இன்றே உங்கள் குழந்தைகளுக்கு கொடுக்க ஆரம்பியுங்கள். “கிரைப்-விட்-டி” எவ்விதமான கெட்ட மருந்தும் சேராத ஓர் தேவாமிர்தம் போன்றது.

Sole Proprietors

S. R. REMEDIES,

TRICHINOPOLI.

கள் கீழ் ஷட்ஜமத்திலிருந்து மேல் ஷட்ஜமம் வரையில் உள்ள இடைவெளியைப் பன்னிரண்டு ஸமபாகமாகப் பிரித்துவிட்டார்கள். இக் கருத்தை மேற்கொண்டு வாத்தியங்களையும் அமைத்திருக்கின்றார்கள். அவர்கள் மிகவும் கொண்டாடும் பியானோ வாத்தியத்தையும், ஹார்மோனிய வாத்தியத்தையும் உதாரணமாகக் கூறலாம். ஹார்மோனிய வாத்தியத்தில் ஒரு ஸ்தாயியில் (octave) கறுப்பு வெளுப்புக் கட்டைகள் பன்னிரண்டு இருப்பதை அனைவரும் பார்த்திருக்கலாம். ஷட்ஜமங்களைத் தவிர மற்ற ஸ்வரஸ்தானங்கள் சுத்தமாய் இருக்கமாட்டா. இதனால்தான் நம்முடைய ஸங்கீத வித்துவான்கள் அனைவரும் ஹார்மோனிய வாத்தியத்தை உபயோகிக்கக் கூடாது என்று கூறுகிறார்கள்.

இப்பொழுது நம்முடைய கர்நாடக ஸங்கிதத்திற்கும் அவர்களுடைய ஸங்கீதத்திற்கும் உள்ள மற்றொரு வித்தியாசத்தைப் பார்ப்போம். அவர்கள் ஸங்கீதத்தைத் தகுந்த அடையாளங்களைக்கொண்டு புஸ்தகத்தில் எழுதிவிடுவார்கள். இதற்கு Staff Notation என்று பெயர். இவ்வாறு எழுதப்பட்ட பாட்டுக்களை மற்றவர்கள் வாசித்துவிடுவார்கள். காகிதத்தில் குறிப்பதற்கு முதலில் இணையாகப் பலகோடுகளை வரைந்து கொள்ளுவார்கள். ஆதாரச் சுருதிக்குத்தகுந்தவாறு கோடுகளின் தலைப்பில் எங்கிருந்து ஸ்வரஸ்தானங்களை உச்சரிக்கவேண்டுமென்று குறிக்கப்பட்டிருக்கும். ஸ்தானங்களை உச்சரிக்கவேண்டிய கால அளவுக்குத் தகுந்தவாறு அவற்றை அடையாளங்களில் குறிப்பது வழக்கம். கோட்டின்மீதும் கோடுகளுக்கு இடையேயும் வரிசையாக ஸ்தானங்கள் குறிக்கப்பட்டிருக்கும். கோடுகளின் குறுக்கே செங்குத்தான கோடுகளை வரைந்து தாளத்தைக் காட்டுவார்கள். இதைப்போல நம்முடைய கர்நாடக ஸங்கீதத்தை ஏன் எழுதக்கூடாது என்று சிலர் நினைக்கலாம். இவ்வாறு எழுதுவதைத்தான் பாட்டுக்களை ஸ்வரப்படுத்துவது என்று கூறுவது. ஸ்வரப்படுத்திய கீர்த்தனைகளைக்கொண்டு பாடம் பண்ணுவது எளிதன்று. ஏனெனில் நம்முடைய ஸங்கீதத்திற்கு ஆதாரமாயுள்ளது ராகம். ராக ஆலாபனையில் ஸ்வரஸ்தானங்களை கமகங்களுடன் பிடித்தால்தான் ராகத்தின் ஸ்வரூபம் முழுவதும் உண்டாகும். இவ்வாறு ஸ்தானங்களை அசைத்துப் பிடிப்பதால் அவற்றின் துடிப்பு எண்களைப் பூராவும்

லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

[ஹெட் ஆபீஸ்: லாகூர்]

நம்பிக்கையூட்டும் புள்ளி விவரங்கள்

எங்கள் வியாபாரத்தை விரிவுபடுத்தும் திட்டசம்பந்தமான விசாரணைகள் வரவேற்கப்படும்.

★

விவரங்களுக்கு எழுதவும்:-

பிராஞ் மானேஜர்

4/105, அரமனைக்காரத்தெரு,

ஜி. டி. மதராஸ்.

1943-ல் புதிய பாலிஸிகள் 2 கோடி 20 லக்ஷத்திற்குமேல்

முன் வருஷத்தைவிட கிட்டத்தட்ட (1 கோடி ரூபாய் அதிகம்)

அமுலிலுள்ள பாலிஸிகள் $10\frac{1}{4}$ கோடிக்குமேல்

மொத்த ஆஸ்தி $2\frac{1}{2}$,,

ஆயுள் நிதி $2\frac{1}{3}$,,

இந்தியாவெங்கும் கிளை ஆபீஸ்கள்

சென்னைக் கிளை ஆபீஸின் விலாஸ மாற்றத்தைக் கவனியுங்கள்

C. R. சேஷன், *M. A.*,

பிராஞ்ச் மானேஜர், மதராஸ்

நிர்ணயிக்க முடியாமற்போய்விடுகிறது. ஆனால் அவர்களுக்கு இந்த நிர்ப்பந்தம் இல்லை. ஏனெனில் பெரும்பாலும் ஸ்வர ஸ்தானங்களை மொட்டையாகப் பிடிப்பது தான் அவர்களின் வழக்கம். ஆகையினால் நமக்கு நொடேஷனின் உபயோகம் சிறிதளவே ஆகும்.

கடைசியாக, அவர்கள் ஸங்கீதத்தின் முக்கிய அம்சமான ஒருங்கு இசையைச் சற்று விளக்குவோம். இரண்டு ஒலிகளை ஒரே ஸமயத்தில் உச்சரித்தால் அவை இரண்டும் ஒத்து, காதிற்கு இன்ப உணர்ச்சியைக் கொடுக்குமானால் அவை ஒத்த ஸ்வரங்கள் (Concordant notes) எனப்படும். அவ்வாறு இல்லாமல் வெறுப்பை உண்டுபண்ணினால் பகை ஸ்வரங்கள் (Discordant notes) எனப்படும். ஒரு ஸ்தாயியில் எந்தெந்த இரண்டு ஸ்வரங்களைச் சேர்த்து உச்சரித்தால் இன்ப உணர்ச்சி ஏற்படுகிறது என்பதைச் சுலபமாக அறியலாம். கீழ் ஷட்ஜம மேல் ஷட்ஜமச் சேர்க்கை முதல்தரமாக இருக்கும். அடுத்தாற்போல் ஷட்ஜமும் பஞ்சமமும் நன்றாகச் சேரும். அடுத்தாற்போல் ஷட்ஜமும், மத்தியமும் நன்றாகச் சேரும் ஆனால் நிஷாதமும் ஷட்ஜமும் வெறுப்பைக்கொடுக்கும். இம்மாதிரி மற்றச் சேர்க்கைகளைக் காணலாம். இதைப்போல ஒரே சமயத்தில் மூன்று ஒலிகளை உச்சரிக்கும்போது, அவற்றினிடையே ஒற்றுமை உண்டாகி, இன்ப உணர்ச்சி ஏற்படுவதற்கு, எந்தெந்த மூன்று ஸ்வரங்களைச் சேர்க்கவேண்டுமென்று பார்க்கலாம். அதே மாதிரியாக ஒரே சமயத்தில் நான்கு ஒலிகளை உச்சரிக்கும்போது, அவற்றினிடையே ஒற்றுமை ஏற்பட்டு, இன்ப உணர்ச்சி பெறுவதற்குண்டான நிபந்தனைகளைக் காணலாம். இதைத்தான் மேனாட்டார்கள் அவர்கள் ஸங்கீதத்தில் செய்கின்றார்கள். அவர்களின் வாத்தியக் கோஷ்டியைக் கவனித்தால் அதில் கம்பி வாத்தியங்கள், காற்று வாத்தியங்கள், பாண்டு வாத்தியங்கள் என்று பலவிதம் இருப்பதைக் கவனிக்கலாம். இவற்றிலிருந்து கிளம்பும் ஒலிகள் ஒற்றுமையுடன் கலந்து, இன்ப உணர்ச்சி தருமாறு அவர்கள் பாட்டை அமைக்கின்றார்கள். நம்முடைய ஸங்கீதத்தில் அவ்வப்போது எழுப்பப்படும் ஒலிகள் ஒவ்வொன்றும் ஆதார சுருதியுடன் ஒத்துவருகின்றதா என்று கவனித்துப் பாடுவார்கள். எனவே ஓரளவுக்குத்தான் ஒருங்கு இசை நம்முடைய ஸங்கீதத்தில் இடம் பெற்றிருக்கிறது. அவர்களுக்கு நாம் இவ்வளவு ராகங்கள் பாடுவது வியப்பாக இருக்கின்றது. அவர்களில் சிலர் நாம் காணுவது போல் ராகபேதங்களைக் காணுவது சாத்தியமானது அல்ல என்றும் கருதுகின்றார்கள். மேலும் நாம் ஆதார சுருதியை மாற்றாமல் பாடுவதை அவர் விரும்புவதில்லை. அவர்கள் ஸங்கீதத்தில் ஆதார சுருதி அடிக்கடி மாறுவதால் கர்நாடக ஸங்கீதத்தைக் கேட்டவர்கள் அவர்கள் ஸங்கீதத்தைக் கேட்பின் ராகத்தைக் கவனிக்கமுடியாமல் திகைத்துப்போய் விடுவார்கள். அவர்கள் ஸங்கீதம் பெரிய சத்தமாகச் சிலருக்குத் தோன்றக்கூடும். அவர்களுடைய நோக்கம் வேறு. நம்முடைய நோக்கம் வேறு. அவர்களுடைய ஸங்கீதத்திலிருந்து நாம் ஒன்றையும் சேர்த்துக்கொள்ள முடியாது.

The AIRMAN *and his watch!*

விமானியும், அவர்
கைக்கடியாரமும்:

விமானிகள் கைக் கடிகாரத்தின் தன்மையை அரிவதில் கைதேர்ந்தவர்கள். நீண்டு உழைப்பனவாயும் மிக நுட்பமாயுமுள்ள கடிகாரத்தைத்தான் விரும்புவார்கள். அவர்களுக்கு நல்ல பார்வையுள்ளதாயும், எளிதில் மணியை அரியக்கூடியதாயும், கையில் கட்டக்கூடியதாயுமுள்ள கடிகாரம் தான்பிடித்தம். இவர்களும் இவர்களின் சிப்பந்திகளும் வெஸ்ட் எண்டு கடிகாரங்களைப் போற்றி எழுதியுள்ள நற்சாக்ஷிப் பத்திரங்கள் எங்களிடம் பல உள்ளன.



ஸில்ஸிடார் புதிய வடிவம்
நிக்கல் ஸில்வர் ரேடியம் டயலுடன் ரூ 57

ஓர் விமான ஆபீஸர்
எழுதுவதாவது:

"சென்ற செப்டம்பர்—அக்டோபரில் இந்தியாவில், தங்கியிருந்தபொழுது என் நண்பர் ஒருவர் உங்கள் கடிகாரமொன்றை எனக்காக வாங்கிவந்தார். அது மிக நன்றாக உழைத்து வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்."

குறித்த காலத்தில் சரக்குகள் வருவதில்லையாகையால் விளம்பரம் செய்யப்பட்ட எல்லா ரகங்களையும் சப்ளை செய்ய சாத்தியமில்லாமல் இருக்கிறது. ஆயினும் ஸ்டாக் உள்ளவரை சப்ளை செய்வோம். பேப்பர் கண்ட்ரோல் ஆர்டரின்படி கேட்லாக்குகள் அனுப்ப இயலவில்லை என வருந்துகிறோம்.

வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.
பம்பாய் — கல்கத்தா

WEST END WATCH Co.
BOMBAY ◆ CALCUTTA

அழகு மயக்கம்

ஜி. எஸ். மணி

★

பாஸ்கரன் அந்த அறைக்குள் நுழைந்ததும் தூக்கிவாரிப்போட்டுக்கொண்டு எழுந்து நின்றாள் பங்கஜம்.

"என்ன படிக்கிறாய், பங்கஜம்? பாரதமா? பாகவதமா?"

"இல்லை......ராமாயணம் வாசிக்கிறேன்..." என்று தலைகுனிந்தபடியே மெலிந்த குரலில் மறுமொழி சொன்னாள்.

பாஸ்கரன் முகத்திலே அளவற்ற வெறுப்புத் தோற்றமளித்தது—"ஓஹோ! 'வேதாந்த ஸங்கிரஹ'த்தைப் படித்து முடித்து எல்லாம் கரை கண்டாகிவிட்டதுபோலிருக்கிறது? இப்போது 'மனுஷ்ய தர்ம'த்தை ஆராய ஆரம்பித்துவிட்டாய்?" என்றான் குரலில் கோபம் தொனிக்க.

"இல்லை.........நீங்கள் ஆபீஸுக்குப் போன பிறகு—மத்யான வேளையில் பொழுதே போக மாட்டேனென்கிறது...... அதற்காகத்தான்..." என்று தயங்கினாள்.

"படி—நீ படிப்பதைநான் வேண்டாமென்னவில்லை. ஆனால் உன்பொழுது போகத்தானே நானும் கதைப் புஸ்தகங்களும், நாவல்களுமாக வாங்கிப் பீரோ பீரோவாகச் சுமத்தியிருக்கிறேன்? அவைகளைப் படியேன்? பொழுதும் போகும்; அறிவும் விசாலமாகும்? அதையெ[ல்லாம்] விரலால்கூடத் தொடமாட்டே[ன்கிறாய்?].........எப்போது பார்த்தாலும் ராமாயணமும், மஹாபாரதமும், உபநிஷத் வாக்யங்களும்! ரொம்ப நன்றாயிருக்கிறது? இந்த வயசிற்குள் பெருத்த ஞானியாகி விடலாம் என்கிற உத்தேசம் போலிருக்கிறது?........."

"அதற்கில்லை—இந்தமாதிரி புராண, இதிஹாஸங்களை வாசித்தால் இகபரத்திற்கு நல்லதென்று பாட்டி சொல்லியிருக்கிறாள்........"

"ஓ! அதிகப் பிரசங்கி! இகமாம்—பரமாம்! நீதான் அத்தனையையும் ரொம்பக் கண்டுவிட்டாயோ? பாட்டியாம், பாட்டி! நான் சொல்கிறேன்? என் வார்த்தையை அலக்ஷியம் செய்கிறாய்? 'பாட்டி சொன்னாளாம்! இந்தப்பேத்தி அப்படியே நடந்து காட்டுகிறாளாம்!' என்னைவிட உன்பாட்டி உனக்கு அத்தனை உசத்தியாகப் போய்விட்டாளோ?" என்று சீறினான்.

பங்கஜம் அப்படியே நடுங்கிப்போய் நின்றாள். அவள் கடை விழிகளிலே கண்ணீர் தேங்கி நின்றது.

நெற்றியில் மஞ்சள் குங்குமத்துடனும், உதடுகளில் படிந்திருந்த வெற்றிலைக் காவியின் தனியழகுடனும், 'கொசுவன்' புடவையுடனும் ஸாக்ஷாத் மஹாலக்ஷ்மி மாதிரி, பாஸ்கரன் எதிரில் வந்து நின்றாள் பங்கஜம். கையில் கொண்டுவந்திருந்த காப்பியை அவனுக்கு முன்பாக 'சொர்—சொர்' என்று ஊற்றி ஆற்றினாள்.

பாஸ்கரன் அவளை உச்சந்தலையிலிருந்து, உள்ளங்கால் வரையில் ஒரு தடவை ஏற இறங்க நோக்கினான். அவனுக்குத் தன்னை அறியாமல் சிரிப்பு வந்துவிட்டது. அவளை நோக்கி, "இதென்னடீ இது! மாரியம்மன் வேஷமா! எந்தக் கோவிலுக்குப் பிரார்த்தனையோ?" என்றான் சிரித்துக்கொண்டே.

பங்கஜத்தின் முகாரவிந்தம் 'குபீ'ரென்று சிவந்துவிட்டது. பதில் பேசாமல் தலைகுனிந்து கொண்டாள்.

எழுந்துபோய்ப் பக்கத்திலிருந்த பீரோ ஒன்றைத்திறந்தான் பாஸ்கரன். "இதைப்பார், பங்கஜி?" என்றான் அவளை நோக்கி.

அவள் தலைநிமிர்ந்து அவற்றைப் பார்த்தாள்.

பீரோவின் அந்த அறை பூராவுமே தினுஸுதினுஸான வாஸனைசோப்புக்களும், வாஸனைத் தைலங்களும், வாஸனைப் பொடிகளும், இன்னும் விதவிதமான 'ஸ்னோ'க்களும், 'க்ரீம்'களும், 'பொமேட்'களும், 'ஷாம்பூ'க்களும், 'குஸும்'களும், ஸென்ட்பாட்டில்களும், பௌடர் டப்பாக்களுமாகவே அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

"இதெல்லாம் உன் உபயோகத்திற்கென்றுதான் வாங்கினேன், பங்கஜி! உனக்குப் பிரயோஜனமில்லாவிட்டால் எடுத்துத் தூர எறிந்துவிடட்டுமா?" என்றான் புன்சிரிப்புடன் அவளைப் பார்த்தபடி.

பங்கஜம் என்னவோ சொல்லவாயெடுத்தாள். அதற்குள் பாஸ்கரனே குறுக்கிட்டான்—"இரு, பங்கஜி! அவசரப்படாதே—கொஞ்சம் பொறு. நீ என்ன சொல்லப் போகிறாயோ அதையும் நானே சொல்லிவிடுகிறேன்—இதெல்லாம் உன் உடம்பைக் கெடுத்துவிடும். தேகத்தில் 'எண்ணெப்பசை'யே இல்லாமல் வறள அடித்துவிடும். உன்னிடம் இப்போது காணப்படுவதுபோல் எண்ணெயின் 'பிசுபிசு'ப்பு எப்போதும் இருந்துகொண்டேயிருக்கவேண்டும்.

அதுதான் நல்லது. வாரத்தில் குறைந்தபக்ஷம் இரண்டு முறையாவது எண்ணெய் ஸ்னானம் அவச்யம் செய்யவேண்டும். இந்தப் 'பவுடர்—கிவுடர்'—'ஸ்னோ—கினோ' இதில் எல்லாம் 'சுண்ணும்பு' கலந்திருக்கிறது! மேலே பட்டால் உடம்பு வெந்துபோய், 'சோகை' பிடித்துமாதிரியாகிவிடும்! 'இல்லையா? உன்பாட்டி சொல்லியிருக்கிருள்!-இதைத் தானே சொல்ல வந்தாய்? ஆகவே இதெல்லாம் உனக்கு வேண்டாம்? சாக்கடையில் விட்டெறிந்துவிடவேண்டியதுதானே பாக்கி?" என்ருன்.

"இல்லை—இருக்கட்டும்" என்று தலை குனிந்த படியே நடுங்கிய குரலில் சொன்னுள் பங்கஜம்.

ஆச்சர்யமடைந்தவன் போலப் பாவித்தான் பாஸ்கரன். "என்ன! இருக்கட்டுமா! இதெல்லாம்தான் உனக்கும் பிடிக்காத சாமான்களாயிற்றே?" என்ருன்.

"இல்லை—இனிமேல் உபயோகத்தில் வைத்துக்கொள்கிறேன்" என்று அவனைப்பார்த்துக் கம்மியகுரலில் சொன்னுள், பங்கஜம்.

— 3 —

ஆனுல் அதெல்லாம் நான்கு வருஷத்திற்கு முந்திய கதை. அப்போது, "பட்டிக்காடு" என்றே பெயர்கொண்ட ஒரு பட்டிக்காட்டுக் கிராமத்திலிருந்து சுத்தக்கட்டுப்பெட்டியாகப் புக்ககம் வந்திருந்தாள் புதிதாக.

ஆனுல் நவநாகரிகத்தின் சிகரத்தையே எட்டிப் பார்த்து, தானும் அதை அளவுகடந்தே அனுபவித்துவரும் தற்கால யுவனுகிய பாஸ்கரனுக்கும் கர்நாடகப் பழக்க வழக்கங்களையே விடாமல் அனுசரித்து வந்த பங்கஜத்திற்கும் எந்த விதத்தில் பொருந்தும்? அந்த மாதிரி சுத்த கிராமாந்தரமாக இருந்ததைக்கண்டு அளவற்ற அவமானம் கொண்டான்! நவீன வாழ்க்கையின் சகல துறைகளிலும், பங்கஜம் தன்னையும்விட ஒருபடி மீறி நிற்கவும், நாகரிக விருக்ஷத்தின் உச்சாணிக் கிளையில் தலைகிழாக அவள் தொங்கவும் அடக்கமுடியாத ஆசைப் பட்டான்!

எப்படியும் பங்கஜத்தை ஒரு நவீன நாகரிமணியாக்கியே பார்த்து விடுவதென்று கங்கணம் கட்டிக்கொண்டவனுய் அவளைத்திருத்துவதிலேயே இரவு பகலாக முனைந்துவிட்டான்!

"முயற்சி திருவினை ஆக்கும்" அல்லவா! குளவிதான் கொண்டுவரும் புழுவை, சதா சர்வதா கொட்டிக்கொட்டி எப்படி அதையும் தன் இனம் ஆக்கிக்கொண்டுவிடுகிறதோ அதே மாதிரி 'பட்டிக்காடாக' இருந்த பங்கஜமும், பாஸ்கரனின் கொட்டலுக்கும், கேலிக்கும், பரிஹாசத்திற்கும், நயத்திற்கும், பயத்திற்கும் கொஞ்சம் கொஞ்சமாக இணங்கிவரத் தொடங்கினுள்.

அவளுடைய மஞ்சள் பூச்சும், குங்குமமும் சிறிது சிறிதாக மறைந்து அந்த ஸ்தானத்தை ஸோப்பும், பௌடரும், ஜிகினுப் பொட்டும் கவர்ந்துகொண்டன. 'கொசுவன் கட்டு' மாயமாகப்போய், 'மாம்பழக் கொடுக்கு' முளைத்தது! காதுகளை அலங்கரித்துக் கொண்டிருந்த தோடுகளின் இடத்தில் தொங்கணிகள் தொங்கியபடி அழகு செய்தன. கையில் பிடித்திருந்த பாரதமும், ராமாயணமும் மூலையில் பதுங்கி, 'கனகவல்லியின் காதல்களும், கோரமாக நடந்த கொலைகளும்' அந்தக் கரத்தில் அமர இடம் தந்தன.

இப்படியாகத் தினே தினே பங்கஜத்தினிடத்தில் நவநாகரிகத்தின் சின்னங்கள் தோன்றி, நாளடைவில் அபிவிருத்தியுறவும் ஆரம்பித்தன.

அப்புறம்—பாஸ்கரன் சொல்லிக் கொடுத்து முதலில் நாகரிகமடைந்தது போக, தானுகவே, 'இப்படியிருந்தால் நாகரிகம், அப்படிச் செய்தால்தான் 'பாஷன்'—என்று நினைத்துக் கொண்டு ஸ்வயமாகவே நாகரிக விவகாரங்களில் அதிகமான அக்கரையும், ஊக்கமும் காண்பிக்கத் தொடங்கி, அத்துறையில் அபரிமிதமான வளர்ச்சியும் அடைந்துவிட்டாள்!

இப்போது பங்கஜத்தைப் புதிதாகப் பார்ப்பவர்கள் அப்படியே பிரமித்துப்போய்த்தான் நிற்பார்கள். சுற்றுப்புற நாகரிகத்திற்குப் பங்கஜம்தான் ஒரே உதாரணமாய் விளங்கினுள் என்ருல் அது மிகையாகாது.

பாஸ்கரனின் கள்வெறியைப் பற்றியோ சொல்லவேண்டாம்! 'தன் கனவு பலித்துவிட்ட' தென்று பூரித்தே போனுன். தலை கால் புரியாமல் அலைந்தான். பங்கஜத்திடம் அழ[illegible] அவதாரமாகிவிட்டதாகக் கண்டு அந்த [illegible]வ அழகிற்கு அடிமையானுன். அது வரையில் அவளைத் தன் உள்ளக் கோவிலில் வைத்து அந்தரங்கமாகப் பூஜித்து வந்தவன், திடீரென்று, வெளிப் படையாகவே, நாலு பேர்அறிய, பங்கஜத்திடம், சௌந்தர்யோபாசனை' செய்யத் துவக்கிவிட்டான்! அவளைத்தன் கண் இமைக்குள் வைத்து, துளி அலுங்காமல், நலுங்காமல், அவளைக் காப்பாற்றுவதாக நினைத்து, அர்த்தமில்லாமல் அனர்த்தம் செய்யத் துவக்கிவிட்டான்!

வழக்கத்தைவிட அவள் சற்று அதிக நேரம் 'டென்னிஸ்' ஆடினுல். பாஸ்கரன் "போதும், பங்கஜி! வியர்க்கப் போகிறது? இப்படிவந்து உட்கார்ந்து கொஞ்சம் ஆச்வாசப் படுத்திக் கொள்!" என்பான், அவள் பொழுது போகாமல் வீட்டிலே சில்லறை வேலை ஏதாவது, செய்ய முயன்ருல்—"வேண்டாம், பங்கஜி வேலைக்காரன் எதற்கு இருக்கிருன்?" என்று தடுத்து விடுவான்.

இரவில் எப்போதாவது வழக்கத்தைவிட ஒரு நிமிஷம் அதிகமாகக் கண்விழித்துக்

கொண்டிருந்தால், ''படுத்துக்கொள்ளம்மா, தூங்கு சீக்கிரம்! இல்லாவிட்டால் உன்கண் இடுங்கிப் போகும்; அப்புறம் தலையை வலிக்கும்; ஜுரம் வரும்! அதனால் உன் அழகு குறைந்துபோகும், தேகம் கட்டுவிட்டுப் போகும்!'' என்று நச்சரித்துவிடுவான்.

பொதுவாக அவள் இஷ்டப்படி ஒன்றுமே செய்யவிடமாட்டான்! தானே அவளை ஆட்டி வைப்பான். பங்கஜத்திற்கே சில சமயங்களில், 'ஏதடா இது! பெரிய தொந்தரவாகப் போய்விட்டது!' என்றும் தோன்றுவதுண்டு! ஆயினும் அவளுக்கு அது ரொம்பப் பெருமையாகவும் இருந்தது! ஒவ்வொரு விஷயத்திலும், முகத்தில் தவழும் மோஹனப் புன்னகையுடன், பாஸ்கரன் இஷ்டத்திற்கு உடன்பட்டே நடந்துவந்தாள், ஒன்றும் வெளிக்காட்டிக் கொள்ளாமல்!

— 4 —

ஆனால் பாஸ்கரனின் 'சௌந்தர்யோபாசனை' அவளை 'அத்தனை தூரத்திற்கும் கொண்டு போய் விட்டுவிடும்' என்று பங்கஜமே கனவிலும் எதிர்பார்க்கவில்லை யென்றே தோன்றியது. அவனுடைய 'அழகு பூஜை'யின் கடைசி அடியானது அவளை அப்படியே பிரமிக்கச் செய்ததுடன், அவள் நிலைகுலையவும் செய்துவிட்டது.......

ஒருநாள் இரவு சதிபதிகள் ஸல்லாபத்தில் திளைத்துக்கொண்டிருக்கும்போது பங்கஜம், பேச்சோடு பேச்சாக, விஷயத்தையும், ஒருமாதிரியாக, வெட்கத்துடன் வெளியிட்டாள்—தான் மூன்று மாதமாக 'ஸ்னானம்' செய்யாமலிருப்பதாக!

அவ்வளவுதான்............ .....

அந்த நிமிஷம் வரையில் அவளுடன் ஆனந்தமாகப் பொழுது போக்கிக்கொண்டிருந்த பாஸ்கரன் ஒரு நிமிஷம் அப்படியே ஸ்தம்பித்துப்போய் உட்கார்ந்துவிட்டான்! திடீரென்று அவன் முகம் கறுத்துச் சுருங்கிவிட்டது.

''என்ன!.........என்ன சொல்கிறாய், பங்கஜி! ....நிஜமாகவா! ''என்று திணறினான், பேசமாட்டாமல்.

ஒரு க்ஷணம் பாஸ்கரனை ஆச்சர்யத்துடன் நோக்கினாள் பங்கஜம். உடனேயே தலைகுனிந்துகொண்டாள். ஒன்றும் பேசவில்லை.

''நிஜமாகக் குழந்தையா!'' என்றான் மறுபடியும்.

ஏனோ அவனது அப்போதைய குரல் பங்கஜத்திற்குப் பிடிக்கவில்லை. தலைநிமிர்ந்து அவனைப் பார்த்தாள். ''என்ன அப்படிக் கேட்கிறீர்கள்? உங்களிடத்தில் இதுமாதிரி யெல்லாம் விளையாடுவேனா, நான்? நமக்குப் பிறக்கப் போகும் குழந்தை 'பெண்ணாகப் பிறந்துவிட்டால், 'பின்னாடி வரனுக்கு அலையவேண்டியிருக்குமே' யென்று இப்போதே கவலை பிடித்துக் கொண்டுவிட்டதா?'' என்றாள் லேசாகச் சிரித்துக்கொண்டே.

ஆனால் அப்போது பாஸ்கரனிடம் ஹாஸ்யத்திற்கும், பரிஹாஸத்திற்கும் இடமில்லை யென்று நன்றாகத் தெரிந்தது. அவன் முகம் அறுந்து தொங்கியது. அவன் உள்ளம் எதைப் பற்றியோ அதி தீவிரமாக யோசித்துக்கொண்டிருந்ததாகப்பட்டது. நீண்ட பெருமூச்செறிந்துகொண்டே, ''நான் இதை எதிர்பார்க்கவேயில்லை!'' என்றான் மெதுவாக.

அவன் பேச்சு பங்கஜத்திற்குப் புரியவில்லை—அவன் முகத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டே, ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? எனக்குப் புரியவில்லையே?'' என்றாள்.

''குழந்தை பெற்றால் இப்போதிருக்கும் உன் அழகு எல்லாம் குலைந்துபோய்விடுமே! உன் தேகக்கட்டு,தளர்ந்துபோய்விடுமே!'' என்றான் கவலையோடு.

அப்போதுகூட அவன் சொன்னதன் கருத்தைப்பற்றிப் பங்கஜம் கொஞ்சமாவது யோசித்தவளாகத் தெரியவில்லை. அவ்வார்த்தைகளைச் சரியாகப் புரிந்துகொள்ள முயன்றவளாகக் கூட தெரியவில்லை. சிரித்தாள்—''பிரமாதம் குழந்தையைவிட என் அழகும், உடம்புக் கட்டும் பெரிசா, என்ன!'' என்றாள். அலக்ஷியமாக.

அதிலிருந்துதான் பங்கஜத்தின் உள்ளத்தின் போக்கை ஒருவாறு அறிந்துகொண்டான், பாஸ்கரன். ஸ்திரீ ஸ்வபாவத்தைச் சரியாகத் தெரிந்துகொள்ளாதவன்; அவர்கள் உள்ளத்தை உள்ளபடி புரிந்துகொள்ளாதவன்—மேலே என்ன பேசுவது—எப்படிப் பேசுவது? என்று புரியாமல் சிறிதுநேரம் தவித்தான். கொஞ்சநேர மௌனத்திற்குப் பிறகு, ''எனக்கு அதுதான் முக்யம்!'' என்றான்.

அவன் குரலை உணர்ந்து, திடுக்கிட்டுப்போய் அவனுடைய முகத்தை உற்றுநோக்கிய பங்கஜத்திற்கு அப்போதுதான் திகில் கொடுத்தது. ''அப்படியானால் இனிமேல் என்ன செய்வதாக உத்தேசம்?'' என்றாள்.

''அதைப்பற்றித்தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு மௌனமானான். சில நிமிஷங்கள் கழிந்தன. பாஸ்கரனின் முகம் சட்டென்று மலர்ந்தது. முடிவாக ஏதோ தீர்மானத்திற்கு வந்துவிட்டவனைப்போல், ''ஆமாம்! அதுதான் சரி! அப்படித்தான் செய்யவேண்டும்!'' என்றான்.

''எதுதான் சரி? எப்படித்தான் செய்யப் போகிறீர்கள்?''

உங்கள் கூந்தலைக் காப்பாற்ற

மூலமந்திரம்

உங்கள் கூந்தலைக் காப்பாற்றுவது உங்கள் கையிலேதான் இருக்கிறது......மிகவும் எளிதான முறை, ஆயினும் உங்கள் கூந்தலை இயற்கையாக வளர உதவியளித்து, அதன் அழகைக் காக்கும் தன்மை வாய்ந்தது. ஒரு பாட்டில்

காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்டு)

இந்த வித்தையைச் செய்யும். ஒருமுறை உபயோகித்தால் மறக்கமுடியாது. அதன் நிகரற்ற மணம் அதைத் தேடிச்செல்லத் தூண்டும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். ஒரு அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

ஆட்டோ டில்பகார்

(ரிஜிஸ்டர்டு)

மணங்களுக்குள் தலைசிறந்த அரசன். இதன் வசீகர மணம் நிகரற்றது. மதுசார சம்பந்த மற்றது.

எங்கும் கிடைக்கும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம், 2 அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

சோல் ஏஜண்டுகள் :

ஆங்கிளோ - இந்தியன் டிரக் & கெமிகல் கம்பெனி,

பம்பாய்—2

"நாளைக்குப் பொழுது விடிந்ததும் உன்னை டாக்டரிடம் கூட்டிக்கொண்டுபோய் காண்பிக்கத்தான்!"

"டாக்டரிடமா! ஏன்?......எதற்கு? எனக்கு உடம்பு சரியாகத்தானே இருக்கிறது! ஒன்றும் தொந்தரவல்லையே!"

"அதற்குச் சொல்லவில்லை, பங்கஜி!—அது தான்?—நாளைக்கே இதற்கு ஒரு வழி செய்தாக வேண்டும். என்கிறேன்!"

"எதற்கு? என்ன வழி?"

"அதுதான்! — நாளைக்கே — 'அபார்ஷனு'க்கு வழி தேடியாகவேண்டுமென்றுதான் சொல்கிறேன்!—ஏன் பங்கஜி! என்ன அப்படிப் பார்க்கிறாய்? உன் உடம்புக்கு என்ன பங்கஜி! பங்கஜி! பங்கஜி!......ஏன்?......ஏன்!......"

பங்கஜத்திற்குத் தேகமெல்லாம் பதறிக் கொண்டிருந்தது. நெற்றியில் வியர்வைத் துளிகள் முத்து முத்தாகத் தோன்றின. மருண்டேபோனாள். அந்தப் பார்வையிலே அளவு மீறிய பயக்குறி காணப்பட்டது......"என்ன! ......என்ன! என்ன சொல்கிறீர்கள்?........... நீங்கள்தானா இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? நான் உங்களிடமிருந்து இதை......எதிர்பார்க்கவேயில்லை......!"என்று பேச முடியாமல் விக்கினாள்.

"ஒன்றும் பயப்படாதே,"பங்கஜி!.........உன் மனசை வீணாக அலட்டிக்கொள்ளாதே........ நான்சொல்வதை அமைதியாகக் கேளு........."

அய்யோ! நான் மாட்டேன்!.........எனக்குப் பயமாயிருக்கிறது.............என்ன வார்த்தை பேசுகிறீர்கள்.........மகா பாவம்!......மனசார நினைக்கவே கூடாத மஹாபாபம்!.........எனக்குப் பயமாயிருக்கு!" என்று திணறினாள்.

பாஸ்கரன் சிரித்தான்; பங்கஜத்தின் பயத்தைக்கண்டு சிரிப்பதாகவே பட்டது. "அப்படி எல்லாம் பயப்படும்படியாக நான் விட்டுவிடுவேனா, பங்கஜி! எனக்குத்தெரியாதா?...... ஒரு கஷ்டமில்லாமல் நான் பார்த்துக்கொள்கிறேன், பங்கஜி கவலைப்படாதே!" என்றான்.

பங்கஜம் அழுதுவிட்டாள்! "வேண்டாம்! வேண்டாம்! எள்று கெஞ்சினாள்.

"வீணாக அதைர்யப்படாதே, கண்ணே! அதெல்லாம் ஒன்று மிருக்காது!" என்றான் பாஸ்கரன். அவளுக்கு ரொம்ப தூரம் 'தெம்பு' சொன்னான்...........

"அய்யோ, ராமா! இந்தப் பேச்சையே விட்டுவிடுங்களேன்! இந்த எண்ணமே வேண்டாமே! உங்கள் காலில் விழுந்து கெஞ்சுகிறேன்! உங்களை ரொம்பவும் கேட்டுக்கொள்கிறேன்—தெரிந்துதான் பேசுகிறீர்களா?......"

என்று அழுகையினிடையே விம்மினாள் பங்கஜம்.

"பங்கஜி! நன்றாகத்தெரிந்துதான் சொல்லுகிறேன் பங்கஜி! அப்படியென்ன நான் அறியாத முட்டாளா? இது விஷயமாக எத்தனையோ புஸ்தகங்கள் படித்திருக்கிறேன்! பல பேர் தம் அனுபவத்தைச் சொல்லியும் கேட்டிருக்கிறேன்! உன் சௌக்கியத்தில்—உன் க்ஷேமத்தில் எனக்கு இல்லாத அக்கறையா, பங்கஜி! இப்போது கூட அதற்காகத்தானே பாடுபட முயல்கிறேன்?"

"ஐயோ? என் சௌக்கியத்தையும், க்ஷேமத்தையும் விட்டுத்தள்ளுங்களேன்! நான் அதற்காகக் கவலைப்படவேயில்லை......ஆனால் வயிற்றிலிருக்கும் பிள்ளையை.........? எத்தனை பேர்கள் ஒரு குழந்தைக்காக ஆயுசு பூராவும் தவமிருக்கிறார்கள், தெரியுமா? ஒரு குழந்தை பிறக்க வேணுமென்று ஒவ்வொருவர் எத்தனையெத்தனையோ தான தர்மங்கள்........"

"அந்தக்கவலை யெல்லாம் எனக்கில்லை, பங்கஜி! உனக்குத்தெரியாது; உன் அழகை மூடி வைக்க—உன் கட்டு விடாவல் காப்பாற்ற—நான் என்ன வேண்டுமானாலும் செய்யத் தயார்!" என்றான் பாஸ்கரன்.

பங்கஜம் 'வேண்டா' மென்பதற்கு என்ன வெல்லாமோ சொல்லிப் பார்த்தாள்; ரொம்ப தூரம் அவனை மன்றாடிக் கேட்டுக்கொண்டாள். ஆனால் பாஸ்கரன் அவள் வார்த்தைகளுக்குத் துளியாவது செவி சாய்க்கவேயில்லை......

'சட்' டென்று கோபம் கொண்டுவிட்ட பங்கஜம் பெண்புலியைப்போலே சீறினாள். கம்பீரமாகத் தலை நிமிர்ந்து, அவள் அவனை அலக்ஷியமாக நோக்கிய பொழுது அந்தப்பார்வையிலே அனல் பாய்ந்தது. "நான் மாட்டேன்! நான் சம்மதிக்கமாட்டேன்; இதற்கு. உங்களுக்குத்தான் படிப்பிருந்தும் புத்தியில்லை! எனக்குமா அப்படி? உடம்பாம், கட்டாம்! தளர்ச்சியாம்! அழகாம்! காப்பாத்தணுமாம்! ரொம்ப நன்றாயிருக்கிறது, உங்கள் யோசனை! வெட்கக் கேடு! என்மேல்தான் பிசகு! என்னைத்தான் சொல்லவேணும்! இவ்வளவு தூரம் உங்களுக்கு இடம் கொடுத்துக் கொண்டே வந்து விட்டேனல்லவா? ஆனால் இதற்கும் உங்களுக்கு இணங்கி அம்பலத்தில் நிற்கத் துணியமாட்டேன்! என்னால் முடியாது! நான் மறுத்துவிட்டால் நீங்கள் என்ன செய்து விடுவீர்கள்?" என்று கொதித்தாள்.

நீ மறுத்துவிட்டால்? இல்லையா? அப்படியானால் தக்ஷணமே நீ என்னிடம் விட்டு வெளியேறி விடவேண்டியதுதான்! அதிலும் சந்தேகமா? அப்புறம் உனக்கும், எனக்கும் இந்த ஜன்மத்தில் மறுபடியும் முகாலோபனம் ஏற்படப் போவதில்லை!" என்று தீர்மானமாகச் சொன்னான் பாஸ்கரன்.

"அக்கரையில்லை! அதையும்தான் பார்த்துவிடுகிறேன்!" என்றாள் பங்கஜம்.

"பார்க்கலாம்!" என்று பாஸ்கரனும் ரௌத்ராகாரமாகச் சீறினான்.

அத்துடன் அந்தக்ஷணத்திலிருந்தே பங்கஜத்துடன், பேச்சு வார்த்தைகளையும், ஸரஸ ஸல்லாபங்களையும் முறித்துக்கொண்டும் விட்டான்.

— 5 —

திடீரென்று ஒருநாள் பங்கஜத்தின் தகப்பனார் பத்மநாப அய்யர், அதாவது, பாஸ்கரனின் மாமனார், அவர்களிடையே வந்து குதித்தார்.

அந்தச் சமயத்தில் அவர் வரவை, பாஸ்கரன் கனவிலும் எதிர்பார்க்கவில்லையென்றே தோன்றியது. அவரைக்கண்டதும், ஒரு நிமிஷம் அப்படியே சொல்லற்று, நின்றுவிட்டான்.

"என்ன, மாப்பிள்ளை! சௌக்கியந்தானே?" என்று பேசிக்கொண்டே அவர் வந்தார். வந்ததும் வராததுமாக இருக்கும்போதே, மறு ரயிலிலேயே அவர் ஊருக்குத் திரும்பப் புறப்பட வேண்டுமென்று துடியாய்த் துடித்தார். அதுவும் பின்னோடு பங்கஜத்தையும், தாம், பிறந்தகம்அழைத்துச்செல்ல விரும்புவதாகப் பத்மநாபய்யர் தெரிவித்த பொழுது பாஸ்கரன் மறுபடியும் திடுக்கிட்டுப் போனான்.

"ஏன்? திடீரென்று அப்படி என்ன விசேஷம் ஊரில்? வீட்டில் ஏதாவது கல்யாணமா?" என்று லோகாபிராமமாகக் கேட்டுவைத்தான்.

பத்மநாபய்யர் சிரித்தார்—"ஆமாம், மாப்பிள்ளை! நம்மாத்தில் கல்யாணம்தான் வரப்போகிறது! வளைகாப்புக்கல்யாணம்!" என்றார்.

பாஸ்கரன் மூன்றும் தடவையாகத் திடுக்கிட்டான்! "வளைகாப்பா!..................யாருக்கு?" என்றான்.

அவர் திரும்பவும் ஒரு மாதிரியாகச் சிரித்தார்— "என்ன, மாப்பிள்ளை! இப்படிக் கேட்கிறீர்கள்! என் பெண்ணுக்குத்தான்—அதாவது உங்கள் பங்கஜத்திற்குத்தான் வளைகாப்பு! உங்களுக்குத் தெரியாதா!" என்றார், விளையாட்டாகப் பரிஹாஸம் செய்கிறவர் போலே.

பாஸ்கரன் முகத்தில் சஹிக்கமுடியாத அசடு வழிந்தது, அங்கேயே ஒரு நிமிஷம் தயங்கினவன்போல் நின்றவன் மறுகணமே இரண்டெட்டில் சமையலறையை அடைந்தான்.

அங்கோ சுவர் ஓரமாக நின்றுகொண்டிருந்தாள் பங்கஜம். அவளைக் கண்டதும், ரௌத்ராகாரமான கோபம் பொங்கியெழப் பற்களை 'நறநற' வென்று கடித்தான். "இதெல்லாம்

உன் 'வேலை' தானே?'' என்று அவளை நோக்கிச் சீறினன்.

பங்கஜம் கம்பீரமாகத் தலைநிமிர்ந்து பாஸ்கரனை நோக்கினாள். சாந்தமயமாயிருந்த அவள் கண்கள் பாஸ்கரனின் கோரப்பார்வையை நேராகச் சந்தித்தன. ''எது என் வேலை?'' என்றாள் நிதானமாகவே.

அந்த அமைதியான குரலைக்கேட்ட பாஸ்கரனுக்குத் தாங்கவேமுடியாமற் போய்விட்டது, கோபம். ''மாய்மாலக்கள்ளி! ஒன்றும் தெரியாததுபோல் நடக்கிறதைப் பார்! அயோக்ய ராஸ்கல்!'' என்று பொங்கினன்.

''அதிகமாக ஒன்றும் பேசவேண்டாம்! விஷயத்தை விளங்கச்சொல்லலாம், முதலில்!'' என்றாள் அமைதியாகவே. அந்தக் குரலைச் செவியுற்ற பாஸ்கரன்கூட ஒரு க்ஷணம் அயர்ந்துபோனன். மறுபடியும், ''ஓஹோ! இத்தனை தூரத்திற்கும் வந்துவிட்டதா?'' என்று படபடத்தான்.

''எது? எத்தனை தூரம்?'' என்றாள் அதிசயிக்கத்தக்க அமைதியுடன். பாஸ்கரனுக்குச் சுறுக்கென்று பட்டது. ''எல்லாம் அதுதான்? உன் அப்பனை இப்பொழுது இங்கே வரவழைத்தது நீ தானே என்று கேட்கிறேன்?'' என்று திணறினன், பேசமுடியாமல்.

''ஆமாம்? தெரியவில்லையா? அதிலென்ன சந்தேகம் இப்பொழுது?'' என்றாள் வெகு அலக்ஷியமாக.

பாஸ்கரனின் ஆவேசம் எல்லை கடந்துவிட்டது. ஓஹோ! அப்படியானல் இந்த க்ஷணமே அவனுடன் புறப்பட்டுப் போய்விடு! இனியும் ஒரு க்ஷணம் இந்த இடத்தில் தாமதித்தாயானல் உன்னைப் பிடரியைப் பிடித்து வெளியில் தள்ளிவிடுவேன்!'' என்றான் தாங்கமுடியாத ஆக்ரோஷத்துடனே.

''உத்தரவு! பின்னேடு போவதற்காகத் தானே இப்போது அப்பாவுக்குக் கடிதம் எழுதி வரவழைத்திருக்கிறேன்! அதற்காக இப்படிக் கத்திக் கூப்பாடு போடுவானேன்? அடக்கமாகவே பேசலாமே? பேசாமல் இங்கேயே தங்கிவிடுவேனென்று நினைத்துவிட்டீர்களா? ....குழந்தை பிறந்ததும் தந்தி அடிக்கச் சொல்கிறேன்; புண்யாகவாசனத்திற்குக் கட்டாயம் புறப்பட்டு வாருங்கள்!'' என்றாள் பங்கஜம் புன்சிரிப்புடனே.

அந்தக்கடைசி வார்த்தைகள் பாஸ்கரனுக்குச் சரியான சவுக்கு! அந்த அடி பொறுக்க மாட்டாமல் திணறினன் அவன். கோல் கொண்டு குத்தப்பட்ட புலியைப் போலே சீறிக்கொண்டு கிளம்பினன். ''சீச்சீ! காமாட்டிக் கழுதை! மூடுவாயை. அதிகப்பிரசங்கி!'' என்று அடக்கமுடியாமல் ஆரம்பித்ததும், பங்கஜம் 'சட்' டென்று குறுக்கிட்டாள்.

''போதும்! வீண் வார்த்தைகளை அனுவசியமாகக் கொட்ட வேண்டாம்! காரியத்துடன் இருந்தால் அதுவே போதுமானது!'' என்றாள்.

அவளை அப்படியே 'கபளீகரம்' செய்துவிட விரும்புகிறவனைப்போல அவளை நோக்கித் தன் விழிகளைப் பயங்கரமாக உருட்டினன். ''சரி சரி! தொலை, சனியனே! இனிமேல் இந்த ஜன்மத்தில் உன் மூஞ்சியில் விழிப்பதில்லை—அதுவும் இத்தனை தூரம் ஆனபிறகு!'' என்று சொல்லிக்கொண்டே 'பளீச்' சென்று வெளியில் சென்று விட்டான்!

பங்கஜம் துக்கம் செறிந்த ஆழ்ந்த பெருமூச்செறிந்தாள். அவள் கண்கள் கலங்கி நின்றன.

— 6 —

அதே தினம் மாலையில் பங்கஜம் தன் பிறந்தகம் போக வண்டி ஏறுவதற்கு முன்னல் பாஸ்கரனின் அறைக்குள் நுழைந்தாள்.

அப்போதுதான் எங்கோ வெளியில் போய்விட்டு உள்ளே நுழைந்தவன் அறையில்காலடி ஓசை கேட்டதும் திரும்பினன். இருவர்கண்களும் ஒரு க்ஷணம் சந்தித்தன.

பங்கஜம்—அவளுக்கு என்ன தோன்றியதோ, என்னவோ 'சட்' டென்று அவன்முன் மண்டியிட்டு, அவனை நமஸ்கரித்துவிட்டு அவன் முழங்கால்களின்மீது சாய்ந்துகொண்டு தலை நிமிர்ந்து அவனை நோக்கினாள்.

கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிய, ''பெண்புத்தியால் ஏதேதோ பிதற்றிவிட்டேன். ஒன்றையும் மனதில் வைக்காமல் என்னை மன்னித்து விடுங்கள். நான் போய் வரட்டுமா?'' என்று கல்லும் கரையும்படி கெஞ்சினாள்.

பாஸ்கரன் வாயே திறக்கவில்லை. அவளைத் திரும்பிக்கூட பார்க்கவில்லை. அவன் பார்வை ஜன்னலுக்கு வெளியே எங்கோ சென்று கொண்டிருந்தது. விறைத்தபடி கல்லாய் நின்றான்.

''கோபித்துக்கொள்ளாதீர்கள்; நான் போய் வரட்டுமா?'' என்று அவன் முகத்தை அண்ணாந்து பார்த்தபடியே விம்மினாள் பங்கஜம்

பாஸ்கரன் அப்போதும் மௌனமாகவே நின்றான் துளியும் ஆடாமல் அசங்காமல்—ஸ்தம்பமாகவே நின்றான்.

பங்கஜம் நீண்ட பெருமூச்செறிந்தாள். மறுபடியும் அவன் கால்களில் சிரம்பட நமஸ்கரித்துவிட்டு மெதுவாக எழுந்து நின்றாள்.

— 7 —

பங்கஜம் பிறந்தகம் போனபிறகு—ஆரம்பத்தில் அவனிடமிருந்து, பாஸ்கரனுக்கு

அடிக்கடி வெகு உருக்கமான கடிதங்கள் வந்து கொண்டே இருந்தன. தான் சொன்னதையும் செய்ததையும் மறந்து, தன்னை மனப்பூர்வமாக மன்னித்து, திரும்பவும் தன்னை ஏற்றுக்கொள்ளும்படிக்கும் ஒவ்வொரு கடிதத்திலும் கல்லும் கரையும்படி எழுதிக்கொண்டேயிருந்தாள். 'இனிமேல்' ஒவ்வொரு விஷயத்திலும் அவன் இஷ்டப்படியே நடந்து அவனுக்கு 'எல்லா விதத்திலும்' திருப்தியளிப்பதாகவும், நடந்ததை மறந்துவிடும்படியும்' கூட எத்தனையோ தடவைகள் மன்றாடிக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

ஆனால் பாஸ்கரனின் இரும்பு உள்ளம் மாத்திரம் இம்மியும் இளகியதாகத் தெரியவில்லை. ஒரு கடிதத்திற்காவது அவன் பதிலும் எழுதவில்லை.

பங்கஜம் சொன்னபடியே அவள் பிறந்தகம் சென்ற சில மாதங்களுக்கெல்லாம், அவளுக்குப் 'பிள்ளைக் குழந்தை' பிறந்திருப்பதாகவும், தாயும், குழந்தையும் சௌக்கியமென்றும், பாஸ்கரனுக்குத் தந்தி வந்தது. ஆனால் பாஸ்கரன் 'புண்யாகவாச'னத்திற்கும் போகவில்லை; சீமந்தமும் நடக்கவில்லை. பங்கஜமும் பிறந்தகத்திலேயே இருந்துவந்தாள்.........

முதல் ஒரு வருஷம் வரையில் அவளும் பாஸ்கரனுக்கு விடாமல் கடிதம் எழுதிக்கொண்டு தானிருந்தாள். அலுப்பு சலிப்பென்பதே இல்லாமல்தான் எழுதினாள். ஆனால் அவன் அவளுக்குப் 'பதில்' என்று அத்தனை நாளிலும், ஒரு வரிகூட எழுதாமல் இருக்கும்போது அவள் மட்டுமே அவனுக்குத் தன் ஆயுள் முடியும்வரையில் எழுதிக்கொண்டேயிருப்பது என்பது ஸாத்யமாகுமா? பலன் கிடைக்காத ஒரு காரியத்தை எத்தனை நாளைக்குத்தான் பொறுமையுடன் செய்துகொண்டிருக்க முடியும்? பங்கஜமும் மனுஷ்ய ஜன்மம் தானே? ஆகவே சிறிது சிறிதாக அவள் கடிதம் எழுதுவது குறைந்து கொண்டே வந்து நாளடைவில் அடியுடன் நின்றுவிட்டது. அப்படி அடியுடன் நின்று போனதற்குக் காரணம் பங்கஜத்தின் தகப்பனார் தான்.

"என்னடீ, இது, பங்கஜம்! நானும்தான் 'போகிறது, போகிறது' என்று இருக்கிறேனென்றால், நீயும் புத்தியில்லாமல் இருக்கிறாயே? நீயும்தான் யோசிக்காமல், வருஷக் கணக்கில் அவனுக்குக் கடிதம் எழுதிக்கொண்டேயிருக்கிறாய்?—அந்த நாய் பதில் என்று உனக்கு ஒரு வரியாவது எழுதினானா? முட்டாள்!—நீ என்னடா வென்றால், உன் ஆயுஸ

மேதாஸ்

மஸ்தானா மாத்திரைகள்

சிறந்த டானிக்

மேல்நாட்டு வைத்திய முறை, நமது ஆயுர்வேத முறை இவைகளை ஒருங்கே சேர்த்து தயாரிக்கப்பட்டுள்ளது

பலஹீனம், வாத வலிகள், மன ஓய்வு, தலைவலி, அஜீர்ணம், மலச்சிக்கல், காசநோய், சிற்றின்பத்தில் பலஹீனம்

இவைகளுக்கெல்லாம் கைகண்ட ஔஷதம்

இன்றே ஆரம்பியுங்கள்

கிடைக்குமிடம்:—

K. S. மேதா & கோ.,

மருந்து வியாபாரிகள்,

250, சைனா பஜார் (மாடி), சென்னை.

பூராவுமே, அவனுக்கு எழுதிக்கொண்டிருக்கத் துளியாவது அலுக்கமாட்டாய் போலிருக்கிறதே? கிடக்கிருன், அல்பப் பயல்! விடு. நீ அவனுக்கு எழுதுவதையும் இத்துடன் நிறுத்தி விடு!'' என்று ஒருநாள் ஒரே அடியாக உத்தரவுபோட்டுவிட்டார்.

அதன் பிறகு ஒரு வருஷம் கழிந்துவிட்டது. பாஸ்கரனும், ''ஏண்டா, கருடா!'' என்று கேட்பதாயில்லை............

பங்கஜமும், ''இன்று வருவான்—நாளைக்கு வருவான்!—எப்படியும் ஒருநாள் கட்டாயம் வந்தே தீருவான்!''என்று தினமும் எதிர்பார்த்து எதிர்பார்த்து, சொல்லொண்ணுத ஏமாற்றமடைந்து, ஏங்கிப் போனுள்.

ஆனுல் பாஸ்கரன் என்னவோ அவள் இருக்கும் பக்கமும் திரும்புவதாகக்கூட காணேம்! அவள் நினைவுதான் அவனுக்கு இருக்கிறதா, இல்லையா' வென்பதே சந்தேகத்திற்கிடமாகிக் கொண்டு வந்தது...........

பங்கஜத்தின் மனசை இரவு பகலாக உறுத்திக்கொண்டேயிருந்தது. ''நாம் ஏன் இந்தச் சங்கடத்தில் சிக்கிக்கொண்டோம்? 'வந்தது வருகிறது—ஆனது ஆகட்டு'மென்று பேசாமல் அப்போதே அவர் இஷ்டப்படி நடந்துகொண்டிருக்கக்கூடாதா? நாமாகவே தானே நம் தலைக்குக்கொள்ளியைத் தேடிக்கொண்டோம்? என்று இரவு பகல் தூக்கமின்றி வருந்த ஆரம்பித்துவிட்டாள், உள்ளூற. ''இதற்கு ஒரு முடிவு எப்போது காணுவேனே!'' என்று ஏங்கத் தொடங்கிவிட்டாள். உள்ளூற உருகியே போனுள். பின்?.........பிறந்தகத்தோடு ....'வாழாவெட்டியாக இன்னும் எத்தனை வருஷங்கள்தான் காலம் கடத்துவது?............

அந்த 'வாழாவெட்டி' என்னும் சொல் அவள் நெஞ்சை அறுத்தது. அந்த ஊர் பூராவுமே அவளை அவ்விதம் குறிப்பிட்டு அழைக்க ஆரம்பித்துவிட்டது......'நல்ல பட்டப் பெயர்' என்ற வேதனை அவளை உள்ளுக்குள் அரிக்கத் தொடங்கிவிட்டது. என்ன செய்வாள், பாவம்!.........

அப்படியிருந்து இப்படியிருந்து தன் தகப்பனுரைத்தான் அணுகினுள்—''இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்படியே காலம் தள்ளுவது அப்பா? எனக்கே சங்கடமாயிருக்கிறது அப்பா! நீங்களாகத்தான்.........என்னை ......அவரிடம்......அழைத்துச் சென்று விட்டு விடக்கூடாதா?'' என்ருள், கண்களில் நீர் சோரக் கெஞ்சினுள்.

தன் மாப்பிள்ளையின் எதிரில் ஒன்றுமே சொல்லத் தைர்யமில்லாத பத்மநாபய்யர் அப்போது ருத்ர ஸ்வரூபமே எடுத்துவிட்டார்! பாஸ்கரனிடம் தன் சக்தியைக் காட்ட முற்படாத அவர் அப்போது தம் சக்தி அனைத்தையுமே பெண்ணிடம் பிரயோகிக்க ஆரம்பித்து விட்டார்,

''பங்கஜம்! என்ன! நீயா இப்படிச் சொல்கிருய்? நீயாக அவனிடம் போவதா! அவன் உன்னை அழைக்காமல் நீயாகவா? அதெப்படி முடியும், பங்கஜம்? சொப்பனத்தில்கூட நினைக்காதேயம்மா? உனக்கு இங்கேதான் என்ன குறைவு செய்துவிட்டேன், அம்மா? ஒன்றுமில்லையே? கவலைப்படாதே பங்கஜம்! உன் ஆயுஸு பூராவுமே உன்னையும் உன் குழந்தையையும் வைத்துக்கொண்டு, ஒரு குறைவுவராமல் போஷித்துப் பராமரிக்க நான் தயார்! கொஞ்சமும் கவலைப்படாதேயம்மா?........... இத்தனை நாளைக்குள் அவன் ஒருதடவையாவது இந்தப் பக்கம் திரும்பினுனு? ஒரு வரி உனக்கு எழுதினுனு! அல்பன்! துரோஹி! நீ மட்டும் அவனை நினைத்து நினைத்து உருகுகிருயே பங்கஜம்! உனக்கு இப்படிப்பட்ட கடுந் தண்டனை அவன் அளிக்கும்படி நீதான் அவனுக்கு அப்படியென்ன தீங்கு செய்துவிட்டாயம்மா? அப்படி என்ன மன்னிக்கமுடியாத குற்றம் செய்துவிட்டாய் என்று கேட்கிறேன்? உன் வயிற்றுப் பிள்ளையை நீ காப்பாற்றிக்கொண்டது குற்றமா? கொலைப்பாதகன்! தன் வயிற்றுச் சிசுவையே கொல்ல நினைத்துவிட்டானே, சண்டாளன், மகாபாபி! இன்னும் அவன் என்னதான் செய்யக் காத்துக்கொண்டிருக்க மாட்டான்? நீ போகக்கூடாது, பங்கஜம்! அவன் கூப்பிடாமல் நீயாகவே அவன் எதிரில் போய் நின்ருயானுல்......ஒருவேளை......ஆவேசம் வந்தவன்மாதிரி......உன்னையே கொன்று போட்டாலும் கொன்று போட்டுவிடுவான்! கிராதப்பயல்! நான் 'என்னவோ' வென்று தான் நினைத்துவிட்டேன்......நான் மாட்டேன்! என்றெல்லாம் குதியாய்க் குதித்தார். பங்கஜத்திற்கு, பாவம், 'அனுகூலச்சத்துரு'வாகி விட்டார்!

பேதை என்ன செய்வாள்? மேலே பேசவாயில்லை அவளுக்கு. கண் கலங்கினுள். ''வீணுக அவரை ஒன்றும் சொல்லாதீர்கள் அப்பா!...... என் தலையில் இப்படி எழுதியிருக்கும்போது ....அதற்கு யார் தான் என்ன செய்யமுடியும்?'' என்று துக்கம் தாங்கமுடியாமல் விக்கினுள்.........

ஆனுல் பத்மநாபய்யர் 'உலைவாயை மூடினுலும் ஊர்வாயை மூட'முடியுமா? நாலுபேர் நாலு தினுஸாகப் பேசிக்கொண்டார்கள். அந்தப் பெண்ணுக்குத் தன்புருஷனிடம் போக இஷ்டம்தானும்! ஆனுல் அவள் அப்பன்தான் அவளைப் போகவொட்டாமல் 'வாழாவெட்டி' யாக்கி வைத்துக்கொண்டிருக்கிருனும்! என்று ஊர்வாய் சொல்லத் தொடங்கியது!

கடைசியில் பத்மநாபய்யர் அந்த ஊர்வாய்க்குப் பயப்படத்தான் வேண்டியிருந்தது!

— 8 —

ஐந்து வருஷங்கள் உருண்டோடி விட்டன. திடீரென்று பாஸ்கரனுக்கு ஒருநாள் தந்தி

ஒன்று வந்தது. பத்மநாப அய்யர் தான் அனுப்பியிருந்தார். 'பங்கஜத்தின் உடம்பு ரொம்பவும் அபாயகரமாக இருப்பதாகவும், தன் கடைசி காலத்திற்குள்ளாவது அவள் அவனை ஒருமுறை பார்த்து அவன் மன்னிப்பைப் பெறவேண்டுகிறதாகவும், உடனே புறப்படவேணு'மென்றும் தந்தியில் கண்டிருந்தது.

அப்போதுதான் பாஸ்கரனின் உள்ளம் ஒரு தடவை உலுக்கி எடுக்கப்பட்டது. அங்கமெல்லாம் பதறின. பாஸ்கரன் என்னதான் வைராக்யத்துடனிருந்தாலும் பங்கஜத்தின் அந்தப் பங்கஜ வதனத்தை அவனால் ஒரு க்ஷணமும் மறக்கமுடியுமா? அவனை ரொம்ப தூரம் அடிமைப்படுத்தி வைத்திருந்த அவள் அழகை அப்போதும் அவனால் அலக்ஷியப்படுத்தி ஒதுக்கிவிட முடியுமா?

தவிக்கும் உள்ளத்துடன் பாஸ்கரன் மறு ரயிலிலேயே புறப்பட்டுவிட்டான் என்று சொல்லவும் வேண்டுமா?

ஃ ஃ ஃ

தன் மாமனார் வீட்டு வாசற்படியில் பாஸ்கரன் அடியெடுத்து வைத்ததுமே அவன் நெஞ்சு படபடத்தது. கைகால்கள் நடுங்கின. தேகமாத்யந்தம் உதறியது. 'அவள் வாழ்வை அனியாயமாக நாம்தான் பாழ்படுத்தி விட்டோம்' என்ற எண்ணம் திடீரென்று அவன் உள்ளத்தின் ஆழத்திலே 'பளிச்'சிட்டபொழுது பாஸ்கரனுக்கே துக்கமும், வேதனையும் தொண்டையை அடைத்தன.' பங்கஜம் இப்போது எப்படியிருக்கிறாளோ என்றெண்ணிக் கொண்டே தயங்கித் தயங்கி உள்ளே நுழைந்தான்.

வீடு 'கிச்'சென்றிருந்தது எங்கும் ஒருவரையும் காணவில்லை. அவனை எதிர்கொண்டழைக்கக்கூட மனிதர்கள் இல்லையென்றே இருந்தது. பாஸ்கரன் நெஞ்சு 'திக்திக்'கென்று அடித்துக் கொண்டது. நெற்றியில் வியர்வை துளித்தது.

கூடத்தில் நுழைந்தவன் தயங்கி நின்றான்...

சமையல் அறைப்பக்கத்திலிருந்து யாரோ ஓடிவருகிற காலடி ஓசை திடீரென்று கேட்டது......

அந்தத் திசையில் திரும்பினான் பாஸ்கரன்.

மறுக்ஷணம் கூடத்திற்குள் ஐந்து வயதுச் சிறுவன் "திடுதிடு" வென்று ஓடிவந்தான்.

ஹாலில் தனக்கு முன்பின் அறிமுகமில்லாத அன்னியன் யாரோ நின்றுகொண்டிருப்பதைக் கண்ட அந்தக் குழந்தை சட்டென்று நின்று பாஸ்கரனை வெறித்து நோக்கியது.

குழந்தையைக் கவனித்த பாஸ்கரனுக்கு மறுபடியும் நெஞ்சு படபடத்தது. அவனை அப்படியே உரித்து வைத்ததுபோலிருந்தது எதிரில் நின்றுகொண்டிருந்த அக்குழந்தை.

'ஒருகால் தன் குழந்தையாகத்தானிருக்குமோ'வென்ற எண்ணம் திடீரென்று எழுந்து அவன் உள்ளத்தைத் தாக்கியபொழுது ஒரு கணம் மலைத்தான்.

மறுகணமே விவரிக்கமுடியாத வெட்கமும், அவமான உணர்ச்சியும் பாஸ்கரன் உள்ளத்தைப் பற்றிக்கொண்டன. முகம் ரத்தம்போல் சிவந்துவிட்டது......

'துறுதுறு' வென்றலையும் கண்கள்கொண்ட, 'குறுகுறு'த்த முகத்துடனே எதிரில் அழகாக நின்றுகொண்டிருந்த அக்குழந்தையை அப்படியே வாரி அணைத்துக்கொள்ளவேண்டும் போலிருந்தது. குழந்தையை என்னவோ கேட்க வாயெடுத்தான் பாஸ்கரன்.

குழந்தையின் குரல் முந்திக்கொண்டுவிட்டது.

"என்ன ஒனும், மாமா?......நீங்க ஆரு மாமா?" என்று மழலைச் சொல்லில் வினவியது குழந்தை.

பாஸ்கரனின் உள்ளம் ஏனோ சிலிர்த்தது— "ஆத்திலே...ஒருத்தரும் இல்லியா, பாபா?" என்று நடுங்கிய குரலில் கேட்டான்.

"பாட்டி—தாத்தா அல்லாரும் கோலுக்குப் போயிருக்கா! அம்மாதான் இருக்கா! ஆமாணம் வாசிச்சுண்டு — உக்காச்சுண்டிருக்கா!" என்று அவன் முகத்தைப் பார்த்தபடியே

சேலத்தில்

கல்யாணப்பட்டு ஜவுளிரகங்கள்

வாங்கச் சிறந்த இடம்

ராம விலாஸ்

396, கடைவீதி சேலம்.

★

Proprietors:

S. N. Ramaswamy Chetty & Bros.

5

சொல்லியது குழந்தை. அத்துடன் தன் அம்மா இருக்கும் இடத்தையும் காட்டுவது போலே பக்கத்து உள்பக்கம் தன் சின்னஞ் சிறுவிரலைச் சுட்டிக் காண்பித்தது.

"ராமாயணம் வாசித்துக் கொண்டிருக்கிறாளே—ஒருவேளை பங்கஜம் தானோ?...அதுவும் உடம்பு சரியாக இல்லாதபோது கூடவா? அதுவும் அபாயகரமான ஸ்திதியிலுமா?......" என்று பாஸ்கரன் யோசித்துக் கொண்டிருக்கும்போதே மறுபடியும் யாரோ வருகின்ற காலடியோசை கேட்டது......

சப்தம் வந்த திக்கில் திரும்பிப் பார்த்த பாஸ்கரன் அப்படியே பிரமித்துப்போய் நின்றுவிட்டான், பார்த்ததுபார்த்த படியே!

சாக்ஷாத் பங்கஜமே அங்கே நின்றுகொண்டிருந்தாள்! தலையைப் பின்புறம் கோதிச் சொருகிக் கொண்டு, நெற்றியில், பச்சென்று பசுமையுடன் விளங்கும் மஞ்சள் குங்குமத்துடன், நீலப்பட்டாடையைக் 'கொசுவம்' வைத்துக் கொண்டு, சாக்ஷாத் மஹாலக்ஷ்மி மாதிரியே தோன்றினாள். அப்பொழுதுதான் பூஜையிலிருந்து எழுந்து வருபவள் போலிருந்தது.

பாஸ்கரனைக்கண்ட பங்கஜம் பேச நாக்கு எழாமல் அவனைப் பார்த்தபடி ஒரு நிமிஷம் மலைத்து நின்றுவிட்டாள்! கண்களில் நீர் மல்கிப் பார்வையை மறைத்தது.

அடுத்த க்ஷணம் "பங்கஜி!" என்று அலறிவிட்டான் பாஸ்கரன். விக்கி விக்கி அழுதுகொண்டே ஓடோடியும் வந்து அவன் காலடியிலே 'தடா'லென்று குப்புற விழுந்துவிட்டாள்! பங்கஜம்.

"என்னை மன்னித்து ஏற்றுக் கொள்ளுங்கள்! என்னைத் தயவு செய்து மன்னியுங்கள்! பெரிய மனது பண்ணி இந்த ஏழையை ஏற்றுக் கொள்ளுங்கள்!" என்று அவன் காலடியில் கிடந்து விம்மினாள்.

"ஏன் அழுகிறாய்' பங்கஜி? எழுந்திரு பங்கஜி! உன் உடம்புக்கு என்ன?" என்று அன்பொழுகும் குரலில் தடுமாறியவனாய், ஆர்வத்துடன் அவளைப்பிடித்துத் தூக்கி நிறுத்தினான் பாஸ்கரன்.

அவள் முகவாய்க் கட்டையைக் கையில் ஏந்திக்கொண்டு முகத்தை நிமிர்த்தியவனாய், உடம்பு தேவலையா, பங்கஜீ?" என்றான்.

பங்கஜம் முதலில் பதில்பேசாமல் தலைகுனிந்துகொண்டாள். பின்னர் அபரிமிதமான வருத்தத்தின் காரணத்தினால் தாங்கமுடியாத விக்கல் விம்மல்களிடையே, தலைகுனிந்தபடியே—"என் உடம்புக்கு ஒன்றுமில்லை.........பொய் சொன்னேம்! நான்தான்.........அப்பாவை......... அப்படித் தந்தியடிக்கச் சொன்னேன்!.........இந்தத் தடவையும் உங்களை ஏமாற்றி விட்டேன்,



பாவி!.........ஆனால்.........உங்களை விட்டால் எனக்கு வேறு கதியேது?......உங்களை அனுக எனக்கு வேறு வழியுமில்லை!.................. எனக்கு மன்னிப்பே கிடையாதுதான்! மகா பாவிநான்!.........ஆனாலும் உங்கள் மனசு ஒருவேளை என்னை நேரில் பார்த்தால்.........இளகாதா வென்று.........' என்று அழுதுகொண்டே மறுபடியும் பாஸ்கரன் காலடியில் நெடுஞ்

சாங்கடையாக விழுந்து, அவன் பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, "என்னை மன்னியுங்கள்! மன்னித்து மறுபடியும் ஏற்றுக் கொள்ளுங்கள்!" என்று பரிதாபகரமாகப் புலம்பினாள், பங்கஜம்.

பாஸ்கரனுக்குத் தாங்க முடியாத துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டு வந்தது. கம்மிய குரலில்—"இதில்நான் உன்னை மன்



னிப்பதற்கு என்ன இருக்கிறது, பங்கஜி?—நான்தான் முட்டாள்; முரடன்! என் அசட்டுத்தனத்தை நீதான் மறந்துவிடவேண்டும் பங்கஜி, எழுந்திரு!" என்று அன்புடன் சொல்லிக் கொண்டே பங்கஜத்தை மறுபடி இரு கைகளினாலும் தூக்கிநிறுத்தி, தனது படபடக்கும் நெஞ்சுடனே அணைத்துக்கொண்டான்.

இத்தனை நேரமும் அவ்வளவையும், அதியார்ச்சத்துடன் கவனித்துக்கொண்டே அங்கேயே நின்றுகொண்டிருந்த அக்குழந்தை விழிகளில் தேங்கி நின்ற வியப்புடனே, பங்கஜத்தைப்பார்த்து, அம்மா நீ ஏம்மா அழறே?...... இந்த மாமா ஆரு?" என்றது.

அப்போது தான் அதுவும் அங்கிருப்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். 'சட்' டென்று தங்களைச் சமாளித்துக்கொண்டார்கள். வதனத்தில் தோன்றிய புன்னகையுடன் 'பளிச்' சென்று குழந்தையிடம் பாய்ந்து சென்றபங்கஜம், அதனிடம் மண்டியிட்டு, இரு கைகளாலும் மார்புறத் தழுவிக் கொண்டாள்.

'புஸ்' ஸென்று உப்பியிருக்கும் அதன் அழகான பளிங்குக்கன்னத்தில் தன் மிருதுவான கன்னத்தை அன்புடன் தேய்த்துக் கொண்டே, 'நான் அழல்லேடை, என்ராஜா! சிரிக்கன்னு சிரிக்கிறேன்—இதோ பாரு—சிரிக்கறேன்!" என்று "கல கல" வென்று ஆனந்தமாகச் சிரித்தாள். கண்களிலிருந்து "பொல பொல"வென்று வடித்த கண்ணீர் குழந்தையின் மார்பில் விழுந்து அதன் சட்டையை நனைத்தது.

பிறகு அதன் முகத்தைத் தன் பக்கமாகத் திருப்பி, எல்லை மீறிய வாத்ஸல்யத்துடனே, "என்ராஜாக்கண்ணு! அப்பா எங்கே? அப்பா எங்கே?ன்னு இத்தனை நாளும் என்னை நச்சரித்துக்கொண்டிருந்தயே? இதுதான் உன் அப்பா! நன்னாப்பார்த்துக்கோ!" என்று பாஸ்கரனைச் சுட்டிக் காண்பித்தாள். "ஊக்குப் போயிருந்தா! இப்பொ கோந்தையைப் பாக்க வந்துட்டா! இன்னமே 'மம்மடி'யும் அப்பாவை 'ஓ' போக விட்டுடாதே? கெட்டியாப் பிடிச்சுக்கோ!" என்று ஆனந்தமாகக் கொஞ்சினாள்.

"உம்?" என்று கேட்டுக்கொண்டே குழந்தை பாஸ்கரனின் பக்கம் தன் மகிழ்ச்சி நிறைந்த பார்வையைத் திருப்பியது.

பாஸ்கரன் முகம் 'குபீ'ரென்று சிவந்தது. என்னவோ ஒன்றுவந்து நெஞ்சை அடைத்துக்கொள்ள, "உம் பேரு என்ன பாப்பா?" என்று கேட்டுவைத்தான் சிரமப்பட்டு.

"எம் பேரு........ஆமச்சந்தன்!" என்று சிரித்தது குழந்தை.

"அட, கண்ணே!" என்று அளவற்ற ஆசையோடு குழந்தையை மீண்டும் தன் மார்புடன் அணைத்துக்கொண்டாள் பங்கஜம்.

— 9 —

இப்போதெல்லாம் பாஸ்கரனும், தினந்தோறும், வைதிக பக்தி சிரத்தையுடனே சந்தியாவந்தன ஜபதபாதிகள் செய்வதுடன் ராமாயண பாராயணமும் ஒருநாளும் தவறுவதில்லையென்றால் அதில் ஆச்சர்யப்படுவதற்கு என்ன இல்லை?

501
SPECIAL
HOUSEHOLD SOAP
SPECIALLY MADE FOR
501 ஸ்பெஷல்
வீட்டிற்குரிய சோப்பு
மெல்லிய ஆடைகள்
விஷயத்தில் பிரத்-
தியேக ஜாக்கிரதை
வேண்டும்
A TATA PRODUCT
டாம்கோ விற்பனை இலாகா
19, வாணியவீதி, P. B. நெ. 31
சென்னை.

தையல்கார குமரசாமி

ரா. வீழிநாதன்

ஸகவாஸ தோஷம் என்பது ஒரு விசித்திரப் போக்கு. பூனையொன்று நம் வீட்டில் புகுந்து எலிகளைப் பிடித்துக் கடித்து, அசிங்கப்படுத்துகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதைக்கண்டால் நமக்குக் கட்டோடு பிடிப்பதில்லை. நம்வீட்டில் நுழையாதபடி அடித்து விரட்ட முற்படுகிறோம். ஆனால் அதே பூனை, தெருவைத் தாண்டி எதிர்த்த வீட்டிற்குப் போகும் முயற்சியில் ஒரு மோட்டாருக்கடியில் சிக்கி மரித்துவிடுமாகில், நம் மனத்துள் அனுதாபம் கசிய ஆரம்பிக்கிறது. எங்கிருந்தோ தெரியவில்லை, நம் உள்ளத்துள் அதன்பால் ஒருவிதப் பற்றுதல் உதித்து விடுகிறது. இயற்கைக்கு விரோதமானதாக அப்பற்றுதல் இருக்குமாகில், உள்ளக் கிடக்கையிலேயே அது அமுங்கி மறைந்துவிடுகிறது. இயற்கைக்கு ஒத்ததாக இருக்குமாகில், பெருக்கு எடுத்து ஓட ஆரம்பிக்கிறது. உயிருடன் இருக்கும்பொழுது நமது வெறுப்புக்குக் காரணமாயிருந்த அதே பூனை, மரித்ததும் அனுதாபத்திற்குப் பாத்திரமாக ஆகிவிடுகிறது. இதனால் விரோதபாவம் என்பது மரணத்திற்குப் பின் அழிந்துவிடுகிறது. வேறு ஒருபுத்துணர்ச்சி மனத்துள் புகுந்துகொள்ளுகிறது. இல்லாமை என்பதும் இருப்பு என்பதும் கலந்து அத்வைத வாதமாக மாறிவிடுமாகில் ஏற்படும் அந்த உணர்ச்சியை, அன்பு, அனுதாபம், கருணை, என்றெல்லாம் பாத்திரத்திற்குத் தக்கவாறு குறிப்பிடுகிறோம் என்பது என தபிப்பிராயம். அதே பூனை—அசிங்கம்செய்து நமதுள்ளத்தில் வெறுப்புணர்ச்சியை உண்டு பண்ணின அதே பூனை, மரித்தபின் அனுதாபத்தை நமது உள்ளத்தில் வரவழைத்து விடுகிறதல்லவா! இதற்கெல்லாம் காரணம் ஸகவாஸ தோஷந்தானே!

இன்று என்னுள்ளம் துயரமாயிருக்கிறது. தையல்கார குமரசாமியைக் கண்டால் எனக்குச் சிறிதும் பிடிக்காது. அவன் வீட்டிற்கு வந்திருக்கிறான் என்று தெரிந்தால் என் கோபத்திற்கு ஒரு எல்லை இராது. அதே குமரசாமி இன்று அடுத்த தெருவில் செத்துக் கிடக்கிறான் என்ற செய்தியைக் கேட்டதும் தான் என்னுள்ளம் துயரமயமாகிவிட்டது.

சிறிது நேரத்திற்கு முன்புதான் அவன் என் வீட்டிலிருந்து கிளம்பிப்போனான். 'தள்ளாத காலத்தில் ஏன் தள்ளாடிக்கொண்டு வருகிறாய்? வீணாக அலையாதே, குமரசாமி, ஊர் கெட்டுக்கிடக்கிறது' என்று எவ்வளவோ சொல்லிப்பார்த்தேன். 'இன்று குழந்தைக்குக் குடுமி வைக்கப்போகிறோம்' என்ற விஷயம் தெரிந்ததும் அவனால் வராமலிருக்க முடியவில்லையாம். தள்ளாடிக்கொண்டு எப்படியோ வீட்டிற்கு வந்துவிட்டான்.

மூன்று நாட்கள், எங்கள் வீட்டுச் சிறு அறையொன்றில் உட்கார்ந்து குழந்தைகளுக்கு உடை தைத்தான். இரவு வேளைகளில் மெதுவாகத் தன் வீட்டிற்குப் போய்விடுவான்.

'குமரசாமி! வேலையிருக்கும் வரையில் நீ வீட்டுக்குப் போகவேண்டாம். இங்கேயே இரு.' என்று என் தம்பி எவ்வளவோ சொல்லிப் பார்த்தான்.

ஆனால் அவன் சிரித்த வண்ணம், 'குழந்தை, வீட்டுக்குப் போகாமலிருக்கமுடியுமா! வீட்டிலே போயிப் படுத்தாத்தான் எனக்கு நிம்மதியாத் தூக்கம் வரும்' என்று சொல்லிப் போய் விட்டான்.

எங்களுக்கு அவனிடம் விசேஷ வெறுப்புத் தான். நான் தம்பியிடம் "உனக்கென்ன! அவன் போனாப் போகட்டுமே. சொல்றதைக் கேட்கமாட்டேனென்கிறான்" என்று சொன்னேன்.

அக்காலத்தில் எங்களுக்குக் குமரசாமியைக் கண்டாலே எரிச்சல். 'இவன் செத்துத் தொலையக் கூடாதா' என்று கடவுளை வேண்டிக் கொள்ளுவோம். முதன் முதலில் அவனைப் பார்த்தது இன்னும் நன்றாக நினைவிலிருக்கிறது. எனக்கு ஏழுஎட்டு வயதிருக்கும். தம்பி இன்னும் சிறியவன். அப்பொழுது குமரசாமி நடுத்தர வயதினனாக இருந்தான். தாடி மீசையெல்லாம் நரைத்திருக்காது. அப்பாவையும் தாத்தாவையும் காணவேண்டுமென்று வாசலில் பழியல் கிடப்பான். வேலைக்கென்று வருவானாகில் நன்றாக இருட்டும்வரை ஏதாவது ஊசியை வைத்துக்கொணடு தைத்துக்கொண்டே இருப்பான். நாலைந்து நாட்கள் விடாமல் வந்து ஏதாவது தைப்பான். அப்புறம் சில காலத்திற்கு மறைந்து விடுவான். அவன் விரல்களின் மத்தியில் பிரகாசிக்கும் ஊசியும், அணிந்திருக்கும் கவசமும் இன்னும் என் கண்கள் முன்பே நிற்கின்றன.

நானும் பெரியவனானேன். தம்பியும் பெரியவனானான். குமரசாமி கிழவனானான். எங்கள் வீட்டில் ஒருவனுக்குக் கலியாணம், இன்னொருவனுக்குப் பூணூல், மற்றொருவனுக்குக் குடுமி வைத்தல், இன்னுமொருவனுக்குக் காது குத்தல் என்று இதுமாதிரி ஏதாவது விசேஷங்கள் நடந்தவண்ணமிருக்கும். எல்லா விசேஷங்களிலும் குமரசாமியைப் பார்த்துக்கொள்ளலாம். அவன் வரத் தவறியதே இல்லை,

இம்மாதிரி விசேஷ காலங்களில் அவன் கூலி வாங்கிக்கொள்வதே இல்லை. கூலியை விட இரண்டு மடங்கு அதிகமாக இனாம் அடித்துக் கொண்டு போய்விடுவான்.

நான் காலேஜில் படித்துக்கொண்டிருந்த காலம். கோடை விடுமுறை. வீட்டிற்கு வந்திருந்தேன். ஒரு நாள் மாலை, குமரசாமி அப்பாவிடம் வந்து, ஒரு கும்பிடு போட்டுவிட்டு, 'எசமான் இரண்டுநாளா ஒருபிடி சோத்துக்கு வழியில்லைங்க: ரொம்பக் கஸ்டத்திலே இருக்கேனுங்க. ஏதாவது வேலை கொடுத்து நீங்கதான் காப்பாத்தணுமுங்கோ. உங்களைத்தான் நம்பிக்கிட்டிருக்கேன்' என்றான். 'நம்மீது இந்த ஆபத்து வந்துசேருமோ' என்று ஐயமுற்றேன். முதல் நாள்தான் கோட், ஷர்ட், ஸூட் இதற்கெல்லாம் துணி வாங்கி வந்திருந்தோம். அப்பாவும்—அவர் 'ஷட்கோட்' போட்டுக்கொள்வது வழக்கம்—தமக்கெனத் துணி வாங்கி வந்திருந்தார். தம்பிக்கும் 'கோட்' தைக்கத் துணி வாங்கி வைத்திருந்தது. அப்பா உள்ளே சென்று துணிமூட்டையைக் கொண்டு வந்து குமரசாமியின் எதிரில் போட்டார். அவன் கண்களில் ஒளி வீசிற்று. அண்ணன் தம்பி எங்களிருவர் கண்களிலும் கண்ணீர் சுரந்தது, அவன் பாய்விரித்து வேலைக்கமர்ந்துவிட்டதைக் கண்டதும்.

'மாடர்ன் டைலரிங் ஹௌஸி'ல் தைக்க வேண்டுமென்று 'பிளான்' போட்டிருந்த எங்கள் மனக்கோட்டை தகர்த்தெறியப்பட்டது. எங்கள் மன வருத்தத்தைக் கண்ணுற்ற தந்தை, அவனது முன்னிலையிலேயே எங்களை அதட்டினார். நாங்கள் தலைகுனிந்தோம். உள்ளே சென்றுவிட்டோம்.

சிறிது நேரத்திற்கெல்லாம், அப்பா உள்ளே வந்து எங்களைச் சமாதானப்படுத்த ஆரம்பித்தார். 'பாவம்! அவன் கிழவன்தானே. பார்த்தா இரக்கமாயில்லை? நம்மை நம்பித்தானே அவன் பிழைக்கிறான். இவன் அப்பன் கூட நம்ப வீட்டுச் சோத்தைத் தின்னுதான் வயிறுவளர்த்தவன். அப்போ நாம் இவனைக் கைவிட்டுவிட்டா,அப்புறம் எங்கேபோவான்?'

'நாங்க கைவிடச் சொல்லலையே! சாப்பிட வெணுங்கறது கொடுங்கோ. இவனிடம் துணிமணிகளைக்கொடுத்து வீணாய் அடிப்பானேன்?' என்றான் என் தம்பி.

அப்பா வருத்தம் தோய்ந்த குரலில், நீங்களெல்லாம் ஷோக் பேர்வழிகள். இவன் தைச்ச சட்டையைப் போட்டுப்பேளா! அவன் சித்தே சின்னது பெரிசாத் தெச்சூடுவான்! அவ்வளவுதானே! உடம்பைமூட தைச்சுக் கொடுத்தூடுவனோல்லியோ. சிங்காரித்துக்கொள்றதெல்லாம் பொம்மனாட்டிகளின் வேலைன்னா? நான் என் துணியை இவனிடம் கொடுக்கல்லை?' என்றார்.

என்றால் பேசாமல் இருக்கமுடியவில்லை. மெதுவான குரலில், 'உங்கள் விஷயம் வேறு. எங்கள் விஷயம் வேறு. நாங்கள் எல்லாம் சின்ன பையன்கள். எங்களைப் பையன்களெல்லாம் பரிகாஸம் பண்ணுவார்கள்' என்றேன்.

அப்பா பிரசங்கம்பண்ண ஆரம்பித்துவிட்டார்! 'பேஷனு (Fashion)க்காகக் காசைக் கரியாக்கும் பிள்ளைகளை நீங்களெல்லாம் பரிகாசம் செய்வதுதானே! மனம் பலவீனமானது. எதிர்த்துப்போராடும் வன்மை அதற்கு உண்டு பண்ண வேண்டும். ஏழைச் சிறுவர்களைச் சேர்த்துக்கொண்டு, ஏழைகளுக்கு உதவாத, காசைக் கரியாக்கும் அந்த ஆசாமிகளை நீங்கள் எல்லாரும் பரிகாசம் பண்ணுங்கள். புண்ணியமுண்டு.'

அவரை எதிர்த்து வாதாடத் துணிவு ஏற்படவில்லை. இருந்தாலும் எங்கள் மனக்குறை மனக்குறையாகத்தானிருந்தது. குமரசாமியைப் பார்த்தேன். அவன் தையல் வேலையில் ஈடுபட்டிருந்தான். 'வாருங்க, குழந்தைங்களா! சட்டைக்கு அளவு எடுத்துக்கிறேன்' என்றழைத்தான் குமரசாமி.

நாங்கள் அவனை நெருங்கினோம். அவன் கண்ணில் நீர் ததும்ப, "சின்ன ஐயா இன்னும் கொஞ்சகால வாழ்வுங்க. உங்க சோத்தைத் தின்னுதான் பிழைக்கிறேன். குறை சொல்லும்படியா வைக்கமாட்டேனுங்க. உதைச்சுத் தள்ளாதீங்க' என்றான்.

எங்களது வரட்சி உடன் மறைந்து விட்டது. இரண்டு வருஷமிருக்கும். எப்படியோ என்னைத் தேடிப் பிடித்துக்கொண்டு 'கோட்டை'க்கு வந்து விட்டான். வாசலில் நின்ற காவற்காரன், அவனை உள்ளேவிட மறுத்துவிட்டான். குமரசாமிக்கு என் பெயர் சரியாகத் தெரியாது. 'சின்ன ஐயா' 'சின்ன ஐயா'ன்னு கேட்டிருக்கிறான். 'சின்ன ஐயா' என்ற பெயரில் 'பெரிய ஐயா'வான என்னை எப்படித் தெரிந்து கொள்வது? எவ்வளவோ அடையாளங்களைச் சொல்லிப் பார்த்திருக்கிறான். காவற்காரன் ஒன்றுக்கும் செவிசாய்க்கவில்லை. எனது பையன் 'பிரசாத்' வாசலில் அவனைப் பார்த்துவிட்டு, உள்ளே ஓடிவந்து. 'அப்பா, அப்பா, ஒரு கிழவன் வந்திருக்கான். பிச்சை அவனை உள்ளேவிடமாட்டேங்கிறான் அப்பா' என்றான். நான் ஆபீஸ் உடையிலேயே வெளியே வந்தேன். இந்த உடையில் குமரசாமி என்னைப் பார்த்ததே இல்லை. இருந்தாலும் ஒரு அறியாச் சக்தியினால் தூண்டப்பட்டு, 'சின்ன ஐயா, நமஸ்காரமுங்கோ' என்றான்.

பேச்சுக் குரலிலிருந்தே நான் அவனைக் கண்டுகொண்டேன். உடனே அவனை உள்ளே அழைத்துச்சென்று, 'குமரசாமி, என்ன சேதி? சௌக்கியமா? எப்படியிருக்கே?' என்றேன். அவன் விம்மி விம்மி அழுதவண்ணம், 'என்னை மறந்தூட்டீங்களா' என்று புரிந்தும் புரியாமலும் கூறினான்'

அப்பா உயிருடன் இருந்தவரையில் குமரசாமியை எனக்குப் பிடிக்கவேயில்லை. அவனிடம் அலாதி வெறுப்பு. 'துணியைக் கெடுக்கப் பேய் வந்து தொலைந்துவிட்டதே' என்று தோன்றும். ஆனால் இன்று அவனது தொண்டையிலிருந்து அரை குறையாகக் கிளம்பின வார்த்தையைக் கேட்டதும், 'அப்பாவிற்கு வாரிஸு' நான்தான் என்று உள்ளத்தில் எழுந்தது.

குமரசாமியின் உடல் ரொம்பக் கிழடு தட்டிவிட்டது. சதை சுருங்கிவிட்டது. முதுகு கூனிவிட்டது. தனது கூனல் முதுகை நிமிர்த்திக்கொண்டு அறையில் மாட்டப்பட்டிருந்த ஒவ்வொரு படங்களையும் உற்றுப்பார்த்தான். அப்பா, தாத்தா, அண்ணன், தங்கை, தம்பி என்று ஒவ்வொருவரையும் வெகு கணக்காக அடையாளங்கண்டுகொண்டு கூறிக்கொண்டே போனான். அது மட்டுமல்ல, ஒவ்வொருவரைப் பற்றி ஏதாவது புகழ் மொழியும் கூறுவான். என்னுடைய அநேக படங்களையும் பார்த்தான் ஒரு படத்தை ஊன்றிக் கவனித்துவிட்டு, 'இது நான் தெச்ச கோட்டல்லவா!' என்று உரக்க வினவினான். குழந்தை பிரசாதை விடமாட்டேன் என்று மடியில் தூக்கி வைத்துக்கொண்டான்.

'என் குமரசாமி! உன் வேலை எல்லாம் எப்படி இருக்கிறது?' என்று கேட்டேன்.

'ஏதோ, உங்க புண்ணியத்திலே நடக்குதுங்க. வேலைசெய்யச் சீவனில்லைங்க. பணக்கஸ்டம் அதிகமாத்தானிருக்குதுங்க' என்று பதிலிறுத்தான் அவன்.

இதைக்கேட்டதும் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுத்தேன். அவன் முகத்தைச் சிணுக்கிக்கொண்டு, 'வழக்கத்தை மாத்தாதிங்க, சின்ன ஐயா, இன்னும் கொஞ்ச நாளு வாழ்வுதானுங்க. பிச்சைப் பிழைப்பு எனக்கெதுக்குங்க. குழந்தைக்கு ஏதாவது தெக்கணுங்களா?' என்று கேட்டான்.

'முதல்லே, கொஞ்சம் சாப்பிடு' என்றேன். 'உங்க சோறுதானுங்க சாப்படறேன்' என்று சொல்லித் தட்டிக் கழிக்கப் பார்த்தான். நான் விடுவதாயில்லை. கடைசியில் ஒத்துக்கொண்டான். அவன் சாப்பிட உட்கார்ந்தான். நான் வேலையாளை அனுப்பி ஒரு பீஸ் "லாங்கிளாத்" வாங்கிவரச் செய்தேன். அவன் சாப்பிட்டு முடித்து எழுந்திருந்து வந்ததும், அந்தப் பீஸை அவன் கையில் கொடுத்து, சட்டை, தலையணை உறை, கர்சீப், கால்சட்டை முதலியன தைத்துக்கொண்டு வருமாறு கூறினேன். அவன் பிரசாத்திற்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டுத் துணிகளுடன் சென்றான்.

"குமரசாமிதான் இப்பொழுதில்லையே!"

வான்கார்ட் பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

308-309, லிங்கசெட்டி தெரு, மதராஸ்

நெருப்பு—மோட்டார்—கப்பல், தொழிலாளர் நஷ்டஈடு & எல்லாவிதமன இன்ஷ்யூரன்ஸும் செய்யப்படும்.

எமது ஏஜண்டுகளாகவும், ஆர்கனைஸர் அல்லது பிரதம ஏஜண்டுகளாக வேலை செய்ய அனுபவமுள்ள நல்லவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உண்மையில் திறமையுள்ளவர்களுக்கு நல்ல சந்தர்ப்பம்.

H. D. ராஜா,
ஜெனரல் மானேஜர்.

வறண்ட பார்வை

எம். எஸ். கமலா

மிராஸ் மணி அய்யரின் மாப்பிள்ளை 'கோதண்டராமன்' சீமைக்குச் செல்வதற்கு முன் மாமனார் வீட்டிற்கு வந்தான். வந்து இரண்டு நாட்களாயின. அவன் மனைவி 'லக்ஷ்மி' அவன் கண்களில் படவே இல்லை. முகம் அலம்பிக்கொள்ளவென்று கிணற்றடிக்குச் செல்வான். செல்லும்போது நாற்புறமும் கண்களைச் சுழற்றிகொண்டு செல்வான். தாஹமெடுக்கிறதென்று மணிக்கொருமுறை கூடத்தில் வந்து நிற்பான். அடுக்களையில் மாமியாருக்கருகில் இரண்டு காலையும் கட்டிக்கொண்டு பதுமையைபோல் வீற்றிருக்கும் லக்ஷ்மியைக் கண்டால் கோபம் கோபமாய் வரும். மாமியார் பரபரன்னு ஜலம் கொண்டு வந்து வைத்துப் போவாள். ஒருவாய் குடித்துவிட்டு அகங்காரத்துடன் ஜலத்தைவிசிக் கீழே கொட்டிவிட்டுச் செல்வான்.

அன்று அவன் ஊருக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தான். "மாப்பிள்ளை! சீமையில் உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள். முதலில் ஆரோக்கியம்தான் முக்கியம். அங்கே ஜனங்கள் மிகவும் வஞ்சனைப் பேர்வழிகளாம். கூட இருந்தே குடியைக் கெடுத்துடுவாளாம். 'அசைந்து அசைந்து திங்குமாம் யானை, அசையாமல் தின்னுமாம் வீடு' என்பதைப்போல், அவர்கள் மேலுக்கு நல்லவர்கள்போல் நடித்து உள்ளோடே மனுஷனை நாசம் செய்துடுவாளாம். பத்ரம். குழந்தை லக்ஷ்மி ரொம்ப கவலைப்படுவாள்" என்றார்.

அவன் மனதில் தோன்றியது. 'குழந்தை லக்ஷ்மி கவலைப்படுவாள்' எத்தனை நிஜமோ? நாலு நாளாய் வெளியேகூட காணோம். இடித்த புளியாட்டம் இருக்கிற இடத்தைவிட்டு அசைவதில்லை என்று, மாமனார் முகத்தை "இவ்வளவுதானா? இன்னும் உண்டா?" என்பதைப்போல் பார்த்தான்.

மாப்பிள்ளை மௌனமாய் நிற்பதைப் பார்த்து, "எவ்வளவு ரூபாயானாலும் அனுப்பத் தயார். உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொண்டு ஜயத்துடன் சௌக்கியமாய் ஊர் வந்து சேரவேண்டும்" என்றார்.

அவன் மனைவியிடம் என்னென்னவோ பேசவேண்டுமென்று துடி துடித்தான். இந்த த்ரேதாயுகப் பேர்வழியுடன் அதிகப் பேச்சுக்கு இடம் வைத்துக்கொள்ளாமல் "உங்கள் பெண்ணைக் கூப்பிடுங்கள்" என்றான்.

அவன் அறையில் இப்படியும் அப்படியும் அலைந்துகொண்டிருக்கிறான். பெரிய ஒன்பதுகஜ சரிகைப் புடைவைக்குள் லக்ஷ்மியின் சிறிய தேஹம் புதைந்திருக்க, பெட்டியிலிருக்கும் புதிய பழைய நகைகள் அங்கங்களின் மேல் ஆரோகணித்திருக்க, அவ்வறைக்குள் தயங்கியபடியே பாதம் வைத்தாள்.

"போடி, உள்ளே! இப்பதான் சப்தபதி வெக்கறையோ?" என்று மாமியாரின் குரல் கேட்டது.

அவன் வாயிலருகில் தலையை நீட்டிப் பார்த்தான். மாமியார் அவ்விடம் விட்டுச் சென்றுவிட்டாள். லக்ஷ்மி திகிலடைந்து நின்றிருந்தாள். அவன் கையைப் பிடித்தான். அவள் தலையைக் கவிழ்ந்தாள். லக்ஷ்மிக்குப் பன்னிரண்டு வயது. கோதண்டத்துக்கு இருபத்தொருவயது.

"தா! லக்ஷ்மி! இங்கே பார்!" என்று அருகில் இழுத்துக்கொண்டான். அவள் இன்னும் நன்றாய்த் தலையைக் குனிந்துகொண்டாள். அவனுக்குச் சிறிதே கோபம்கூட வந்துவிட்டது.

"லக்ஷ்மீ! லக்ஷ்......மீ! இங்கே பாரேன்!"

"......................"

"லக்ஷ்மீ......! இப்படிப் பண்ணா எனக்குக் கெட்ட கோவம் வரும்" என்று கடுமையாய்ச் சொன்னான். அவள் பயந்தபடி அவனைத் தலை எடுத்துப் பார்த்தாள்.

"அப்பா!" என்றான் வரும் சிரிப்பை அடக்கிக்கொண்டு. அவள் மறுபடியும் தலை கவிழ்ந்தாள். அவள் முகவாய்க் கட்டையில் கையைக் கொடுத்து மேலுக்கெடுத்து "உன்னைத் தலை குனிந்து உட்கார்ந்திருக்க அழைக்கவில்லை" என்று அழுத்தந்திருத்தமாய்ச் சொன்னான்.

அப்பொழுதும் அவள் மௌனமாய்த் துடிக்கும் உதட்டைக் கடித்துக்கொண்டு நின்றிருந்தாள். அவள் உடல் ஆட்டம் கொடுக்கத் தொடங்கியது. அவளை எடுத்து மடியிலிருத்திக்கொண்டு தன் சீற்றத்தை அடக்கிக்கொண்டு சிரித்தபடியே "அசடே! பயப்படாதே! இதோ! பார்! நான் சீமையிலிருந்து வர இரண்டு வருஷமாகும், அங்குப் போனதும் கடிதம் எழுதுவேன். நீயும் எழுதவேண்டும் தெரியுமா?

அவள் வாய் அசைக்கவில்லை.

"நீ ஊமையா?"

"......................"

"கடிதம் எழுதறையா?" அவன் குரல் கடினமாய்க் கேட்கவே தலையை ஆட்டினாள்.

"நான் வரும்மட்டும் வெட்டிப்போது போக்கக்கூடாது. ஒரு வாத்தியாரை வெச்சு இங்கிலீஷ் கத்துக்கணும். பாட்டும் கத்துண்டா சந்தோஷம். இல்லாவிட்டா முக்கியமாய் இங்கிலீஷ் படிக்க எழுதக் கத்துக்கணும். என்ன?"

அவள் அசையாமல் மண்பொம்மையைப் போலிருந்தாள்.

"இங்கே பார் லக்ஷ்மீ!" அவள் மௌனமாய் இருந்தாள்.

"நான் கேட்பதற்குப் பதில் சொல்வதாய் இருந்தால் இரு. இல்லாவிட்டால் போ" என்று பிடித்திருந்த அவள் கையை விட்டான். அவள் சரேலென்று போகப் புறப்பட்டாள்.

"திருடி; இதுமாத்திரம் காது கேக்கறதா?" என்று கதவிற்குச் சரியாய்க் குறுக்கே பாய்ந்து நின்று கொண்டான். அவள் மலைத்து, பிடிபட்ட மானைப்போல் மருண்டு மருண்டு பார்த்தாள் மையிட்டக் கண்களால். அவளுக்கு அவ்விடம் விட்டுப்போனால் போதுமென்று தோன்றிவிட்டது.

"போறையா?" என்றான்.

தலையசைத்தாள்.

"இங்கிலீஷ் படிக்கிறையா? சொல்லு. வழி விடறேன்" என்று அவளருகில் வந்தான்.

அவள் பயத்துடன் "ப...டி...க்க...றேன்" என்று சொன்னதும் அவள் குரலினிமையில் லயித்தான் தன்னை மறந்து. அவள் மாயமாய் மறைந்தாள். "நான்ஸென்ஸ், கண்ட்ரி" என்று சொல்லிக்கொண்டே ஏமாந்த மனதை ஒரு நிலைக்குக் கொண்டுவந்தான்.

— 2 —

ஏடன் போய்ச் சேர்ந்ததும் மாமனாருக்கும் மனைவிக்கும் கடிதம் போட்டான். இங்கிலாந்தில் இறங்கியதும் கர்நாடக மனைவிக்கு அவ்வூரின் அமைப்பையும் அழகையும் எடுத்துக் கதைபோல் எழுதினான். அவள் சிறு உள்ளம் அதை ரஸிக்க முடியவில்லை. அவனுக்குப் பதில் எழுத அவளிடம் விஷயமில்லை. அவன் சென்றது புதிய ஊர். அவ்விடத்திய அழகை எழுதியிருக்கிறான். தங்கள் ஊர் பழையது தானே! அதில் ஒன்றும் விசேஷமில்லை. இடிந்த அரசமரத்துப் பிள்ளையார், பாலம் உடைந்த ஆற்றங்கரை, பசும் புல் வெளியில் மேயும் மாடுகன்றுகள், களத்து மேட்டில் 'பிடாரி' கோவில், தங்கள் அக்கிரகாரத்தில் அர்த்தநாரீசுவரர் கோயில், பண்ணையாள் பழனிக் கௌண்டன், புழக்கடை வாயிலிலோ தெருக்கோடியிலோ நின்று கத்தும் ஏரடிக்கும் ஏலாண்டி (பறையன்): இதை என்ன எழுதுவது. அவன் மாமனார் வீடு வந்த நான் கைந்து முறை இதைப் பார்த்திருக்கிறான். அதைத் தவிர்த்து அவளுக்கு வெட்கம் வெகுவாக ஆழ்ந்து பதிந்திருந்தது.

எங்கோ ஆறாயிரம் மைல்களுக்கப்பால் இருந்த கோதண்டராமன், அவன் மனைவியின் தீர்க்க கடிதத்தை ஒவ்வொருநாளும் ஆசையாய் எதிர் பார்த்தான். அவனுக்கும் அவளுக்கும் எத்தனை மைல் தூரமிருக்கிறதோ, அதே போல் அவள் மலராத உள்ளத்திற்கும் அவன் மலர்ந்த உள்ளத்திற்கும் அத்தனை தூரமிருந்தது. அதை அணுகச் சிறிதுகாலம் செல்லும் என்பதை அவன் ஆசை அறியவில்லை.

கீழ்நாட்டிலிருந்து தன்னைப்போல் வித்தியார்த்திகளாய் வந்திருக்கும் பற்பல ஜாதி வித்தியார்த்திகளுடன் சேர்ந்து மெள்ள மெள்ளத் தன்மனைவியின் கடிதம் வராத குறையை மறந்தான். என்றாவது தன் முயற்சி பலிக்காதா? என்று எழுதிக்கொண்டிருந்தான். பிறகு அவனுக்கே அலுத்துவிட்டது. லக்ஷ்மியின் விபரீத வெட்கத்தை அறிந்து மாமனாருக்கே லக்ஷ்மிக்குக் கல்வி கற்பிக்கும்படி எழுதிவிட்டான். மணி அய்யர் 'யோசனையிலாழ்ந்தார். அவர் மனைவி தினமும் பெண்ணிடம் மாப்பிள்ளை பேசியதையும், பெண் பேசா மடந்தையாய் அவனைச் சீறச் செய்ததையும் சொல்லிச் சொல்லி நகைப்பாள்.

அன்றும் அதைப்போல் சொல்லிக்கொண்டிருந்தாள். லக்ஷ்மி மலைத்து உட்கார்ந்திருந்தாள்.

"அதென்னத்தடீ கண்டது சிறுசு, மாப்பிள்ளை சீமைத் தொரையாட்டத்தைச் சிறுசுகிட்டே ஆடிட்டுப் போனார். நீ ரொம்ப தெரிஞ்சவ போலேன்னு சிரிக்கறே! பதினாலு வயசு. குதுராட்டம் வளந்திருந்தே; நான் வந்து உன்னோடே பேசணும்னு உங்காத்திலே இருந்த ஒருநாள் எங்கே ஒளிஞ்சிண்டிருந்தே! நெனவிருக்கா!"

"நான் ஒண்ணும் ஒளிஞ்சிக்கல்லை. பேயா, பிசாசா, ஒளிஞ்சிக்க?"

"உனக்கு எப்படித் தோணித்தோ எனக்குத் தெரியாது, ஒருநாள் முழுவதும் குதிருக்குள் ஒளிஞ்சிண்டு எல்லோரையும் படுத்திய பாட்டைப் பார்த்ததும் 'அப்பா! இந்தப் பெண்டாட்டியோடே பேசும் ஆசையே வேண்டாமின்னு தோணிவிட்டதால் தானே நீ வந்தப்பரம்கூட நீயா பேசும் மட்டும் உன் கிட்ட பேசப் பயந்திருந்தேன்"

"போரும், போரும். பொண்ணுக்குப் பரிஞ்சிண்டு"

"ஏண்டீ! நெசம்மா ஆணையிட்டுச் சொல்"

"போருமே; பச்சைக் குழந்தையாட்டம் ஆணையும் சொல்வதும். அவளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள்.

சீமைக்குச் சென்ற மாப்பிள்ளைக்குப் பணம் தேவையானபோது மணிஅய்யருக்குக் கடிதம் வரும். அதில் ஒருவரி 'லக்ஷ்மி நன்றாய்ப் படிப்பாள் என்று நம்புகிறேன்.' என்று எழுதி வைப்பான். பிறகு அதையும் எழுதுவதை விட்டான். மேல்நாட்டில் கூச்சமற்றுப் பழகும் ஸ்திரீகளையும், அவர்கள் நாகரிகத்தையும் பார்த்து அங்கு அவன் மனது பதிந்துவிட்டது. தான் எவ்வளவு வருந்தியும் பேசாத மனைவி—இதே குறை அவனை நெறி பிறழச் செய்தது.

"அடியே! ஏய்! எங்கே தொலைந்து போனாள்? லக்ஷ்மீ! லக்ஷ்மீ!" என்றழைத்தார் மணி அய்யர்.

"ஏம்பா! அம்மா எதிராளாத்துக்குப் போயிருக்கா." என்று கையில் பிரித்து வைத்திருக்கும் ஒரு கடிதத்துடன் வந்தாள் லக்ஷ்மி.

"மாப்பிள்ளை கிட்டேருந்து கடிதம் வந்திருக்காம்மா?" என்று ஆவலுடன் கேட்ட படியே கையை நீட்டினார். அவள் வெட்கத்துடன் கடிதத்தைக் கொடுத்து விர் என்று தன் அறைக்குள் சென்றாள். வாயிற்படிக்கெதிரில் மாட்டியிருக்கும் கோதண்டராமனின் படம் இவளைப் பார்த்துச் சிரிப்பதைப்போல் தோன்றியது. சற்று முன் தன் தந்தை தன் தாயைப் பார்க்க ஆவலாய்ச் சென்றபோது தன் தாய் செய்த செயல். அதனால் தன் தந்தை, பின் தானாய் வந்து தன்னை அணுகும் வரை மனைவியிடம் தொடர்பில்லாமல் தூர விலகி நின்றது. ஆனால் தன் கணவனோவெனில் தனக்குப் புரியாத வார்த்தைகளை உபயோகித்து ஏதோ கடிதம் எழுதுகிறார். அதற்குப் பதிலெழுத தனக்கோ தெரியவில்லை; அப்பாமாத்திரம் அம்மாவின் குணமறிந்து கொண்டாரே! இவர் ஏன் அறியவில்லை. இப்படி அவள் வயதிற்கு மேற்பட்ட எண்ணங்களை அறியச் சக்தியற்றுக் குழப்பத்துடன் அலமாரியிலிருக்கும் 'விக்கிரமாதித்தன்' கதையைப்படிக்க எடுத்தாள். அப்பொழுது அவள் கணவன் சொன்னது நினைவு வந்தது.

'நான் வரும் மட்டும் வெட்டிப்போது போக்கப்படாது. ஒரு வாத்தியாரை வெச்சு இங்கிலீஷ் கத்துக்கணும்' அவள் குழந்தையுள்ளத்தில் தோன்றியது: 'அப்பா! இங்கலீஷ், அதை எப்படிக் கத்துப்பது? வாயில் நுழையாது போலிருக்கே! அடுத்தாத்து அலமேலு தெலுங்கு பேசறாள். அவளும் நானும் சின்ன குழந்தையிலிருந்து வெளையாடறோம். அவா பேச்சே வரலையே! இதெப்படி வரும்?' என்று யோசனை செய்யும் போது அவள் தாயின் குரல் கேட்டது.

"நீங்க சொல்றது ரொம்ப நன்னாயிருக்கே; லக்ஷ்மியின் படிப்புக்காக ஊரையே காலிபண்ணிண்டு எப்படிப்போகமுடியும்? நேத்து இன்னிக்கு வந்த குடுத்தனமா? மூன்று தலைமுறையா இருந்த 'ஆம்' (அகம்-வீடு) அதை எப்படி பாழாக்கி விட்டுவறது?"

ஆனால் உன்னையும் லக்ஷ்மியையும் பட்டணத்துலே அத்திம்பேர் கிட்டே வெச்சுடறேன். நான் இங்குப் பண்ணையில் வேலையில்லாத போது அங்கே வந்திருக்கேன் சரியா!"

"ஆறு மாஸம் இருந்தா போருமா?"

"அசடே! அசடே! ஆறு மாசத்திலே ஆரு படிப்பாடி! கிட்டத்தட்ட அஞ்சாறு வருஷம் படிக்கணுமாக்கும்"

"வெடிஞ்சது, ஆறு வருஷம் வீட்டைப் பாழாய்ப் போட்டுவிட்டுப் போறதாம். நன்னா இருக்கே!"

'மாப்பிள்ளை' இன்னிக்குக் கடிதத்தில்கூட "லக்ஷ்மிக்குப்படிப்பு சொல்லித்தறேளா? இல்லையா? நான் வந்து சேரும்போது அவள் என்னுடன் இங்கிலீஷில்தான் பேசவேணும். தமிழிலே பேசினா என் அந்தஸ்துக்குக் குறைவு. இப்பொ இருக்கறுப்பலேயே அவ இருந்தா எப்பவும் உங்க கிட்டவே இருக்கலாம்"னு எழுதியிருக்கார். எனக்கொண்ணும் தோணல்லை" என்றார்.

— 3 —

கோதண்டராமன் புரட்டாசிமாதக் கடைசியில் சீமைக்குச் சென்றான். அவன்போய் ஆறு மாதமாயிற்று. சித்திரை மாதம். எங்கே கண்டாலும் கல்யாணங்கள், மதுரையில் மணி அய்யரின் மருமானுக்குக் கல்யாணம். திண்டுக்கல்லுக் கருகில் 'வேட்டசிந்தூர்' என்னும் கிராமத்திலிருந்து மிராஸ் மணி அய்யர் தம் குடும்பத்துடன் வந்திருந்தார். அவருக்கு ராஜோபசாரம். 'ஏன்?' அவருக்கல்ல. அவருக்கிருக்கும் இருபது ரூபாய் லேவாதேவி. முந்நூறு ஏக்கரா நஞ்சை புஞ்சை, நாலு மாந்தோப்பு சுமார் ஆயிரம் மரங்களுக்கு மேல் கொண்டது. சொந்தப் பண்ணை, பத்துக் குடும்பங்களுக்குப் படியளந்து தம் நிலபுலன்களைப் பார்த்துக்கொள்கிறார். கூடியமட்டும் தர்மசிந்தனையுடையவர். நொடித்த குடும்பங்களைக் கை தூக்கிவிடுபவர். கேட்பானேன்?

ஆறு மாதத்துக்குமுன் இருந்த அறியாமை லக்ஷ்மியிடம் இப்பொழுதில்லை. அவள் பெண்மையும் விகஸிக்கத் தொடங்கியது. அறிவுக்கெட்டாத எண்ணங்களும் தோன்ற ஆரம்பிக்கவே தன் கணவன் எழுதிய கடிதத்தின் கருத்து வெளிப்படும்போல் ஓர் நினைவு எழும்பியது. கல்யாணத்திற்கு எத்தனையோ பந்து மித்திரர் வந்திருந்தனர். சிலர் இளம் கைம்பெண்கள்; சிலர் கணவன்மாரால் சீர் செல்லம் போதாதென்று ஒதுக்கப்பட்டவர்கள்; அவர்கள்பால் அனுதாபப்படுபவர்கள் சிலர்,

அருவருப்பவர் சிலர். இவர்களைக் கண்டதும் அவள் மனம் திடுக்கிட்டு இடிவிழுந்தது போலாயிற்று. விவாஹம் முடிந்து எல்லோரும் புறப்படும்போது "அப்பா! நான் அத்தையுடன் மதராஸ் சென்று படிக்கிறேன். அம்மாவும் நீங்களும் ஊருக்குப் போங்கள். நான் லீவுகளுக்கு அங்கே வறேன்; உங்களுக்குச் சௌகரியப்படும்போது வந்து பாருங்கள்" என்று தைரியமாய்ச் சொன்னாள். மணி அய்யரும் அவர் சம்சாரமும் திகைப்புடன் மலைத்து நின்று விட்டனர். தங்களில் ஒருவரையும் ஐந்து நிமிஷம் பிரியா லக்ஷ்மியா இப்படிப் பேசுகிறாள்?

"ஏண்டி! உன் இஷ்டமென்ன?"

"என் இஷ்டம் என்ன வந்தது? மாப்பிள்ளையோ, அவள் படிக்கணும்னு சொல்லிவிட்டார். நாம்தான் வீடுவாசலைவிட்டுப் போவது எப்படிடான்னு மலைத்தோம். ஆயிரமிருந்தாலும் பொண் குழந்தையோன்னோ? ஆம்படையான் வார்த்தையைத் தட்டப்படாதுன்னு தோணிட்டது. சிறுசா! பெரியவளாயிட்டாளோன்னோ!"

"என்னடி, லக்ஷ்மியைமாத்திரம் அனுப்புவதா? நீயும் போறையான்னு! என்னென்னவோ சொல்ல ஆரம்பிச்சுட்டே."

"லக்ஷ்மி! நீ எங்களைவிட்டுத் தைரியமாய் இருப்பையாடி; இல்லாட்டா நானும் வரட்டுமா?"

"வேண்டாம் அம்மா! நீ வந்தால், வீடு வாசல், நெல்லு நீர், வரவா போரவா இதெல்லாம் கவனிப்பவர் யார்? நான் தைரியமாய் இருப்பேன்" என்றாள்.

தன் பெண்ணின் தைரியத்தையும் துணிவையும் கண்டு பதில் பேசாமல் சம்மதித்தனர்.

— 4 —

லக்ஷ்மி தன் அத்தையுடன் மதராஸ் சென்றாள். அத்தை கணவரும் அத்தானும் அவளுக்கு வீட்டிலேயே படிப்புச் சொல்லிக்கொடுத்து, 'பெண்ணரிஸ் மெட்ரிக்'குக்கு அப்பியராகும்படி ஏற்பாடு செய்தனர். அவ் வருடம் கோதண்டராமன் பரீக்ஷையில் தேறவில்லை.

கோதண்டராமன் சீமைக்குச் சென்று வருடம் ஒன்று, இரண்டு, மூன்று ஆகிவிட்டன. மாப்பிள்ளை முதல் வருடம் தவறினாலும் மறு வருடம் தேறிவிட்டான் பரீக்ஷையில். ஒரு வருஷப் பயிற்சியும் சீமையிலேயே பெற்றுவருவதாய் எழுதிவிட்டான். 'கறவைப் பசுபோன்ற மாமனார், சளைக்காமல் குழாய் ஜலத்தைப்போல் ரூபாய் அனுப்பினால் இன்னும் இரண்டு வருஷம்கூட இருந்து வரலாம்' என்னும் சுற்றத்தாரின் வசைச்சொல்.

சந்தோஷமாக உத்ஸாகத்துடன் நாள் தோறும் வேலை செய்யும்.

இன்று நீ பூர்ண உத்ஸாகத்துடன் தினந்தோறும் சலிப்பின்றி உழைத்துவரும் வாலிபன் வாழ்க்கையை விரும்புவதே இதற்குக் காரணம்.

ஆனால் சுமார் 25 ஆண்டுகளுக்குப்பின்பு உன்னுடைய வாழ்க்கை எவ்வகையிலிருக்கும் என்று யோசித்தாயா?

நெருக்கடியுள்ள கடுமையான உத்யோக வாழ்க்கைக்குப் பிறகு நீ அமைதியான கவலையற்ற சுக வாழ்வை வேண்டுமென ஏங்குவது இயற்கையே.

நேஷனல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

ஃ ஃ ஃ

நெருப்பு, விபத்து மோட்டார், மற்றும் எல்லாவித இன்ஷ்யூரன்சுக்கும் சிறந்தது

நேஷனல் பயர் & ஜனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

சென்னை கிளை ஆபீஸ்:

நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்
362, சைனா பஜார் ரோடு,
எஸ்பிளனேடு

சப்-ஆபீஸ்கள், பங்களூர் & மதுரை

லக்ஷ்மி 'மெட்ரிக்பாஸ்' செய்துவிட்டாள். தன் கணவன் வந்ததும் தன் பாண்டித்யத்தை மெச்சிக்கொண்டு பூரிப்பான், என்று பூரித்திருந்தாள். பதினாறு வயதை அடையப் போகும் லக்ஷ்மியின் அழகு எல்லோர் உள்ளத்தையும் கொள்ளைகொண்டது. லக்ஷ்மியின் கண்களில் காதல் கவர்ச்சி, ஐ. ஸி. எஸ். கணவன் என்ற பெருமை எல்லாம் ஒருங்கே சோபித்தன.

அன்று தகப்பனும் பெண்ணும் பத்திரிகை பார்த்துக்கொண்டிருந்தனர். அதில் 'ஏ. கே. ராமன் . ஐஸி. எஸ். மேல்நாட்டிலிருந்து வந்தார். 'ஷாஹஜஹான்பூரில்' அடுத்த வாரம் வேலை ஏற்பார்' என்று பிரசுரித்திருந்தது. அதைப் பார்த்ததும் இருவரும் ஒருவரை ஒருவர் மௌனமாய்ப் பார்த்துக்கொண்டனர். 'ஏ. கே. ராமன்' வேலை ஏற்றான். மணி அய்யர் தம் மகளை அழைத்துச் செல்லத் தயாராயிருந்தார். அதற்குள் தான் இருக்குமிடம் அவ்வளவு வசதியாய் இல்லை என்றும், வேறு ஊருக்கு மாற்றலானதும் லக்ஷ்மியை அழைத்து வரலாமென்றும், எழுதிவிட்டான்.

[illegible]யாய் மாப்பிள்ளை வண்டவாளம் முழுவதும் வெளிவந்தது. மணி அய்யர் குடும்பம் வேதனையிலாழ்ந்தது. சென்ற ஒரு வருட காலமாய் மாப்பிள்ளை நடவடிக்கை சரி[illegible]யில்லை என்று கேள்விப்பட்டதையும், அதற்[illegible]கற்றாற் போல் அவரிடமிருந்து பணத்திற்கு மாத்திரம் கடிதம் வந்துக்கொண்டிருந்ததையும், அவன் தான் வருவதை அறிவிக்காமல் நேராய் வந்து வேலைஏற்றதையும், தானுய்ப் பெண்ணை அழைத்துவருகிறேன் என்றெழுதியதற்கும் சாக்கு எழுதிவிட்டதையும் நினைத்து வருந்தினார்.

வருடங்கள் ஓடி மறைந்தன. லக்ஷ்மிக்குப் பத்தொன்பது வயது. மணி அய்யர் மனோவேதனையால் நொந்து நாளுக்குநாள் மெலிந்தார். லக்ஷ்மியின் மனதிலோ தன் அசட்டுத்தனத்தினால்தான் இம்மாதிரி சங்கடமான நிலை ஏற்பட்டதென்று யாரோ எடுத்துச் சொல்வதைப் போன்றிருந்தது. தந்தையோ எழுந்து நடக்கக்கூட சக்தியற்றுவிட்டார். தாயின் நிலையோ சொல்லவேண்டியதில்லை. பத்து மாதம் வயிற்றிலிடம் கொடுத்த பெண்ணின் பரிதாபநிலை, சௌபாக்கிய தேவனுன கணவனின் அசக்ததை இத்தனையும் சேர்ந்து அம்மாதை நடைப்பிணமாக்கிவிட்டது.

— 4 —

லக்ஷ்மி தன் கணவனுக்கு உள்ளம் உருகக் கடிதம் எழுதினுள். அவனிடமிருந்து ஒருவிதப் பதிலும் இல்லை. பெற்றோர்களை வற்புறுத்திப் புக்ககம் சென்றுள். மாமனுர் நாட்டுப் பெண்ணின் நிலைமைக்கு மிக மிக வருந்தி, "அம்மா, லக்ஷ்மி! ராமு இப்படி அஸத்தாய்ப் போவானென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. ரொம்ப குட்டிக்கையாய்ப் படிக்கிருனே என்று உங்கப்பாவை, அவனைச் சீமைக்கனுப்பும்படி கேட்டேன். அவரும் பெருமையாய் ஒப்புக்கொண்டார். 'மக்களுக்குச் சத்துரு மாதாபிதா' என்பதைப்போல் நாங்களே உனக்குச் சத்துருக்களாய்விட்டோம். இனி யாராலும் அவனுக்கு ஒன்றும் ஆகவேண்டியதில்லை. தறிதலையாகிவிட்டான். நான் அவன் நடக்கவேண்டியதைப்பற்றி எழுதினுல் "நீ ஒண்ணும் சொல்லவேண்டியதில்லை,. எனக்குத் தெரியும்; நான் பச்சக் குழந்தையல்ல" என்றெழுதுகிருன். 'கழுதை கெட்டால் குட்டிச் சுவர்' என்பதைப்போல் தானுய் வழிக்கு வரவேண்டும். இப்ப நாம் போய் அவனிடம் வேண்டினுல் 'யானைமேல் போகிறவனைச் சுண்ணும்பு கேக்கருப்போலத்தான்'. கடவுள் கிருபையால் சீக்கிரம் அவன் துர்ப்புத்தி மாறி நல் வழிக்கு வரவேண்டுமென்று அல்லும் பகலும் அந்தக் 'கோமதித் தாயை' வேண்டுகிறேன்" என்ருர்.

அவளது ஆவல்கொண்ட யௌவன உள்ளம் அவர் சொல்வதையறிந்தாலும் கணவனைப் பார்க்கவேண்டுமென்ற கட்டுக்கடங்கா ஆசை மேலோங்கி நின்றது. "பிறர் சொல்வதை நம்பி நாம் ஏன் அவரையும் சங்கடப்படுத்தி நாமும் சங்கடப்படவேண்டும்? நேராய் நாமே போய்ச் சேர்ந்தால், அவர் வேண்டாமென்று சொல்லிவிடுவாரா" என்ருள் துக்கம் நிறைந்த குரலில்.

அவர் கண்களில் நீர் துளிர்த்துவிட்டது. "லக்ஷ்மி! உன் மாமியார் பாக்கியசாலி. பிள்ளை சீமையில் கெட்டுவிட்டானென்று நாயுடு ஆத்துப் பிள்ளையாண்டான் வந்து சொன்னதும் அப்படியே உயிரை விட்டுவிட்டாள். நான் பாபி. இல்லாவிட்டால் மஹாலக்ஷ்மி போன்ற உன்னை அவன் அழைத்துப் போகாமல் இருப்பதும், 'அஸத்தான பிள்ளையைப் பெற்ற அப்பன்' என்று நாலுபேர் சுட்டிக் காட்டித் திரிவதும்......அந்த த்ரோகியின்முன் நான் வரமாட்டேன். நீ உன் அத்தையை மாமாவை அழைத்துக்கொண்டு போம்மா! அப்படி அவன் புத்தியும் திரும்பி, உனக்கு நல்லகாலம் பிறந்தால் வறேன்" என்ருர்.

மணி அய்யர் வீட்டு வாயிலில் மயிலைக்கண் காளைகள் பூட்டிய அழகிய வில்வண்டி நின்றிருந்தது. வண்டியில் நான்கு புதிய கள்ளிப் பெட்டிகள் ஆணி அறைந்து, இரண்டு பெரிய 'சூட்கேஸ்'கள், வெள்ளிக் கூஜா, வெள்ளி டிபன்ஸெட் இத்தனையும் வைத்திருந்தன. அத்தெரு முழுவதும் தெருவில் நின்றிருந்தது. லக்ஷ்மி ஆம்படையானிடம் போருளாம்' என்று ஒவ்வொருவரும் சொல்லிக்கொண்டு நின்றிருந்தனர்.

கட்டிலில் தலையணைகளின் மேல் சாய்ந்திருக்கும் மணிஅய்யர் "லக்ஷ்மி சௌக்கியமாய்ப் போய் வாம்மா! நான் அழைத்துக்கொண்டு போய்விடப் பிராப்தமில்லை. சமத்தா எப்படி

நடந்துண்டா மாப்பிள்ளைக்குத் திருப்தியோ அப்படி நடந்துக்கோ.........'' என்று சொல்லும்போதே "பேய்க்கு வாக்கப்பட்டா புளிய மரம் ஏறத்தானே வேணும்" என்றாள் கண்களில் துளிர்க்கும் நீரைத் தலைப்பால் ஒற்றிக்கொண்டே லக்ஷ்மியின் தாய்.

மணிஅய்யர் குரல் தழுதழுக்கத் தம் துக்கத்தை அடக்கிக்கொண்டு "அம்மா நீபோய்ச் சேர்ந்ததும் தந்தி அடித்துவிடு'' 'வெங்கு! (அதுதான் அவர் தங்கையின் கணவன்பேர்) மாப்பிள்ளை என்ன கேட்டாலும் கொடுத்துவிடுவதாகச் சொல்லு. இந்தச் சொத்து முழுவதும் இருந்தாலும் அவாளுக்குத்தான். போனாலும் அவாளுதுதான். அதனால் அவர் சொல்வதற்கெல்லாம் ஒத்துண்டு வந்துடு. போதாச்சு, ஸாமிக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டுப் புறப்படம்மா!'' என்றார் ஆயாசத்துடன்.

லக்ஷ்மி, ஸாமிக்குநமஸ்காரம் பண்ணிவிட்டுக் கண்ணீர் பார்வையை மறைக்கப் பெற்றோர்களை நமஸ்கரித்து "அப்பா! நான் கடிதம் போடறேன், நீங்கள் அம்மாவை அழைத்துக்கொண்டு வரணும்'' என்றாள் கரகரப்பான குரலில்.

"லக்ஷ்மி! அப்படி உன்னிடமிருந்து கடிதம் என்று வருமோ அன்றே என் உடம்பு குணமாய் விடுண்டீ அம்மா! அந்த ஒருவரிதான் இந்த உடம்புக்குச் சஞ்சீவி'' என்றார்.

ரயிலில் எத்தனையோவித பிரயாணிகள் போய்க்கொண்டிருக்கிறார்கள். லக்ஷ்மி இரண்டாம் வகுப்பில் ஜன்னலுக்கருகில் சாய்ந்து ஓடும் ரயிலை வேகமாகத்தாண்டி ஓடும் மரங்களையும் காட்டுப் புதர்களையும் கல் குண்டுகளையும், சொட்டைத் தலைபோல் காணப்படும் சில கட்டாந்தரைகளையும், அதற்குச் சேர்ந்தாற்போல் துளிர்த்திருக்கும் வன விருக்ஷங்களையும் நீரோடைகளையும் பார்த்துப் பார்த்து தன் வாழ்க்கையுடன் ஒப்பிட்டுக் கொண்டாள். அவள் கண்களில் நீர் நிரம்பி வந்துவிட்டது.

இரண்டுநாள் பிரயாணத்தை முடித்தாய் விட்டது. இன்னும் ஒருநாள் இருக்கிறது. தாய்தந்தையர்கள் எப்படி இருக்கிறார்களோ என்ற கவலை ஒருபுறம், மறுபுறம் தான் கணவனிடம் எப்படிப் பேசி அவர் மன்னிப்பைப் பெறுவதென்ற யோசனை ஒருபுறம், தன் வாழ்க்கை புகைத் தொடரைப்போல், வந்த வழியைத் திரும்பிப் பார்த்துச் செல்வதைப்போல் ஆகாமலிருக்கவேண்டுமே என்ற வேதனை.

"லக்ஷ்மீ! இன்னும் அரைமணி நேரத்தில் ஊர் சேர்வோம்'' என்ற மாமாவின் குரல் அவள் கனவுலகைக் கலைத்தது. கைகால்களை முறித்துக்கொண்டெழுந்தாள். பெட்டியைத் திறந்து அவளுக்கு வேண்டிய உடைகளை எடுத்துக்கொண்டாள். அத்தை தலையை வாரிப் புஷ்பம் சூடினாள். மேல்நாட்டு நாகரிகத்தையும் சற்றே கையாண்டாள். நன்றாய் டாய்லெட் செய்துகொண்டாள். புருவத்தைக் காதளவும் ஓடும்படி திருத்திக்கொண்டாள். 'லிப்ஸ்டிக்கை' உதட்டில் லேசாய்த் தடவிக்கொண்டாள். நெற்றியில் இரண்டு புருவங்களுக்கிடையிலும் வாசனையுள்ள ஜவ்வாதுப் பொட்டு. காதுகளில் பெரிய பெரிய வைர லோலக்குக்களைச் சொருகிக்கொண்டு, காதைக் கூந்தலால் மூடிக்கொண்டாள். கறுத்த வானத்தில் நக்ஷத்திரம் உதிர்வதுபோல் வைர லோலக் அந்த கூந்தலுக்கிடையில் மின்னிற்று. கண்ணாடியில் கடைசி முறையாய் முகத்தைப் பார்த்தாள். அவள் கவர்ச்சியுள்ள பார்வையும் அழகிய தோற்றமும் அவளையே சற்று மயக்கின. பெருமிதத்துடன்பார்த்துக்கொள்ளும்போதே அவள் எண்ணம் சரி என்று ஆமோதிப்பதைப் போல் சற்றே தலையசைத்தது. அவள் உள்ளமோ ரகசியமாய் மேலுக்கெழும்பி அடங்கியது. அவள் அஸமான அழகை ஒப்பிதமாய் வெளியிடும் அவள் சிருங்காரத்தைப் பார்த்து, அத்தை, மாமா, இருவர் கண்களும் மலர்ந்தாலும் உடனே சுருங்கிப் பெருமூச்சு வெளிப்பட்டது.

புகைத்தொடர் ஸ்டேஷனுக்குள் நின்றது. ப்ளாட்பாரத்தில் சாமான்களை எண்ணும் லக்ஷ்மியை ஒவ்வொருவரும் சற்று நின்று பார்த்துச் சென்றனர். அதிக கஷ்டமில்லாமல் கலெக்டர் பங்களாவைக் கார் அணுகியது. வீட்டு வாயிலில் சேவகன் நின்றிருந்தான். வருபவர்களைப் பார்த்து அவன் மலைத்து நின்றான். வீட்டில் 'ஏ. கே. ராமன்' இல்லை. எங்கோ கேம்ப் போயிருப்பதாய்த் தெரிந்தது.

— 5 —

லக்ஷ்மி கணவன் வருவதற்குள் வீட்டை ஒழுங்குபடுத்த முயன்றாள். மாமாவின் துணைகொண்டு வீட்டை வெகு நவீனமாய் அலங்கரித்தாள். தான் கொண்டுவந்த பாத்திரம் பண்டங்களையும் ஒழுங்காய் எடுத்துவைத்தாள். அதிகாலை நான்குமணியிருக்கும். பூபாள ராகத்தை ஆலாபனம் செய்துகொண்டு படுத்திருந்தாள். கேம்ப் சென்றிருந்த 'ஏ. கே. ராமன்' வந்தான். இவள் பாட்டில் ஆழ்ந்திருந்ததால் கவனிக்கவில்லை. அவன் வீடு முழுவதும் ஒரு சுற்றுச் சுற்றிப் பார்த்தான். தூங்கிக்கொண்டிருந்தவர்களின் முகம் சரியாய்த் தெரியவில்லை. லக்ஷ்மியின் முகம் தெரிந்தது. திடுக்கிட்டு நின்றான். அவன் ஏழு வருடங்களுக்குமுன் பார்த்த லக்ஷ்மிக்கும் இவளுக்கும் எவ்வளவோ வித்தியாசம். அவனுக்கு அவள் லக்ஷ்மி என்று தெரியவில்லை. அவள் இனிமையான குரலைக் கேட்டவாறு சற்று நின்று தன் அறைக்குச்சென்று உடைகளைக் கழற்றினான்.

"மாஜி! பாபுஜி ஆயகா'' (அம்மா! எசமான் வந்துவிட்டார்) என்ற தர்வானின் குரலைக் கேட்டு எழுந்தாள் லக்ஷ்மி. அவள் உடல் கிடுகிடென்று ஆடியது. மார்பு திக் திக்கென்று

அடித்துக் கொண்டது. அத்தையைப்போய் எழுப்பினாள். மாமாவும் கூட எழுந்தார்.

"என்ன மாப்பிள்ளையா! சௌக்கியமா" என்ருர் முகத்தில் அசட்டுச் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு வெங்குசாமி அய்யர்.

"அதெல்லாம் உடம்புக்கு ஒண்ணுமில்லே, சௌக்கியமாய்த்தான் இருக்கிறேன். நீங்கள் ஏது இப் பக்கம் வந்தது? வடக்கே தம்பதி சகிதமாய் யாத்திரையோ?"

"இல்லே. குழந்தை லக்ஷ்மியை அழைத்து வந்தேன். லக்ஷ்மி! வந்து மாப்பிளேக்கு நமஸ்காரம் பண்ணம்மா!" என்ருர் நடுங்கிய குரலில்.

ஏ. கே. ராமனின் முகம் அசடுதட்டிற்று. தான் சற்றுமுன் பார்த்தது கர்நாடக லக்ஷ்மியா? தான் சீமைக்குச் செல்வதற்குமுன் சென்ற லக்ஷ்மிக்கும் இவளுக்கும் எத்தனை வித்தியாசம்? அப்பொழுது அவள் வாயால் ஒரு பேச்சைக் கேட்க எவ்வளவு துடித்தான். இன்று தான் விரும்பாமலே தன்னிடம் வந்திருக்கிருள். அவள் நமஸ்காரம் பண்ணும்போது முகத்தை அப்புறம் திருப்பிக்கொண்டான். லக்ஷ்மி கால்கள் துவள அவ்வறையை விட்டகன்ருள்.

வெங்குசாமி என்னென்னவோ சொல்லிக்கொண்டு போனர். ஒன்றுக்கும் பதிலளிக்கவில்லே ஏ. கே. ராமன். கடைசியில் வெங்குசாமி சொன்னது அவனைக் கோபமுறச் செய்தது.

"மாப்பிள்ளே நீங்கள் என்ன செய்தாலும் அவள் உங்கள் பெண்டாட்டி என்பதை மறுக்க முடியாது. ஒரு பெண்பாவம் பொல்லாது. அநியாயம் செய்யாதிர்கள். இதற்காகவே நான் என் பல வேலேகளைவிட்டு வந்தேன். எந்தப் பகவான் புண்ணியத்தாலேயாவது குழந்தைக்கு வெடிந்தால் போதும்" என்ருர்.

"உங்கள் வேலேயைவிட்டு நான் வரச்சொல்லவில்லே. என் பெண்டாட்டியை அழைத்துவர எனக்குத் தெரியும். நடுவில் நீங்கள்........"

"அப்படின்ன" என்று திகைத்து மாப்பிள்ளேயின் முகத்தைப்பார்த்தார். மாப்பிள்ளே போனில் பேசிக்கொண்டிருந்தார். "ஆமாம். ஏ. கே. ராமன் ஐ. ஸி. எஸ். வீட்டிலிருந்து அவர் பந்துக்கள் செல்கிருர்கள். மூன்று முதல் வகுப்பு ரிஸர்வ் செய்து வைக்கவும்" என்று ரிஸீவரைக் கீழே வைத்து எழுந்து குளிக்கச் சென்ருர். கணவன் குளிக்கச் செல்வதையறிந்து லக்ஷ்மி வெந்நீர் அறைக்குள் சென்ருள். அவன் அகங்காரத்துடன் கதவுகளைப் படார் படார் என்று மூடிக்கொண்டு சென்ருன். அவள் நடுங்கியபடியே வெளியில் வந்தாள். அவன் தன் வேலேகளை முடித்துக்கொண்டு "ஸிஹால்சிங்! இன்று மத்தியானம் மூன்று மணிக்குப் புறப்படும் மெயிலில் இவர்கள் ஊருக்குப் போகிருர்கள். ஸ்டேஷன் மாஸ்டரைப் போய்க் கேட்டால் இவர்களுக்கென்று ஏற்படுத்திய பெட்டியைக் காண்பிப்பார். ஏற்றிவிடு" என்று வெங்குசாமியைப் பார்த்து, "சார்! நான் ராத்திரி பத்துமணிக்கு மேலேதான் வருவேன், எல்லாரும் சௌக்கியமாய்ப் போய்வாருங்கள். சேவகன் ரயிலேற்றி விடுவான்" என்று காரில் அமர்ந்து விர் என்று சென்ருன்.

— 6 —

மணி அய்யர் கடைசிப் படுக்கையில் பெருமூச்சு விட்டுக்கொண்டு படுத்திருக்கிருர். அன்று பெண்ணிடமிருந்து வரும் கடிதத்தில் அவர் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது. வாயிலில் வண்டி 'கடக்' என்று சப்தம் கேட்டது. "அப்பா!" சோகம் நிறைந்த லக்ஷ்மியின் குரல் அவர் காதில் பட்டது. பெண்ணைத் தாவிக் கட்டிக்கொண்டார். அவர் முகத்துடன் அவள் முகத்தை வைத்துப் பொருமினுள். அவள் கழுத்தில் கட்டியிருந்த தந்தையின் கரம் தாளுய்த் தளர்ந்துவிழுந்தது. "அண்ணு!" என்றலறினுள் வெங்குசாமியின் மனைவி. மணி அய்யரின் துடித்த ஜீவன் சாந்தியைப் பெற்றது.

'மரம் முத்திளுல் சேகு. மனுஷன் முத்திளுல் குரங்கு. மனம் முத்திளுல் கல்லு' என்பதைப்போல் லக்ஷ்மியின் மனம் கல்லாயிற்று. நாகரிகப் பழக்க வழக்கங்களே யாருக்காக ஏற்ருளோ அவனே அவளைத் துறந்தபின் அவளுக்கு அதில் பற்றில்லே. ஓர் ஏழைச் சிறுவனைத் தன் தாய்க்குத் தத்தெடுத்து (ஸ்வீகாரம்) வைத்தாள். நிலம் நீரைத் தானே கருத்துடன் கவனித்துக்கொண்டு, கணக்குவழக்குக்களைச் சரியாய் எழுதி, மீந்த தொகையைப் பேங்கில் போட்டுவைத்தாள். தன் கணவனின் நடத்தை நாளுக்குநாள் மோசமாய்க்கொண்டு வருவதை அறிந்து துக்கத்திலாழ்ந்தாள். ஆனுல் அவன் ஒவ்வொரு விஷயத்தையும் அறிந்துகொண்டிருந்தாள்.

அன்று அவள் ஏதோ துர்ஸ்வப்பனம்கண்டு சீக்கிரமே எழுந்துவிட்டாள். முகத்தை அலம்பிக்கொண்டு தன் அறைக்குள் நுழைந்தாள். எதிரில் சுவரில் மாட்டியிருக்கும் ஏ. கே. ராமனின் படம் அவளேப் பார்த்துச் சிரித்தது. அப்படியே நாற்காலியில் சாய்ந்து அப்படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். தன் கணவன் புத்தியறிந்தபின் தன்னை அழைக்காததை நினைத்து எத்தனையோமுறை அழுதிருக்கிருள். இன்றும் அப்படியே அழுதாள். அவள் மனதில் தோன்றியது, அவர் அப்பொழுது இப்படித்தானே என்னுடன் பேசத் துடிதுடித்தார். அப்பொழுது எங்கிருந்து இத்தனை வெட்கம் தன்னை வந்து பிடித்துக்கொண்டது? விதிதான் வெட்க ரூபமாய் வந்து தன்னை ஆட்டிற்ருே'

என்று சிந்தித்துக்கொண்டிருக்கும்போது "அக்கா!" என்று பதினேரு வயதுப் பையன் உள் நுழைந்தான். அவனுடன் மற்ருேர் இருபது வயது வாலிபனும் நுழைந்தான்.

"யார் நடராஜனு?"

"ஆம். அம்மா!"

"என்ன விசேஷம்? வேலை கிடைத்ததா? நான்தான் சொல்றேனே! சிவனேன்னு இங்கே வந்து இருந்துடு. உன் தம்பிக்கு ஸஹாயமாய். வீட்டில் நாளுக்குநாள் வேலை அதிகமாகிறது. அம்மாளுக்கோ கண் மங்க ஆரம்பிச்சுடுத்து. ஹூம், மங்காமல் என்ன செய்யும்? இவ்வளவு அழகான பெண்ணைப் பெத்தபின்? இந்த வரவு செலவு, கணக்கு வழக்கு இவைகளை நீ கவனித்துக்கொண்டால் பிற்காலத்துக்கு 'சுந்தரத்துக்கு (ஸ்வீகார சஹோதரன்) நீ ஸஹாயமாய் இருக்கலாம். நான் பூஜையோ புனஸ்காரமோ பாத்துப்பேன்பார்" என்ருள் வேதனை மிக்க த்வனியில்.

"அதைப்பற்றிச் சொல்லத்தான் வந்தேன். நான் மாமாவிடம் வேலைக்குப் போகிறேன்"

"மாமாவிடமா? எந்த மாமாவிடம்?"

சற்றுநேரம் அவன் வாயிலிருந்து சொல் வெளிவரவில்லை. பிறகு தடமாடிக்கொண்டே "உங்......கள்......கண......வரிட......ம். அவருக்கு எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்து, கார் ஓட்டத் தெரிந்து, சமையல் செய்வதிலும் சற்றுப் பயிற்சியுள்ள ஓர் ஆள்வேண்டுமாம். மாதம் எழுபது ரூபாய்கள் கொடுப்பாராம். அதை ஏற்றுக்கொண்டேன். அதைப்பற்றிச் சொல்லிவிட்டுச் செல்ல வந்தேன்".

"ரொம்ப சந்தோஷமப்பா! அவர் உடம்புகூட சரியாயில்லை என்று கேள்விப்பட்டேன். ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கோ! அவ்வப்பொழுது கடிதம்போடு அவ்விடத்திய விஷயத்துக்கு" என்ருள்.

களத்துவாயிலில் லக்ஷ்மி அரசமரத்தின்மேல் சாய்ந்துகொண்டு நிற்கிருள். அறுவடையான நெல் மூட்டைகளை—வரிசையாய்ச் சுமார் 500-மூட்டைகள்—வண்டிகளில் வியாபாரிகள் ஏற்றிக்கொண்டிருக்கிருர்கள். கையில் இரண்டு மூன்று கத்தை ரூபாய் நோட்டுக்கள் வைத்துக் கொண்டு, சில வியாபாரிகளிடம் பருத்தியின் விலையை நிர்ணயித்துக் கொண்டிருந்தாள். சைக்கிலில் அக்கிரகாரத்துக்குள் போகத் திரும்பிய தந்திச் சேவகன், அரசமரத்தடியில் லக்ஷ்மியைக் கண்டதே பணிவாய் இறங்கி வணங்கித் தந்தியைக் கொடுத்தான்.

"சொக்கப்பா! அவனுக்கு ஒருபணம் கொடு" (ஒருபணம்—நான்கணு) என்று சொல்லித் தந்தியைப் பிரித்துப் பார்த்தாள்.

மணி 18-15 'லக்னே'

"உடனே புறப்பட்டு வரவும்"

நடராஜன்

வியாபாரிகளிடம் "நாளை வந்து பருத்தி வாங்கிக்கொண்டு போங்கள். சொக்கப்பா! நாளைக்கு வீட்டில் அம்மாள் எதிரில் மூட்டைகளைக் கொடுத்துப் பணத்தை அம்மாளிடம் கொடு. தம்பியை எல்லாம் கணக்கெழுதி வைக்கச் சொல்கிறேன். முத்தய்யனை ஸ்டேஷனுக்கு வண்டி கட்டச்சொல்லு. நான் பட்டணம் மட்டும் போய்வர வேண்டும்" என்று வீட்டுக்குப் போனாள். தன் தாயிடமும் பட்டணம் செல்வதாய்ச் சொல்லி, வீட்டில் நடந்துகொள்ள வேண்டியதையும் சொல்லிப் புறப்பட்டுவிட்டாள்.

ஊரை அணுகியதும் ஓர் காரை பேசிக்கொண்டு நேராய் ஏ. கே. ராமனின் பங்களாவை அணுகினாள். ஏ. கே. ராமன் தன் நினைவற்று வீரிட்டுக்கொண்டிருந்தான். சோகப் பதுமையாய் உள்நுழைந்த லக்ஷ்மியை நடராஜன் அன்புடன் வரவேற்றான்.

"நடராஜா! திடீரென்று என்ன வந்தது?"

"நான் வந்தப்பிலிருந்தே ஆரோக்கியம் குறைவுதான். இதில் பத்துநாளாய்க் கொஞ்சம் ஜ்வரம், லீவ் எடுக்க முடியாதபடி அவசர வேலைகள் வேறு. சென்ற வாரம் எங்கோ பார்ட்டிக்குச் சென்றுவிட்டு, இரவு தாமே காரை ஓட்டிக்கொண்டு வந்தார். கொஞ்சம் குடி அதிகமாய் விட்டதுபோல் தோன்றுகிறது. வெகு விசையாய்க் காரை ஓட்டிக்கொண்டு வந்தவர் அத்தெருவின் எதிரில் இருக்கும் பெரிய வீட்டைக் கவனிக்காமல் இன்னும் தெருவு நீண்டு போகிறதென்று ஓட்டவே வீட்டின் வாயிலில் கார்மோதித் தலைகீழாய், பின்னுக்கு விழுந்து கால்போய் ஸ்டியரிங்கில் மாட்டிக்கொண்டு, ஜன்னற் கதவுகளின் கண்ணாடி நெற்றியைக் கிழித்துவிட்டது. கால் கட்டைவிரலே போய்விட்டது. அதுதான் இவ்வளவு வேதனை. டாக்டரின் அபிப்பிராயம் நாளைக்குக் கொஞ்சம் நினைவுவரலாமென்று" என்றான்.

அதிகாலை ஐந்து மணி. 'நர்ஸ்' ஹாலில் தூங்கிக்கொண்டிருந்தாள். லக்ஷ்மி நோயாளியின் அருகில் கவலையுடன் வீற்றிருந்தாள். நோயாளி கண்களை மெள்ளத் திறந்து "நடராஜ்!" என்றான் பலஹீனமான குரலில். "எஸ்" என்று சொல்லிக்கொண்டே அருகில் வந்து நின்றுகொண்டான் நடராஜன். லக்ஷ்மியை உற்றுப் பார்த்தான். மூளை வேலை செய்யவில்லை. சோர்ந்து கண்களை மூடினான்.

பதினைந்து நாள் ஓடி மறைந்தன. அவனுக்கு நல்ல நினைவு வந்தது, ஆனால் மண்டைப் புண்ணும் கால் ரணமும் ஆறவில்லை, ஆதலால் எழுந்து நடக்கக் கூடவில்லை. இனி உயிருக்கு ஆபத்தில்லை என்றறிந்தாள். அவள் சோகம் சற்றுக் குறைந்தது. அவனுக்காக நாகரிகம் பயின்றாளவள். அவன் அழைத்துச் செல்லாவிடினும் ஸ்திரீ தர்மத்தை நன்கு அனுஷ்டித்தாள். தான் ஊரைவிட்டுப் போகவேண்டும் அதற்குள் கூடியமட்டும் வீட்டைச் சுத்தம் செய்துசெல்ல நினைத்துப் பீரோக்களைத் திறந்தால் உலர்ந்த ரொட்டிகள், பல திறப்பட்ட பழச் சாறுகள் நிரப்பப்பட்ட டப்பாக்கள், பிஸ்கட் தினுஸுகள், இரண்டுமூன்று பீரோக்களில் கணக்கிலடங்கா உடைகள், தரவாரியான பாதரக்ஷைகள். அதைத்தவிர்த்து உடைகள் வைக்கும் ஸ்டேண்டில் நல்ல உயர்தர உடைகள் தூசுபடிந்து கிடந்தன. எல்லாவற்றையும் ஒழுங்குபெற எடுத்துவைத்தாள்.

அவள்வந்து மூன்று மாதங்களாகிவிட்டன. ஏ. கே. ராமன் மெள்ள எழுந்து வீட்டிற்குள் நடமாடுகிறான். அவன் வாய்க்குவேண்டிய ருசிதரும் உணவு வேளைக்கு வேளை கொடுக்கப்படுகிறது. அவன் சரியான நினைவு வந்தபின் லக்ஷ்மியைப் பார்க்கவில்லை. ஆனால் நடராஜனின் அக்காள் வந்திருக்கிறாள் என்று தெரியும். தான் நோயுடன் நலியும்போது அவள் பிரேமபூர்வமான சிச்ருஷையைப் பெற்றான். அவன் உடலில் சற்றே தெம்பு கண்டவுடன் அவள் கண்களில் படுவதில்லை.

அன்று மாலை அவள் ஊருக்குச் செல்கிறாள். அவன் ஆபீஸில் வேலை ஏற்கச் சென்றான். அவள் பக்தியுடன் வீட்டில் பூஜை செய்துகொண்டிருந்தாள். நடராஜன் வெளியில் சென்றிருந்தான். அவனுக்கு ஆபீஸிலிருக்க மனம் இசையாததால் வீட்டிற்கு வந்தான். ஒருநாளுமில்லாமல் சாம்பிராணி, ஊதுவத்தி வாசனை மணக்கிறது. தன் வீடு ஒருநாளுமில்லாமல் மங்கள திரவியங்களுடன் மனதை மயக்கவே, வாசனைவரும் அறையை நோக்கிச் சென்றான். பெரிய லக்ஷ்மி விக்ரகத்தினருகில் அவள் அமர்ந்து லக்ஷ்மீ அஷ்டோத்தரத்தை ஏகாக்ர சித்தத்துடன் கண்களை மூடி, கை குவித்துச் சொல்லிக்கொண்டிருந்தாள். ஸ்நானம் செய்து தளர முடிந்த கூந்தல் முன் நெற்றியில் சுருள் சுருளாய் நெற்றிக்குத் தோரணம் கட்டியதைப்போல் தொங்குகிறது. அவைகளுக்கு நடுவில் அகன்ற குங்குமப் பொட்டு. தட்டுக்களில் நிறையப் பற்பல கனி வர்க்கங்களும் புஷ்பங்களும் வைக்கப்பட்டிருந்தன. அவள் நிர்மல பக்திக்கு வியந்தாலும், இத்தனை செலவும் தன் சம்பாதனையால் செய்யப்பட்டதுதானே என்ற பெருமை ஒருபுறமும், ஒருபுறம் இப்படி எத்தனை பணம் தன்னுடையது பாங்கியிலிருந்து கையாண்டிருக்கிறார்களோ என்ற சந்தேகமும் தோன்றின. அவ்விடம் விட்டுப்போகவும் மனம் வரவில்லை. அப்படியே மலைத்து நின்றான் கையில் பிடித்த கைத்தடியின்மேல் சாய்ந்து. அவள் தியானம் முடிந்து அம்பிகையை நமஸ்கரித்து எழுந்தாள். எதிரில் நிற்கும் எஜமானனைக் கண்டதும் அவன் காலில் பணிந்து நமஸ்கரித்தாள் "உனக்கு ஸர்வ மங்களமும் உண்டாகட்டுமம்மா!" என்று மனப்பூர்த்தியாய்ச் சொன்னான். அதற்குத் தலையசைப்பதைப்போல் விளக்கின் ஜோதி

யும் ஓர் ஆட்டம் ஆட, அம்பிகையின் மார்பிலிருந்த ரோஜா மலர் கீழே விழுந்தது. அவள் தலைகுனிந்தபடியே அப்பால் சென்றாள்.

— 7 —

அன்று ஏ. கே. ராமன் தன் அறையில் ஏதோ யோசனை செய்தபடி வீற்றிருந்தான். அடுத்த அறையில் பேசும் சப்தம் கேட்டது.

“அக்கா! அப்படியானால் நீங்கள் போய் விடுவதென்று நிச்சயித்து விட்டீர்களா?”

“ஆமாம், நடராஜா” அவரை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள். உனக்கு அம்மா பெண்பார்த்துக்கொண்டிருக்கிறாளாம். நிச்சயமானதும் எழுதுகிறேன். ஒரு பத்துநாளைக்கு நம்பிக்கையான ஆளைப் பார்த்து வைத்துவிட்டுவா! பிறகு எப்படி நடந்துகொள்ளலா ... க்கொள்ளலாம்.”

“நீ, உன் பெண்டாட்டியுடன் அங்கேயே இருக்க நேர்ந்தாலும் நேரலாம்”

“நீங்களே இங்கிருந்துகொண்டு ஒரு நம்பிக்கையான ஆளை வைத்துக்கொண்டு...........”

“சுத்த அசட்டுத் தனம். அது நடக்கக்கூடியதா? அது பைத்தியக்கார யோசனை”

“அப்படியானால் நீங்கள்?”

“என்னைப்பற்றிய கவலை உனக்கு வேண்டாம். நான்.........” என்னும்போதே அடுத்த அறையில் ராமன் இருமுவது கேட்டது. இருவரும் ஓடோடி வந்தனர். அவள் அடுக்களையில் ஏதோ செய்யச் சென்றாள். “நடராஜ்!”

“ஸார்!” என்று மருந்தை எடுத்துக்கொண்டு வந்தான். நல்ல மணம் அடுக்களையிலிருந்து வந்துகொண்டிருந்தது. “நடராஜ்! இன்னிக்கு நீ சமைக்கவில்லையா?”

“அக்கா வந்தப்பலிருந்து அவதான் செய்கிறாள்”

“அப்படியா!” மறுபடியும் யோசனை. தான் வியாதியாயிருந்தபோது தன் தேவையை வெகு எளிதாய்ப் பூர்த்திசெய்த அவள் இன்று ஊருக்குப் போவதென்றால் ஏதோ வேதனை செய்தது. தன் அங்கமே தன்னை விட்டகலுவதாய்த் தோன்றியது. மறுபடியும் “என்ன சொன்னே?
....

அக்கா என்னிக்கு ஊருக்குப் போறா?”

‘இன்னிக்கு சாயங்காலம்”

“ஏன்? அதற்குள் என்ன அவசரம்?”

‘என்னவோ போகவேண்டுமாம்”

“அத்திம்பேர் எங்கே இருக்கார்ன்னே?”

“எங்கோ வடக்கே இருக்கான்னு கேள்வி”

“அவரிடம் குடுத்தனம் செய்யவே இல்லையா?”

“கல்யாணம் ஆனப்பரம் இரண்டுதரம் வந்திருந்தாராம். அக்கா திரண்டப்பரம் அவர் வந்து பார்க்கவே இல்லை.”

“சுத்த அசட்டுப்பேர்வழி. முரடன், அவன் என்ன வேலையிலிருக்கிறான் சொல். என்னாலானால் வழிக்குக் கொண்டுவரப்பார்க்கிறேன். உங்கக்காளை இங்கேயே இருக்கச் சொல்லு. லக்ஷ்மி தேவியைப்போல அழகுள்ள அவளை ....உடனே அவன் மனதில் அவனையும் அறியாமல் அவன் மனைவி லக்ஷ்மியின் நினைவு வந்தது.

“எஸ்”

“உங்கக்காளிடம் சொன்னையா?”

“இல்லை”

“ஏன்?”

....

“அவள் இங்கிருப்பதில் உனக்கிஷ்டமில்லையா?”

அதற்கும் மௌனம்.

“சரி பேங்க் புஸ்தகத்தை எடு” அதற்குள் லக்ஷ்மி வாயிற்படியருகில் வந்து தலைகுனிந்து கால் கட்டை விரலால் பூமியில் தன் தலையெழுத்தைக் கீறிக்கொண்டே “நான் வருகிறேன். உடம்பை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள்” என்று சொல்லக்கூடாமல் சொல்லி, சரசரவென்று காரில் ஏறினாள்.

“என்னிடம் டிக்கட்டுக்கு ரூபாய் இருக்கிறது. அப்புறம் வாங்கிக்கறேன்” என்று சொல்லி நடராஜன் காரை ஓட்டிக்கொண்டு சென்றான். அவர்கள் செல்லும் திக்கை ஏ. கே. ராமன் பார்த்துக்கொண்டு நின்றான். லக்ஷ்மி கண்களை ஒற்றிக்கொண்டே திரும்பிப் பார்த்தாள். அச்சமயம் டி. எம். ஓவின் (ஜில்லா மெடிகல் ஆபீஸர்) வேலையாள் ஓர் ரசீதைக் கொண்டுவந்து ஏ. கே. ராமனிடம் கொடுத்தான். அதில் மிஸஸ். லக்ஷ்மி ஏ. கே. ராமனால் தாம் பெற்ற ரூபா நாலாயிரத்துச் சில்லறை, தம் விஸிடிங் பீஸும், மருந்தின் கிரயமும் பெற்றுக்கொண்டதாக அவளுக்கு வந்த ரசீதைப் பார்த்ததும் “வறண்டபார்வை” யுடன் கார் சென்ற திக்கைக் கண்ணீர் மல்கப் பார்த்தான். கையிலிருந்த பேங்க் புஸ்தகத்தில் தான் போட்ட பணம் அப்படியே இருந்தது.

சென்ற இதழ் தொடர்ச்சி

லக்ஷ்யச் சிதைவு

கே. சுந்தரம்மாள்

அநேக நமஸ்காரம்.

தங்கள் கடிதம் கிடைத்தது. தாங்கள் இப்படிச் செய்வீர்களென்று கனவிலும் நினைக்கவில்லை. குடும்ப நிர்ப்பந்தத்திற்காக யாரேனும் இப்படிச் செய்வார்களா? எனக்கும், குழந்தைகளுக்கும் நன்மை செய்திருப்பதாக உங்கள் அபிப்பிராயம் போலும். இப்படிச் செய்தது நீதியாகுமா? அல்லது தர்மமாகுமா? இப்படிப் பேதையர்களை ஏமாற்றுவது ஆண்மையுள்ள வீரத்தனமோ? "பிரிவு" என்ற தண்டனையை எனக்கு அளிக்கவேண்டுமென்பது உங்கள் அன்பின் செய்கை போலும். நீங்கள் எவ்விதத் தண்டனைகளை அளித்தபோதிலும் நான் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டவள். உங்களைப்போல் கவிதா சக்தி நிரம்பிய கடிதம் எழுத எனக்கு அறிவு ஏது? ஏதோ மனதில் தோன்றுவதை எழுதக்கூட அவகாசமில்லை. தற்சமயம் உங்கள் கடிதம் கிடைத்தபொழுது வீட்டில் ஒருவருமில்லை. அவர்கள் வருவதற்குமுன் எழுதிப் போட்டுவிட வேண்டுமென்ற அவசரத்தில் எழுதுவதால் மனதிலுள்ளவைகளை எழுத முடியவில்லை. தங்களைப் போன்ற விசாலமான அறிவு எனக்கு ஏது? தங்களது கவிதா சக்தி வாய்ந்த கடிதமானது எனது மூளையையே குழப்பிவிட்டது. எரிமலையின் பக்கத்தில் நிற்பதுபோன்ற உணர்ச்சியே மிஞ்சி நிற்கின்றது. என்னுடைய மனம் நிர்மலமான வழியில் செல்லுவது சத்யமானால் தாங்கள் சுகமாக என்னிடம் வந்து சேருவீர்கள்! என்ற நம்பிக்கையில் காலம் போகவேண்டும். இதுநாளும் என் மனதில் யாதொரு குறைவும் நினைத்ததில்லை. உங்கள் விருப்பத்திற்கு மாருக ஒருநாளும் நடக்கமாட்டேன். உங்கள் உத்தரவை, அன்புப் பூங்காவில் உதிரும், காதல் மிகுந்த சுகந்த மலராகவே சிரசின்மேல் தாங்குவேன். உங்கள் நம்பிக்கைக்கு ஒருநாளும் துரோகம் செய்யமாட்டேன். குழந்தைகள் விஷயத்தில் தவறி நடந்தேனானால், பதித் துரோகிகள் அடையும் கதியை அடைவேன்.

உங்கள் அன்பு என்றைக்கும் எனக்குச்சொந்தம் என்ற நினைப்புடன்தான் இருந்தேன். குழந்தைகள் விஷயத்தில் என்று ஒன்றுபோல் நடந்துவருவேன். 'படிப்பு மண்ணாங்கட்டி' என்பது என் மனம் விரும்பாத விஷயம், கல்யாணம் ஆகுமுன், கான்வெண்டில் பணச் செலவின்றி, பி. ஏ. வாசிக்க வசதியளிப்பதாக மிகவும் வற்புறுத்தினர்கள். அப்பொழுது எனது மனம் 'குடும்பப்பணியில் வெற்றிபெறுவதே பெண்களின் கடமை' என்ற லக்ஷ்யத்திலிருந்ததால் அவ்வருஷமும் கல்யாண[illegible] போனால் படிப்பதாக வாக்க[illegible]கள் என்னை ஏற்றுக்கொள்ள[illegible] எனது லக்ஷ்யம் நிறைவேறியதாக நினைத்தேன். ஆனால் தற்சமயம் உங்கள் செய்கை எனது லக்ஷ்யத்தைச் சிதற அடித்துவிட்டது. படிப்பதற்கு மனமில்லாவிட்டாலும் உங்கள் மனம்—சந்தோஷத்தை அடைய-நிம்மதியை நாட அவசியம் ஹாஸ்டலில் சேர்ந்து படிக்கிறேன். தாங்கள் சுகமாக இருப்பதாக நினைத்துக் கொள்ள வேண்டியதுதானா? பாக்யமற்ற பேதைக்குக் கடிதமாவது எழுதிக்கொண்டிருங்கள். தங்களின் ஹ்ருதயத்தைத் திறந்து காண்பிக்கும் சமயம் தரிசன பாக்யம்கூட அற்றுவிட்டது. என்மனம் சோகத் திரையினால் மறைபடுகிறது. எழுத முடியவில்லை. விதியின் செயல் இதுதானா? கடைசியில் ஒரு வேண்டுகோள், தப்பிதமானால் மன்னியுங்கள். விடுதலைபெற முடியுமானால் புறப்பட்டு வந்துவிடுங்கள். தாங்கள்பக்கத்திலிருக்கும்பொழுது எத்தகைய கஷ்டமும் தோன்ருது. உங்கள் நம்பிக்கைக்கு ஒருநாளும் துரோகம் செய்யமாட்டேன் என்பது உங்கள் ஹ்ருதய மறியும். குழந்தைகள் அம்மா யாவரும் சுகம். அப்பா இன்னும் வரவில்லை. குழந்தைகளுக்குஎவ்விதச் சமாதானத்தினால் தகப்பனருடைய அன்பைக் காண்பிக்கமுடியும் என்ற சிந்தனைக்கு முடிவே காண முடியவில்லை.

இப்படிக்குத் தங்கள்

அடியாள்

பவானி

எழுதி முடிந்ததும், சங்கரின் மேஜை டிராயரைத் திறந்தாள். அதில் தலை ஒட்டின கவர்கள் வைக்கப்பட்டிருந்தன. ஒன்றை எடுத்து, கடிதத்தை உறையிலிட்டு ஒட்டி, எடுத்துக் கொண்டு வாசல் பக்கம் வந்தாள். அங்கும் இங்கும் பார்த்தவாறே எதிரிலுள்ள தபாற் பெட்டியில் கவரைப் போட்டுவிட்டு, தன்னை யாராவது பார்த்துவிடுவார்களோ என்ற பதட்

டத்துடன் வீட்டிற்குள் சென்ருள். நெஞ்சும் மார்பும் திக், திக் என அடித்துக்கொண்டன. வாசற் கதவைத் தாளிட்டுவிட்டு, கூடத்தில் போடப்பட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் வந்து படுத்துக்கொண்டாள். அடக்கமுடியாமல் அழுகை வந்தது. எவ்வளவு நாழி அழுதாளோ அவளுக்கே தெரியவில்லை. சோகம் நித்திரையில் லயித்தது. தடதடவென்று கதவை இடிக்கும் சப்தம் கேட்டு, திடுக்கிட்டு எழுந்து கதவைத் திறந்தாள். மாமியார் உள்ளே வந்தாள். கடிதத்தைக் கொடுத்தாள்.

"யார் எழுதியிருக்கா?" என்ருள்.

"சாரு அப்பாவின் கையெழுத்துப்போலிருக்கிறது" என்ருள்.

"பிரித்து வாசியேன், என்னிடம் கொடுப்பானேன். கண்ணு மண்ணுங்கட்டியா. ஒரு கண்ணுடிக்குக்கூட விதியில்லை" என்ருள்.

"அன்புள்ள அம்மாவிற்கு அநேக கோடி நமஸ்காரம்.

இவ்விடம் நான் ஸௌக்யமாக இருக்கிறேன். அவ்விடம், நீ, குழந்தைகள் பவானி முதலியவர்கள் ஸௌக்யமா? அப்பா வந்து விட்டாரா? எங்கள் ஆபீஸில் என்னைப்போல் வேலைபார்க்கும் நான்கு பேர்களை யுத்தத்தைப் பற்றின் ஓர் வேலையை ஒப்புக்கொள்ளவேண்டுமென்று கவர்மெண்டார் உத்தரவு போட்டு விட்டார்கள். மறுக்க முடியாததால் ஒப்புக் கொண்டு விட்டோம். இதனுல் ஒரு கெடுதலுமில்லை. விதியை வெல்ல ஒருவராலும் முடியாது. நான் யுத்த வேலையிலிருப்பதால், சாரு பாலு, பவானி மூவருக்கும் படிப்பதற்குச் சர்க்காரே உதவிசெய்வார்கள். பவானியை வீட்டில் வைத்துக்கொண்டு நீ கஷ்டப்படவேண்டாம். அவள் அண்ணுவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். அவன் வந்து, காலேஜிலும், ஹாஸ்டலிலும் சேர்த்துவிடுவான். உன் உதவிக்கு ஒரு வேலைக்காரியை வைத்துக்கொண்டு குழந்தைகளை மேல் பார்த்துக்கொண்டு ஸௌக்யமாக இரு. இந்தக் கல்யாணம் செய்துகொண்டிருக்கவேண்டாம். இதனுல் ஒருவருக்கும் சுகமில்லை. நம்ம வீட்டில் புகுந்த மட்டில் அவள் கஷ்டப்படாமலிருக்கவேண்டியது நமது கடமை. படித்த பெண் படித்து உத்யோகம் செய்துகொள்ளட்டும். எனது ஆயுள் யுத்தப்பணியிலேயே முடிந்துவிடுமாயின் பவானியின் ஜீவியத்திற்கு ஒரு வழியாகும். நான் சுகமாக வந்தாலும் நமக்கு இஷ்டமானுல் கூட்டிக்கொள்ளலாம். இல்லையேல் அவள்பாட்டிற்கு இருக்கலாம். குழந்தைகளின் பாதுகாப்பிற்கு நீ இருக்கும்பொழுது எனக்குக் கவலை என்ன? ஒரு விஷயம் கஷ்டம். சர்க்கார், பணத்தைப் பவானியின் பெயருக்கே அனுப்பு

இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபீஸ்: **"இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்"**

வடக்கு பீச் ரோடு :: மதராஸ்

லோகல் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட் திருவல்லிக்கேணி மயிலாப்பூர்
தியாகராயநகர் புரசவாக்கம் மவுண்டு ரோடு

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும்
பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	...	...	ரூ.	60,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	....	...	ரூ.	33,48,561
ரிஸர்வ் நிதி ...	...	...	ரூ.	32,00,000
டிபாஸிட்டுகள் ...	...	...	ரூ.	9,91,53,0

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N.P.B. **N. கோபால அய்யர்**, செக்ரடரி

வார்கள். இருநூறு ரூபாய் வரும். நூற்று எழுபத்தைந்தை நீ வாங்கிக்கொள். இருபத்து ஐந்தை அவள் செலவிற்குக் கொடு. அப்பா மற்ற விவகாரங்களை ஒழுங்கு செய்வார். பவானியை அவசியம் ஹாஸ்டலுக்கு அனுப்பிவிடு. என்னைப்பற்றிக் கவலைப்படாதே. குழந்தைகள் ஸௌக்யத்திற்கு அடிக்கடி கடிதம் எழுது. நானும் எழுதுகிறேன்.

இப்படிக்கு
உன் அன்புள்ள
சங்கர்

என்று படித்துமுடித்தாள் பவானி.

"பாத்யோடி. ஆளின் உறவும் உறவா? வேலி மறைவும் மறைவா? அவனை நம்பாதே என்று சொல்லிக்கொண்டிருந்தேனே கேட்டையா? ஆம்படையான் கைக்குள்ளிருக்கிருன் மாமியார் என்னமதிப்பு" என்றிருந்தாயே,இப்பொழுது தெரிந்ததா அவனுடைய சுபாவம்? உன்னை வீட்டில்கூட இருக்கவேண்டாமென்று சொல்லிவிட்டான். உன்னுடைய மாமாலம், பசப்பு, மினுக்கு எல்லாம் அவனுக்குப் பிடிக்கவில்லை. தரித்திரப்பீடை, ஆக்கங்கெட்டமூளி, உன் பாழும் அதிர்ஷ்டத்தினுல் ஒரே பிள்ளையைப் பிரிந்து நிற்கும்படியாயிற்று, தாயில்லாக் குழந்தைகளுக்கு அப்பனுடைய ஆதரவும் இல்லாமல் போச்சு. பாடையெடுக்க, நாசமாப்பூட, என்னத்திற்கு இந்த ஜன்மத்தைச் சுமக்கவேண்டும், உமர்போல் வளர்ந்தால் போதுமா? என்ற ஸஹஸ்ரார்ச்சனைக்குத் தொடங்கிவிட்டாள்.

"தகப்பனுர் யுத்தத்தில் சேர்ந்துவிட்டார்" என்ற சொல் சாரு, பாலு இரு குழந்தை உள்ளத்திலும், ஒருவிதச் சஞ்சலத்தைக் கொடுத்தது.

"சாரு! அப்பா இனிமேல் இங்கே வரமாட்டாரா?" என்றுன் பாலு.

"வருவார்டா. நம் அதிர்ஷ்டம் எப்படியோ? எல்லாம் இந்தச் சித்தியினுல் வந்த அனர்த்தம்" என்று பாட்டியின் உபதேசத்தை ஒப்புவித்தாள்.

தனது வருத்தத்தை வெளிக்காட்டாமல், அவர்கள் ஏசும் கொடுஞ்சொற்களைப் பொறுமையுடன் சஹித்து வந்தாள். மூன்ருவது நாள் தமையன் வந்தான். கணவன் சொல்லைத் தட்டினுலும் பரவாயில்லை, குழந்தைகளுடன் இருக்கவேண்டும் என்று நினைத்தாள். ஆனுல் மூன்று நாட்களில் அவள் பட்ட ஹிம்ஸையானது, சங்கர் 'தீர்க்கதிருஷ்டியுடையவர், அவர் சொல்லை மீறி நடந்து, பதித் துரோகத்திற்காளாகியும், நல்லபெயர் கிடைக்கப்போவதில்லை, குழந்தைகள் தன்னிடம் ஒட்டப்போவதில்லை, அதனுல் அவர் சொற்படி ஹாஸ்டலுக்குச் செல்வதே பரம சுகம்' என்ற முடிவிற்கு வரும்படி செய்துவிட்டது.

"மாமி, பவானியை அனுப்புங்கள். ஹாஸ்டலில் சேர்த்துவிட்டு நான் ஊருக்குச் செல்ல வேண்டும்" என்றுன் பவானியின் தமையன்.

"ஏண்டாப்பா, ஆம்படையான் சண்டைக்குப் போனுல் பொண்டாட்டி படிக்கவேண்டுமென்பது சாஸ்திரமா? அவபாட்டுக்கும் குழந்தைகளோடு இருக்கட்டும். தள்ளாத காலத்தில் பிள்ளையைவிட்டுப் பிரிந்திருக்கவேண்டுமென்பதற்கு வயிற்றுப் பிழைப்பு காரணமாயிற்று. நாட்டுப்பொண்கூட உதவியாயிருக்கக் கூடாதா? குழந்தைகள் படிப்பைக் கவனிக்க உதவியாயிருக்கலாகாதா? பள்ளிக்கூடமும் வேண்டாம் பறக்கூடமும் வேண்டாம். குடும்பம் பண்ணத்தெரியாத அசடு. சண்டைக்குப் போயிருக்கு. அந்தப் புத்திபோலத்தான் இருக்கும் பொண்டாட்டியைப் படிக்கணும்னு சொல்லறது" என்ருள்.

அவள் சொல்வது வழக்குக்குக் கட்டுப்படக்கூடிய விஷயமாக இருந்தபடியினுல் பாஸ்கரனின் மனம் சற்றுத் தடுமாறிற்று. 'ஆம், அவள் சொல்வது உண்மையான விஷயம் தானே" என்று நினைத்தான். ஆனுல் சங்கர் கடிதமும், பவானி படும் ஹிம்ஸையை ஊரார் சொல்லக் கேட்டிருந்ததும் நினைவில் தோன்ற, "சே! என்ன மதியீனம்" என்று நினைத்து, "மாமி, அதெல்லாம் ஒன்றுமில்லை. அவளும் தாயற்றவள். தற்சமயம் நான் கொண்டு வைத்துக்கொள்ள மாட்டேனு? சங்கர் சொல்வது ஒரு விஷயத்தில் மிகவும் போற்றத் தக்கதே. படிப்பது எதற்கும் நல்லது. ஹாஸ்டல் சென்ருல், வாரம் ஒரு முறை வந்து குழந்தைகளைப் பார்க்கமாட்டாளா? உங்கள் பெண்ணைப்போல் நினையுங்கள். சங்கரின் பிரிவு தோன்ருமலிருக்கப் படிப்பதே சிறந்த மார்க்கம். விடுமுறை காலங்களில் வீட்டில் வந்திருப்பாள். தயவுசெய்து அவள்மீது இரக்கங்காட்டுங்கள்" என்ருன்.

அந்தச் சமயம் சங்கரின் தகப்பனுர் வரவே முத்தம்மாள் மேலே எதிர்த்துப்பேசவகையில்லாமல் போய்விட்டது. அந்தப் பெண் வீட்டிலிருந்து பட்ட சுகம் போதும், பாஸ்கரா, அழைத்துச்செல்; மற்ற வியவகாரங்களை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்ருர்.

எதிர்ப்பின்றி யாவும் நடந்தேறின. வீட்டில் உதவிக்கு ஓர் சமையற்கார அம்மா ஏற்பாடாயிற்று.

சங்கர் சென்றதுபற்றி அவன் தந்தைக்கு மிகவருத்தம் தோன்றினுலும், சென்றதைப் பற்றி நினைத்துப் பயனில்லை என்ற ஆண்மை ஹிருதயத்தின் தைரிய மனப்பான்மையில் வருத்தத்தை வெளிக்காட்டாமல் விஷயங்களைச் சீர்படுத்திக்கொண்டு வந்தார்.

மணியார்டர் வந்ததும் ஹாஸ்டலுக்குச் சென்று, பணத்தைப் பவானியின் செலவிற்குக்

கொடுத்துவிட்டு, பாக்கியை முத்தம்மாளிடம் கொடுத்துவிடுவார். பவானிக்கும் தேறுதல் வார்த்தைகள் சொல்லி வருவார். விடுமுறை தினங்களில் பவானி வீட்டிற்கு வந்தால், அவள் போகும்வரை அயலிடங்களுக்குச் செல்லாமல், அவளை முத்தம்மாள் யாதொன்றும் சொல்ல விடாது பாதுகாப்பார்; அப்படியிருந்தும் சமயங்களில் பவானிமீது சொல்லம்புதொடுக்கத் தவறமாட்டாள். ஆனால் நாளாக நாளாக, பவானியின்மீது எய்யப்படும் சொல்லம்புகளின் வேகம் குறைந்து வந்தது. சங்கர் சொல்லியபடி முத்தம்மாளின் ஆங்காரச் சொல்லம்புகளுக்குக் குழந்தைகளே இரையாகத் தொடங்கினார்கள். சில சமயம் பவானி ஆச்சர்யப்படும்படி இன்முகமாகவும் பேசுவாள் மாமியார். குழந்தைகளும் இவளிடத்தில், பற்றுதல் கொண்டதுபோல் நடந்து வந்தார்கள். இவ்வளவிருந்தும், பவானியின் மனதிற்கு ஒருவிதத் திருப்தியோ நிம்மதியோ ஏற்படவில்லை.

இப்படியே வருஷங்கள் இரண்டும் ஓடி மறைந்தன. அன்று மத்தியானம் சங்கரின் வருகையைத் தெரியப்படுத்தும் கடிதத்தைப் பார்த்ததும், அவள் மனதில் அளவற்ற ஆனந்தம் ஏற்பட்டது. உடனே, குழந்தைகளுக்குக் கடிதம் எழுதினாரோ இல்லையோ? அவர்களிடம் சொன்னால் எவ்வளவு ஆனந்தப்படுவார்கள்? என்று நினைக்கும்பொழுது, சாருவும் பாலுவும் ஆனந்த மிகுதியினால் ஆர்ப்பாட்டம் செய்வதுபோல் அவள் மனக்கண்ணில் தோன்றினது. தானே சிரித்துக்கொண்டாள். சாயங்காலம் காலேஜ் விட்டதும் வீட்டிற்கு வந்தாள். வீட்டில் மாமியாரில்லை. லக்ஷ்மியும் குழந்தைகளுமேயிருந்தார்கள். அவர்களுக்காக வாங்கி வந்த பக்ஷணம், பிஸ்கட், சாக்லெட், ரிப்பன், சோப்பு முதலியவைகளைக் கொடுத்துவிட்டு, "சாரு, பாலு, இன்னும் ஒரு மாதத்தில் உங்கள் அப்பா வருவதாகக் கடிதம் வந்திருக்கிறதே உங்களுக்கு எழுதியிருக்கிறாரா?" என்றாள்.

"எங்களுக்கு எழுதவில்லையே" என்று சாரு சொல்லி முடிக்குமுன், அப்பா வரப்போகிறாரா? என்று குதித்தான் பாலு.

"சாயங்காலம் உங்கப்பாவிடமிருந்து ஒரு கவர் வந்தது. பாட்டி உங்களிடம் கொடுக்க மறந்துவிட்டாள்போலும்" என்றாள் லக்ஷ்மி.

"உடனே பாலு ஓடிச்சென்று எங்கெல்லாமோ குடைந்து கவரை எடுத்து வந்துவிட்டான். பிரித்துப் பார்த்தார்கள். அதிலும் புறப்பட்டு வருவதாக எழுதியிருந்தான். பவானியின் கற்பனா உலகில் கண்டதுபோல் சாருவும் பாலுவும் ஆனந்தக் கூத்தாடினார்கள்.

பிறகு, "சித்தி! இனிமேல் நாங்களும் உன்னுடன் ஹாஸ்டலில்தான் இருப்போம். பாட்டி எப்பொழுதும் திட்டிக்கொண்டே இருக்கிறாள். வேலைக்காரி ஒருவரையும் தங்கவிடமாட்டேனென்கிறாள். எங்கள் பிராணனை வாங்குகிறாள்" என்றான் பாலு.

'சித்தி! உனது அருமை எனக்குஇப்பொழுதுதான் தெரியவருகிறது. வீணாக உன் மீது தப்பெண்ணம் கொண்டிருந்தேன். பாட்டி அப்படி நினைக்கும்படியாகச் சொல்லி வந்தாள். இந்தத் திட்டுக்களையும், நாங்கள் உன்னிடம் காட்டின அலக்ஷியத்தையும் எப்படித்தான் சகித்துக்கொண்டிருந்தாயோ?. தெய்வத்திற்கே பொறுக்காமல், அப்பாவைப் பிரித்து, உனக்கு நன்மை செய்து, எங்களுக்கும் புத்தி கற்பித்தது. நீ சென்றபிறகு உன்னுடைய திட்டுக்களெல்லாம் எங்கள்மீது திரும்பிவிட்டன. தாதா சொன்னால், அவரையும்சேர்த்துத் திட்டுகிறாள். அப்பா வந்ததும் கண்டிப்பாக உன்னுடன் இருப்போம், பாட்டியிளிடம் இருக்க முடியாது என்று சொல்லப்போகிறேன். நீ, எங்களை உன்னுடன் வைத்துக்கொள்ளமாட்டாயா?" என்றாள் சாருமதி.

"பவானி! குழந்தைகள் சொல்வது முழு உண்மை. எனக்கே ஆச்சர்யமாக இருக்கிறது. உனது மாமியாருக்குப் பிறவியே ஆங்கார சொரூபத்தில்தான் போலிருக்கிறது. யாராக இருந்தாலும் சரி, நான்கு திட்டுக்கள் பல்லவி (பாடை எடுக்க, பத்தி எரிய, பேதிவார, நாசமாப் பூட) இவை அடுக்கில் ஒன்றுகூட குறைவதில்லை. குழந்தைகள் நன்றாகத் திட்டு வாங்குகிறார்கள். ஆனால், சாரு! பாலு! உங்களுக்கு இவை வேண்டியதுதான். எல்லோருமாகச்சேர்ந்து பவானியை என்னபாடுபடுத்தினீர்கள்? சாரு பாட்டியிளிடம் கோள் சொல்லிக்கொடுப்பதை என்காதினால் எவ்வளவு தடவை கேட்டிருப்பேன்? இப்பொழுதாவது தெரிந்ததா? சித்தியின் மேன்மைக் குணம்?" என்றாள் லக்ஷ்மி.

"லக்ஷ்மி இப்படியெல்லாம் ஏன் பேசுகிறாய்? பெரியவர்கள் அப்படித்தான்சொல்லுவார்கள், அது நமக்கு நன்மைதான். சாருவின் அப்பா இப்படிபிடிவாதமாக, வாக்குறுதி பெறுகிறுப்போல், என்னைக் கட்டாயப் படுத்தாமல்போனால், நான் வீட்டில் மாமியாருடன் சந்தோஷமாகத்தான் காலம் கழிப்பேன். சாரு! பாட்டி கோபத்தில் அப்படித்தான் சொல்லுவாள். உனக்கு அது நன்மைதான், ஒரு விஷயம், இப்பொழுதாவது எனது உள்ளத்தை அறிந்துகொண்டீர்களே! அது பற்றி மிகவும் சந்தோஷம்" என்றாள் பவானி.

"சித்தி! நன்மையோ தீமையோ? எங்களால் பொறுக்கமுடியவில்லை, அப்பா வந்ததும் நிச்சயம் ஓர் ஏற்பாடு செய்தாகவேண்டும். அவள் கிராமத்தில்தானே திட்டிக்கொண்டிருக்கட்டும். நாம் மூவருமாக இருப்போம்" என்றாள் சாரு.

"சாரு! உன் அப்பாவுக்குத் தனி யோசனை உதிக்கும். அவர் வந்தபின் அவர் எண்ணப்படியே யாவும் நடைபெறும்" என்றாள் பவானி.

"பவானி! நான் இப்படிச் சொல்லுகிறேனென்று கோபப்படாதே. ஒருஸ்திரீயின் குரோத புத்தியால், மூர்க்க குணத்தினால், எவ்வளவுதாபத்தையும் அமைதி யின்மையையும் அனுபவிக்க வேண்டிவந்தது பார்த்தயாடி. உனது மாமியாரின் ஜன்மகுணம், அவள் கட்டையுடன்தான் திரப்போகிறது. உனக்கு விடிவுதான் உண்டோ? எல்லாம் தினம் பொழுது விடிவது தானோ?" என்றாள் லக்ஷ்மி.

அந்தச் சமயம் உள்ளே வந்த பவானியின் மாமியார், "லக்ஷ்மி என்ன சொல்லுகிறாய்" என்றாள்.

யாவரும் திடுக்கிட்டுப்போனார்கள். ஆடு திருடின கள்ளனைப்போல் விழித்தார்கள். நிலைமையைச் சமாளிக்க, சமயோசித தைரியமாக, "பவானி அதிர்ஷ்டங்கெட்ட பெண்ணாகப் பிறந்தாயே. உன்னால் குழந்தைகள் தகப்பனையும், பெற்றவள் பிள்ளையையும் பிரியும் படியாயிற்றே! இதற்கு விடிவுதான் உண்டோ? இல்லையோ என்றேன். வேறொன்றுமில்லை மாமி" என்றாள் லக்ஷ்மி.

"இன்னொரு தடவை நன்றாகச் சொல்லு. அதிர்ஷ்டங்கெட்ட பீடையைக்கட்டின நாள் முதல் வீட்டில் அல்லல்தான். இன்னமும் பாரு, அவன் கண்காணாத தேசத்திற்குப்போய், சம்பாதிக்கிறான் ஆம்படையாளைப் படிக்க வைக்க. இவள் படித்துக்கிழித்து உலகத்தையே காப்பாத்தப்போறா. இதுகள் எக்கேடு கெட்டு ஒழியட்டும் என்றால் இந்தக்குரங்குகள் இரண்டும் சொன்ன வார்த்தை கேட்காமல் ஆட்டிவைக்கிறது. நேத்திக்கி இந்தக்கடங்காரன் கேட்கிறான், 'நீ இப்படி திட்டித் திட்டி, அப்பாவை ஊரைவிட்டுத்துரத்தினாய்? சித்தியை வீட்டைவிட்டுத் துரத்தினாய்? இப்படித் திட்டி எங்களையும் சாகஅடிக்கப் போகிறாய்!' என்று. எனக்கென்னத்திற்கு இந்த இழவெல்லாம், நான்பாட்டுக்குக் காசி ராமேசுவரம் என்று போனாலும் போர வழிக்குப்பலனுண்டு. நாசமாப்பூட" என்று ஸஹஸ்ரார்ச்சனைக்குத் தொடங்கினாள். இனிமேல் இங்கிருப்பது தப்பிதம் என்ற எண்ணத்துடன் எழுந்து சென்றுவிட்டாள் லக்ஷ்மி.

தான் கொண்டுவந்த பழங்களை மாமியார் முன் வைத்துவிட்டு நமஸ்காரம் பண்ணினாள். "யாருக்கு வேண்டியிருக்கு இந்தக் கூழைக் கும்பிடு" என்றாள். சற்று நெரம் நின்றாள் சங்கர் வருவதாகச்சொல்லலாமா? என்ற எண்ணத்துடன். வசைமாரி பலக்கவே, குழந்தைகள் சொல்லிக்கொள்ளட்டும் என்ற எண்ணத்துடன். 'போய்வருகிறேன் அம்மா!' என்று சொல்லிவிட்டு, சட்டென் ஹாஸ்டலுக்குத் திரும்பி விட்டாள்.

இவள் புறப்படும்பொழுது, சங்கர் வருகையைப்பற்றிச் சொன்னால் மாமியார் குழந்தைகள் சந்தோஷமாக இருப்பார்கள். மாமியார் தன்னிடம் இன்முகம் காட்டுவாள் என்று நினைத்தாள். ஆனால் அவள் லக்ஷ்யம் இதிலும் சிதையவே, மனோவேதனையுடன் யந்திரப் பாவைபோல், சாப்பாட்டை முடித்துக் கொண்டு, ஒருவரிடமும் பேசாமல், வாசிக்கவும் முடியாமல், தனியிடத்தில் உட்கார்ந்து, பழைய விஷயங்களைச் சிந்தித்துப் பார்க்கலானாள்.

அந்தச்சமயம் ஹாஸ்டலைச் சுற்றிப்பார்க்க வந்த வார்டன் பவானியின் அருகில் வந்து, "என்ன பவானி! கவலையாக உட்கார்ந்திருக்கிறாய்! காவ்யங்களில், யுத்தத்திற்குச் சென்றிருக்கும் காதலனுக்கு, மேகம் காற்று பறவை இவைகளைத் தூது அனுப்புவதாக வர்ணித்திருப்பார்கள். அதுபோல் உன்கணவனுக்கு யாரை அனுப்பலாம் என்று சிந்தனைசெய்கிறாயோ! கவலைப்படாதே. கூடிய சீக்கிரம் வந்துவிடுவார். இக்காலங்கள், கடிதமே கூட்டுறவை அதிகப்படுத்தும். பி. ஏ. பரீக்ஷை எழுதி முடிந்ததும், ரிஸல்ட்பார்க்கச் சங்கர் வருவார்" என்று அவள் முதுகில் தட்டிக்கொடுத்தாள், பிறகு "இன்று உனக்குப் படிப்பில் மனம் செல்லாது. அதனால் என்னுடைய அறைக்கு வந்து, சற்று வீணை வாசித்துப் பாடினாயானால், எனக்கும் ஆனந்தமாக இருக்கும்; உனக்கும் சற்று நிம்மதியாக இருக்கும். உன் இஷ்டமென்ன? சொல்லு" என்றாள்.

பவானி தனது குணத்தினால் யாவரையும் வசியப்படுத்தினாள் என்றே சொல்லலாம். கன்னிப்பெண்கள் குதூலமாகக் கவலையின்றிப் படிப்பதுபோல் பவானியால் நடக்கமுடியுமா? அதனால் மாணவிகளிடம் அதிகப்பேச்சு வைத்துக்கொள்ளமாட்டாள். யாவரிடத்தும் பயந்து மரியாதையாக நடந்து வருவாள். அதனால் பிரின்ஸ்பால்முதல் அவளிடம் அன்பாகப்பேசி அவள் குறைகளை விசாரிப்பார்கள்.

அந்தச் சமயம் ஹாஸ்டல்வார்டன் சொன்ன விஷயம் பவானிக்குச் சற்று ஆறுதல் கொடுப்பது போல் தோன்றினபடியால் ஆவலுடன் எழுந்துசென்று வீணைவாசித்தாள்.

* * *

',ஜகந்தனிலே காதலெனும் "என்ற பாட்டு, பீச்சிலுள்ள ரேடியோவிலிருந்து மிதந்துவந்து, சமுத்திரத்தின் கரையோரமாகக் கிடந்த மரக் கட்டையின் மீது உட்கார்ந்திருந்த பவானி சங்கர் இருவர் உள்ளத்திலும் இருவித உணர்ச்சியைக் கொடுத்தது.

"பவானி! உலகத்தில் காதலுக்கே முக்யஸ்தானம் கொடுக்கப்படுகிறது. காவ்யம், கவிதை இவைகளும் காதலேயே முக்யமாக வைத்து உண்டாக்கப்படுகின்றன. காதலேயே பேசுகின்றன. ஆங்கிலக்கவிகள், தமிழ்க்கவிகள், சம்ஸ்க்ருத கவிகள் யாவரும் காதலேப்பற்றியே மிக்க ரஸமாக எழுதுகிருர்கள். காதல் என்ற பதமே அதிகமாக உச்சரிக்கப்படுகின்றது. பேரின்பத்தை நாடும் பக்தர்கள்கூட, இறைவனேயும், தங்களேயும், காதலன் காதலி பாவத்தில் வைத்துப் பாடுகிருர்கள். இதோ ரேடியோவிலும் காதலின் மஹிமையையே விஸ்தரித்துப் பாடுகிருர்கள். என் மனமும் காதலின் பரவசத்தையே அடைகிறது. அதோ உன் கண்களிலும் காதலின் ஒளி வீசுகின்றது. அதோ அலேகளும் 'காதல்' 'காதல்' என்று சந்திரன் வரவிற்காக ஓலமிடுகின்றன. இப்படி உன்னே ஸ்பரிசித்தவாறு, உனது இன்பமொழிகளேக் கேட்பது எவ்விதக் காதல் உணர்ச்சியை, ஆனந்த பரவசத்தை, என் மனதில், தேகத்தின் ஒவ்வொரு நரம்பிலும் சுகபாவத்தை அள்ளி அள்ளி இரைக்கின்றன. ஒரு காலத்தில் 'காதல்' என்ற பதமே அர்த்தமற்ற வாக்கியம் என்ற நிலேப்பில் வாழ்க்கை நடத்தினேன். சாருவின் தாயாருடன் யௌவன கால வாழ்க்கை நடத்தும்பொழுதுகூட, இந்த நிமிஷம் நான் அடையும் ஆனந்தத்தை ஒரு விநாடிகூட அடைந்தது இல்லே. எனது வறண்ட அன்பிற்கு அவள் இரையாளுள். அதே அர்த்தமற்ற மனப்பான்மையில், என்னேயும் வருத்திக்கொண்டு உனது லக்ஷ்யத்தையும் சிதைத்தேன். உனது மாசற்ற ஹ்ருதயமும், சஹிப்புத் தன்மையும் என் அறிவுக் கண்ணேத் திறந்துவிட்டன. உன்னுடைய தூய்மையான அன்பு என் மனக் காதலின் செடியை வளரச் செய்தது" என்று ஏதேதோ சொல்லியவாறு, அவள் கைவளேயல்களே மேலுங் கீழுமாகத் தள்ளிவிட்டுக்கொண்டிருந்தான்.

இவனது வார்த்தைகளேக் கேட்டவண்ணம் எழும்பிவரும் அலேகளேயே உற்று நோக்கியவாறு இருந்தாள். அவளின் முகம் ஆழ்ந்த சிந்தனேயைக் காட்டிற்று. சங்கரின் சொற்களுக்கு யாதொரு பதிலும் சொல்லாமல் ஜீவனற்ற பிம்பம்போல் அவன் செய்கைகள் ஒன்றிலும் உணர்வின்றியிருந்தாள்.

"என்ன பலமான யோசனே? என்னிடம் சொல்லேன்; நானும் அதில் கலந்துகொள்கிறேன்" என்று அவளது முகத்தைத் தனது பக்கமாகத் திருப்பியவாறு கேட்டான்.

"ஒன்றுமில்லே. உங்கள் லக்ஷ்யம் கைகூடிற்று. எனது லக்ஷ்யம் சிதைந்தது. அதைப் பற்றித்தான் சிந்தித்தேன்" என்ருள்.

"என்ன உனது லக்ஷ்யம் சிதைந்தது? சொல்"

எழுத ஆரம்பித்தால் பேனு தங்கு — தடையற்று ஓடவேண்டும். — இல்லேயேல் மிதந்து வரும் உணர்ச்சிகள் தடைபட்டு நின்று விடும். மன அமைதி குன்றும்.

உங்கள் பேனுவைத் தங்குதடையற்று லாகவமாக ஓடச்செய்வது

ஜாப்கோ பவுன்டிங்க்

பாரதத்தின் உன்னத தயாரிப்பு

எங்கள் மற்ற உயர்ந்த தயாரிப்புகள்

ஸ்னே, லேம்கிளிஸ், ஹேர் குரோயர், கேஸ்டர் ஆயில், பிரில்லியன்டைன், ஷேவிங் —ஸ்டிக், சோப் முதலியன—

ஜயபாரதம் கம்பெனி

மல்லேஸ்வரம் P.O. — பேங்களூர்.

"முன்போல் இருந்தால், உங்களிடத்தில் பேசவே அச்சமாக இருக்கும். தாங்கள் சொல்லியபடி, பிரிவில் காதலின் தொடர்பு அதிகரித்தது என்பது உண்மை. உங்களது கவிதா சக்தி நிரம்பிய கடிதங்களுக்கு இரண்டு வருஷமாகப் பதில் எழுதிய பழக்கமானது, அநேக நாள் சேர்ந்திருந்த பழக்கத்தைவிட மிக நெருங்கிய அன்யோன்ய மனப்பான்மையை உண்டுபண்ணிவிட்டது. அதனால் மனதிலுள்ளதை அச்சமில்லாமல் சொல்லத் துணிவு உண்டாகிறது. மாமியாருடனும், குழந்தைகளுடனும் இருந்து, தாயில்லாக்குறை தெரியாவண்ணம் வளர்த்து, "மாற்றாந்தாய்க் கொடுமை" என்னும் பதமே இருக்கக் கூடாது என்று நினைத்தேன். குழந்தைகளைப் பிரியக்கூடாது என்பது எனது லக்ஷ்யம். ஆனால் நடந்தது?— என்ன இருந்தாலும் இளையாள்தானே. கணவன் சண்டைக்குப் போனான் என்றால் அவள் பாட்டை அவள் பார்த்துக்கொண்டாள்,— தாயில்லாக் குழந்தைகளை, அந்தக் கிழவி வைத்துக்கொண்டு கஷ்டப் படுகிறாள் என்று உலகம் சொல்லலாயிற்று. என் மனமும் சொல்லிற்று. உங்கள் ஹ்ருதயத்திலும் இச் சொல் தோன்றியிருக்கும். இது நிறைவேறிய லக்ஷ்யமாகுமா? தங்கள் "பிரிவினால்" அநேக நன்மைகள் என்று சொல்லியதில் நன்மைதான் ஏற்பட்டிருக்கிறது. அம்மாவே என்னிடம் குணமாக நடந்துவருகிறார்கள். குழந்தைகளோ என்மீது அளவற்ற அன்பு காட்டி வருகிறார்கள். இந்த விஷயங்களினால் உங்கள் லக்ஷ்யம் கைகூடிற்று. பெண்கள் தங்கள் லக்ஷயத்தை நிறைவேற்றினார்கள் என்பது எக்காலத்திலும் அருமையான விஷயம்தான்" என்றாள் சலிப்புடன்.

"அப்பா! இவ்வளவுதானா? என் அம்மா விஷயம் யாவரும் அறிவார்கள். உலகம் உன்னைத் தூற்றவில்லை என்பதை அத்தாக்ஷியுடன் நிரூபிக்க முடியும். உன் மனதில் வீணான எண்ணங்களை உண்டுபண்ணிக் கொள்ளுகிறாய். என்மனதில் நீ சொல்லியபடி ஒரு காலத்திலும் தோன்றியதில்லை. யாவும் நன்றாகவே நடந்துவருகின்றன. நான் தாயார் விஷயத்தில் கடமையை ஒருகாலும் தவறியதில்லை. இனியும் தவறமாட்டேன். எனது யுத்த சேவையின் நிமித்தம், அம்மா, அப்பா இருவரும் சார்ஜ் இல்லாமல் உலகம் முழுவதும் சுற்றிப்பார்க்க வசதி கிடைத்தது. அதைப்பற்றி அம்மாவுக்கு மிக்க சந்தோஷம். மனதிற்குள் நீ குழந்தைகளை அன்புடன் நடத்துவாய் என்ற நம்பிக்கை இல்லாமலா உன்னிடம் அவர்களை விட்டு விட்டு யாத்திரை கிளம்பிப்போனாள். ஆங்கார வார்த்தைகளைக் கொட்டிச் சிந்துவதென்பது அவளது பிறவிக் குணம். அதைச் சஹித்துக்கொண்டு போவதும், நமது கடமைதான்" என்றான்.

"அம்மா விஷயத்தில் என்றாவது நான் குறை கூறியது உண்டா? நான், அன்றும், இன்றும், என்றும் அவரிடம் கடமைக்குக் கட்டுப்பட்டு நடக்கவே விரும்புகிறேன். ஆனால், நான் நினைத்து வந்தது ஒன்றும், இவ்விடம் நடப்பது ஒன்றாகவும் முடிந்தது. குழந்தைகளையும், மாமியாரையும் திருப்தி செய்விப்பதே எனது கடமை. உலகில் நாம் அந்தத் துறையில் முக்ய ஸ்தானம் வஹிக்கவேணடும், எப்பொழுதும் கணவனுக்குப் பணிவிடை செய்யவேண்டும், குழந்தைகளைப் பிரியாமல் இருக்கவேண்டும் என்றெல்லாம் நினைத்தேன். பெண்களுக்குப் படிப்பு எஸ். எஸ். எல். ஸி. வரைதான் முக்கியம். பிறகு அறிவு விசாலப்படக்கூடிய நூல்களைப் படித்துவந்தால் போதும். குடும்பத்தில் அடிபடாமல், அல்லது கல்யாணமில்லாது உத்தியோக முறையில் வாழ்க்கை நடத்துவதானால் மேல்படிப்பு அவசியம். ஆனாலும், கல்யாணமில்லாமல், படித்து உத்தியோகம் செய்து உலகத்தின் முன்னணியில் நிற்பதற்கு ஆண்மக்களின் உதவியின்றிப் பாடுபடுவதற்கு, அநுயாசமான கொள்கை, வைரம் பாய்ந்த நெஞ்சுறுதி, சஹிப்புத் தன்மை இவ்வளவும் இருக்கவேண்டும். இல்லையேல், அவர்களது லக்ஷயம் சின்னாபின்னமாகச் சிதறிவிடும். இந்த மனப் பான்மையிலேயே வேண்டா வெறுப்புடன் இண்டர்மீடியட்டில் சேர்ந்தேன். அப்பாவின் கஷ்டத்திற்கும்,திருப்திக்கும் கட்டுப்பட்டுப் படித்துத் தேறினேன். இப்பவும், உங்களின் வார்த்தைக்கு மதிப்புக்கொடுக்கவேண்டும் என்ற மனப்பான்மையில் பீ.ஏ.யில் சேர்ந்தேன். இல்லையேல் மாமியாரிடம், அவர் சொன்னால் சொல்லட்டும், நான் படிக்கப்போகவில்லை, உங்களுடன்தான் இருப்பேன் என்று சொன்னேனானால், அவர் எவ்வளவு சந்தோஷப்படுவார் என்பது தெரியாத விஷயமா? காதல் ஊதல் என்றெல்லாம் சிந்தனையில்லாமலிருந்தேன். அது விஷயம் உங்களிடம் வந்த பின் என் லக்ஷ்யம் கைகூடியதாகவே தோன்றிற்று. பிறகு அதுவும் சிதைந்தது. அது எப்படியோ? எந்த விஷயத்திலும் எனது லக்ஷ்யம் கைகூடவில்லை என்பதுதான் என் மனதில் தோன்றுகிறது" என்றாள்.

"அப்பப்பா, அதற்குள் கோபம் வந்துவிட்டதே. அம்மாவைப்பற்றி நீ குறை சொன்னதாகவா சொன்னேன்? சாதாரணமாக அவள் குணத்தைப் பற்றிச் சொன்னேன். நீ இப்படியெல்லாம் "லக்ஷ்யம்" "லக்ஷ்யம்" என்று எதையோ நினைத்துக்கொண்டு, உன் மனதையும் புண்படுத்திக்கொண்டு, எனது சந்தோஷ மனவெழுச்சியைச் சிதைத்துவிடாதே. நான் உன்னைச் சந்தோஷமாக வைப்பதற்காக எவ்வளவு ஏற்பாடுகள் செய்திருக்கிறேன்? நான் இருக்கும்வரையில் காதலின் லக்ஷ்யக் கனவிலேயே மனதைச் செலுத்தி என் மனதை இன்பவாரிதியில் லயிக்கவிடவேண்டும். நான் உன்னை வருத்தின பாணியை என்னிடம் திருப்பிவிடாதே" என்று அவள் கையை அழுத்திப்பிடித்த வண்ணம் கேட்டான்.

சங்கரின் உருக்கமான சொல் இவளைத் திடுக்கிடச் செய்தது. ஆஹா ஸ்வாதீன மனப்

பான்மையில் என்ன வெல்லாமோ உளறி இவர் மனதிற்கு வருத்தத்தை உண்டுபண்ணி விட்டேனே" என்று மனம் பதறினாள். அட பாவமே! இப்படி ஏன் நொந்துகொள்ளவேண்டும்? நீங்கள் என்னை வருத்தினதாவது, நான் உங்களைத் திருப்பவாவது? "கணவனது பணிவிடை" என்பதில் காதல் என்பதும் அடங்கியதுதானே? உங்களுடன் சந்தோஷமாகப் பொழுது போக்க மனமில்லாமலா குழந்தைகளைக்கூட சிநேகிதர்களுடன் விளையாட அனுப்பிவிட்டு, தங்களுடன் ஏகாந்தமாக வந்தேன். ஏதோ நீங்களும் சொன்னீர்கள். நானும் சொன்னேன். அவ்வளவுதான். உங்கள் சந்தோஷம்தானே எனது வாழ்க்கையின் லக்ஷ்யம். என்ன? பேசவில்லையே என் மீது வருத்தமா? எங்கே உங்களுடைய ஏற்பாடுகளெல்லாம் சொல்லுங்கள் கேட்கலாம்" என்று அவன் முகவாய்க்கட்டையைப் பிடித்து. கெஞ்சியவாறு கேட்டாள்.

"உன்மேல் வருத்தமா? அதொன்றுமில்லை. எந்த விஷயத்திற்கும் ஒரு லக்ஷ்யத்தைக் கொண்டுவந்து விடுகிறாயே என்ற உனது அறிவின் முதிர்ச்சியை எண்ணி வியந்தேன், அவ்வளவே. உனது சஹிப்புத் தன்மை எவ்வளவு வெற்றிபெற்றுவிட்டது! நான் வந்ததும் சாருவும் பாலுவும், பாட்டியுடன் இருக்கமாட்டோம், சித்தியுடன்தான் இருப்போம். இல்லையானால் நீங்களும் வேலைக்குப் போகவேண்டாம், எங்களுடன் இருங்கள் என்றார்கள். பிறகு அப்பாவும் நானும் யோசனை செய்து யாத்திரை ஏற்பாட்டின் முடிவிற்கு வந்தோம். அப்பாவும் அம்மாவும் வீடுவந்து சேர இன்னும் ஒருவருஷ மாகும். அநேகமாக யுத்தமும் இன்னும் ஒரு வருஷத்தில் முடிந்துவிடும். நானும் வந்துவிடுவேன். யுத்தம் முடியாவிட்டாலும், இந்தப் பக்கங்களுக்கு மாற்றிவிடுவார்கள். அப்பொழுது யாவரும் ஒன்றுகூடி, பவானி பி. எ. எல். டி. செய்யும் குடும்ப நிர்வாகத்தில், ஆனந்தமாகக் காலம் கழிக்கலாம். சாரு கல்யாணம், பாலு பூணூல் எல்லாம் மிகமிகச்சிறப்பாகச் செய்யலாம். அதுவரையிலும் நாம் இப்பொழுது புதிதாக வாங்கியிருக்கும் பங்களா மிக்க ஸௌகரியமும், பந்தோபஸ்தும் உள்ளது. உன்னுடைய லக்ஷ்மியும், உனக்குத் துணையாகக் குடிவந்துவிட்டாள். உன் அதிர்ஷ்டம், மூன்று மாதத்திற்கு ஒருமுறை சம்பளம் உயர்கிறது. சமையலுக்கு வந்திருக்கும் அம்மாவோ மிக்க உத்தமமான குடும்பத்தைச் சேர்ந்தவள். துணைக்கு யோக்யமானவள். பணத்தை லக்ஷ்யமில்லாமல் செலவழித்து, உனக்குத் தேவையான ஆட்களை வைத்துக் கொள். எனது விருப்பத்திற்காக, எல். டி.யில் சேர்ந்துவிடு. குழந்தைகளை வைத்துக்கொண்டு ஆனந்தமாகக் காலங்கழிக்கலாம். லக்ஷ்மியின் புருஷன், ஆண்பிள்ளைத் துணையாக வேண்டிய உதவி செய்வார்" என்றான்.

"எல்லாவிதமான பதார்த்தங்களையும் செய்து இலையில் வைத்துப் பார்க்கும்பொழுது ஆனந்தமாக நாக்கில் ஜலம் ஊறுகிறது. ஆனால் இலையில் உட்கார்ந்ததும், வாயில் வைத்த பதார்த்தத்தில் உப்பில்லையானால் எப்படி வயிறு நிரம்புமோ அவ்விதமே இருக்கும், இவ்வளவு சுக ஸௌக்யங்களிலும், தலைவராகிய தாங்கள் எந்த இடத்தில் எவ்வித நிலைமையில் இருப்பீர்களோ என்று நினைத்துப் பார்க்கும்பொழுது. இருந்தாலும் சந்தோஷமாகவே இருக்கப் பார்க்கிறேன்" என்றாள் சிரித்தவாறே.

"எப்படியும் என்னை மடக்கிவிடுகிறாய். பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றவளல்லவா?" என்று முதுகில் தட்டிக்கொடுத்துவிட்டு, ஒரு விஷயம் உனக்கு நினைப்பூட்டுகிறேன். சாருவுக்குப் பதினொரு வயது நிரம்பிவிட்டது. அவளை மிக்க கவனமாக நடத்த வேண்டும். இஷ்டப்படி தனியாக எங்கும் செல்ல விடாதே. காதல், கீதல் என்று தவறான வழியில் மனம் திரும்பிவிட்டால், பிறகு மிகவும் கஷ்டம். எவனாவது ஜாதி வித்யாஸத்தில் காதல் ஏற்பட்டால் அவளுக்கும் கஷ்டம். அதன் பலனை நாமிருவரும்தான் அனுபவிக்க நேரிடும். அதனால் அவளை எச்சரிப்பாக நடத்து" என்றான்.

"காதல் தெய்வீகம். அதைத் தடுப்பதற்கு நாம் யார்? சாருவின் விஷயத்தில் அவள் இஷ்டப்படிதான் நடக்கவேண்டும். அவளது புனிதமான முதல் காதலை நான் தடுக்கப்போவதில்லை. அதற்கு வேண்டிய வசதியை அளிப்பேன். அவளின் காதலின் லக்ஷ்யம் சிதைந்து போக நான் சம்மதிக்கமாட்டேன்" என்றாள்.

"என்ன பவானி! இப்படிப் பேசுகிறாய்? காதல் தெய்வீகம்தான் இருந்தாலும் காலம், இடம், வசதி இவைகளை அனுசரித்தே எந்த விஷயமும் நடைபெறுகிறது. குழந்தை உள்ளம் வெளி அழகில் மயங்கி ஏமாற்றமடைந்தால் என்ன செய்வது? என்பதற்காகத்தான் "கட்டுப்பாடு" என்ற ஆதரவை ஏற்படுத்தச் சொல்லுகிறேன். இவைகளுக்குள் அடங்கி நடக்கும்பொழுது இசைகேடான விஷயங்கள் நடைபெறா. அதனால் வீணாகக் காதல் என்ற ஒரு பதத்திற்காக வாழ்க்கையே ஜீவனற்றதாகப் போகும்படி பார்த்துக்கொண்டிருக்காதே. வீணான பழிச்சொல்லையும் ஏற்றுக்கொள்ளாதே" என்றான்.

"பதில் சொல்லாமல் சிரித்தாள்."

"எதற்காகச் சிரிக்கிறாய்?"

"ஒன்றுமில்லை, சற்றுமுன் காதலைப்பற்றி அளவிற்குமீறிப் பிரசங்கம் செய்தீர்களே. 'காதலே உலகம், உலகமே காதலால்தான் நடைபெறுகிறது' என்றெல்லாம் சொன்னீர்களே! இப்பொழுது இடம் காலம் வசதியைப் பொறுத்துக் காதல் ஏற்படும் என்பதாகச் சொல்லுகிறீர்களே! ஆனால், உங்கள் காதல் வேறு. சாருவின் காதல் வேறுபோலிருக்

கிறது. இது முதுமைக் காதல் அது இளமைக் காதல் போலும் என்று நினைத்தேன். சிரிப்பு வந்தது'' என்றாள்.

''என்ன போக்கிரித்தனம்? என் வார்த்தையைக்கொண்டு என்னையே மடக்குகிறாயா?'' என்று அவள் முதுகில் விளையாட்டாக ஒரு அடிவைத்துவிட்டு, ''பவானி மனிதர்களுக்கு எந்தெந்தச் சமயங்களில் மனமானது பரவசமடைகிறதோ அந்த விஷயத்தைத் தாங்கிப் பேசுவதே இயற்கையின் அமைபபாகிறது. இருண்ட வாழ்க்கையில் ஜோதி உதயம்போல், நீ சொல்லியபடி முதுமைக் காதல் இதுதான்? எனது உணர்ச்சியின் பரவசத்தில் பேசினேன். சாருவிற்கும் மனமொத்த மணம்தான் செய்ய வேண்டும். ஆனாலும் எச்சரிப்பாக நடந்துகொள்ளவேண்டும் என்பதற்காகச் சொன்னேனே தவிரக் காதலைப்பற்றிக் குறைகூறவில்லை. அவளின் நம்லையாகக் காதல் மணத்தையே நான் விரும்புகிறேன்'' என்றான்.

''கவலைப்படாதீர்கள், புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? சாருவின் காதல் தவறான வழியில் செல்லவில்லை. நேர்மையான முறையில் தான் சென்றிருக்கிறது'' என்றாள்.

''என்னது? சென்றிருக்கிறதா? அப்படியானால் காதல் விஷயத்தில் அம்மாவின் திறமை ஒன்றும் பிரயோஜனப்படவில்லையா பவானி? அது யார், என்ன விஷயம்? விபரமாகச் சொல்லு'' என்று பதட்டத்துடன் கேட்டான்.

''ஏனிப்படிப் பதறுகிறீர்கள்? விஷயம் நேர்மாறாகப் போவதைப் பார்த்துக்கொண்டிருப்பேனா? வேறு ஒருவருமில்லை. நமது லக்ஷ்மியின் தம்பி 'வாஸன்' என்று வருவானே அவன்தான் பையன். நல்ல குணசாலி. வயது இருபதுதான் ஆகிறது. இஞ்சினீரிங் காலேஜில் படிக்கிறான். இது நான்காவது வருஷம். கொஞ்சம் உங்களைப்போல் ஐவேஜும் இருக்கிறது. சாருவைவிட சற்றுக் கம்மிய நிறமே தவிரப் பார்ப்பதற்கு லக்ஷணமாகவே இருக்கிறான். அனேகமாக ரஜா நாட்களில் நான் வரும்பொழுது அவனும் வந்திருப்பான். சில சமயங்களில் ஹாஸ்டலுக்கு நான் போவதற்குத் துணையாக வந்துவிட்டுக்கூட செல்லுவான்.''

Madras Stockists:- **M/s. RAJAN DRUG STORES**
155, Nyniappa Naick Street, MADRAS.

"இது விஷயம் எப்படி அறிந்தாய்? சாரு உன்னிடம் சொன்னாளா? சற்று விவரமாகச் சொல்லேன்" என்று அவள்கையை அழுத்திப் பிடித்தவாறு கேட்டான்.

"கொஞ்சம்போனால் அவளே சொல்லியிருப்பாள். ஆனால் அதற்குள் நானே அறிந்து கொள்ளும் ஸந்தர்ப்பமும் ஏற்பட்டு விட்டது. போனவருஷம் கோடை விடுமுறைக்கு வந்திருந்தபொழுது சாயங்காலம் சற்றுத் தலைநோவு மாதிரியிருந்ததால், மாடி அறையில் படுத்துக்கொண்டிருந்தேன். முன் ஹாலில் பேச்சுக்குரல் கேட்டது. யார்? என்று பார்ப்பதற்காக ஜன்னலின் திரையிடுக்கு வழியாகப் பார்த்தேன். சாருவும் வாஸனும் ஐந்தாறுஅடிகள் விலகியே நின்றுகொண்டிருந்தார்கள். பிறகு அவர்கள் சம்பாஷணையைக் கேட்கவேண்டும் என்று தோன்றுவது இயற்கைதானே!"

"சாரு! நாளை ஊருக்குச்செல்லுவதாகத் தீர்மானித்திருக்கிறேன். சென்று வரட்டுமா?" என்றான்.

"வருவதற்கு இரண்டு மாஸம் செல்லுமா?" என்றாள் சாரு.

"காலேஜ் திறப்பதற்கு முதல்நாள் வருவதானால், அப்படித்தான். முன்னுக வரவேண்டுமென்றால்.............." என்று நிறுத்தினான்.

"என்ன விசேஷம்?"

"சாரு! உன்னிடம் ஒருவிஷயம் கேட்கவேண்டுமென்பது வெகு நாளைய ஆவல். ஆனால் கேட்டால் நீ என்ன நினைப்பாயோ? என்ற அச்சம் அதைத் தடுத்து விடுகிறது"

"நினைத்த காரியத்தைச் செய்வதுதான் இருவருக்கும் நன்மை. தாராளமாகக் கேட்கலாம்"

"உனது கண்ணின் பாவமும், நீ என்னிடம் நடந்துகொள்ளும் முறையும், என் இருதயத்தைத் தெரிந்துகொண்டிருப்பதாக நம்பிக்கை யூட்டுகின்றன; நான் நினைப்பது சரிதானு? என்பதை உனது வாயினால் தெரிந்துகொள்ள இன்றுதான் ஸந்தர்ப்பம் கிடைத்தது. எனது நம்பிக்கை என்னவாகும்?"

சாரு சற்றுநேரம் பதில் பேசாமல் தலையைக் கவிழ்ந்தவண்ணம் கால்கட்டை விரலால் பூமியைக் கோடுகிழித்தபடி நின்றுகொண்டிருந்தாள்.

"சாரு! தாமதிப்பதற்கு வசதியில்லை. யாரேனும் வந்துவிட்டால் விபரீதத்தில் முடிந்துவிடும். இனிமேல் யோசிக்கவேண்டும் என்ற அவசியமிருக்காது. நான் எப்படி மறைவின்றிக் கேட்டேனே அதேபோல் உனது உள்ளத்தைச்சொல்லிவிடு" என்றான்.

சாரு அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டுத் தலையை மறுபக்கம் திருப்பிக்கொண்டு, "கண்ணொடு கண்ணிணைநோக்கு" என்றவள்ளுவர் வார்த்தை தமிழ்ப் பரீக்ஷையில் வெற்றி பெற்றவர் படிக்காமலிருக்க முடியாது. அப்பொழுது இக்கேள்வி அவசியமா? என்பதை நினைத்துப்பார்த்தால் பதில் கிடைத்துவிடுமே" என்றாள்.

எனக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை. சாருவா இவ்விதம் பேசுகிறாள், காலம் விசித்திரம். 'பருவகால மலர் புஷ்பிக்கும்பொழுதே காதலின் மணமும் கலந்தே விகசிக்கிறது' என்ற உண்மையைக்கண்டு வியந்தேன். அந்தச் சமயம் அவர்கள் இருவரின் முகத்தைப் பார்க்கும்பொழுது எவ்வித ஆனந்த உணர்ச்சி தோன்றியது தெரியுமா?

சட்டென ஓர் அடி முன்னுக வந்து, அவளது வலக்கையைத் தனது வலக்கையால் பிடித்து, "சாரு! இதோ உன்கையைப்பிடித்த கை இனி மற்றொரு கையைப்பிடிக்காது என்பதை இதோ மாட்டியிருக்கும் உனது தாயாரின் படத்தின் முன்னுகச் சத்யமாகக் கூறுகிறேன். ஆனால் கல்யாணம் முடிவு பெற உன் முயற்சி வேண்டும்" என்றான்.

"பெரியவர்கள் இருக்கும்பொழுது நமக்கேன் அக்கவலை?"

"அது எனக்கும் தெரியும். தற்சமயம் உனது பாட்டி அவளது தமக்கை பேரனுக்கு உன்னைக் கல்யாணம் செய்து கொடுப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறாள் என்ற விஷயம் நீ அறிந்ததே. நமது வழக்கம் பெண் வீட்டார் பிள்ளையைத் தேடுவார்கள். அப்படி இருக்கும்பொழுது நான் எனது வீட்டில் கல்யாணப் பிரஸ்தாபம் எடுக்கமுடியுமா? நீ உனது சித்தியிடம் சொல்லிவிடு. அவள் படித்தவள். நேர்மையான குணமுள்ளவள். உங்களின் முன்னேற்றத்திற்கே தனது வாழ்க்கை அர்ப்பணம் என்ற லக்ஷியத்தைக்கொண்டவள் என்று லக்ஷ்மி அடிக்கடி சொல்லுவாள். அதனால் அவள் யாவற்றையும் ஒழுங்கு செய்து விடுவாள்" என்றான்.

"நீங்கள் சொல்லுவது உண்மை. ஆனால் அப்பா எப்பொழுது வருவாரோ?"

"நமக்குள் உறுதியேற்பட்டுவிட்டது. பிறகு எவ்வளவு காலம் வேண்டுமானாலும் நான் காத்திருக்கத் தயார்" என்று சொல்லிக்கொண்டே சாருவைத் தன் பக்கமாக இழுத்தான். உங்கள் பெண் என்ன செய்தாள் தெரியுமா?

"சட்டென முத்தமிட்டாளாக்கும்" என்றான் சங்கர்.

"அதுதான் இல்லை. இந்த ஆண்பிள்ளைகளுக்கே குறுக்கு யோசனைதான் சட்டெனத்

தோன்றும்போலும். அவன் கையைத் திமிறிப் பின்னால் நகர்ந்து நின்றுகொண்டு 'கிணற்று நீரை வெள்ளம் கொண்டுபோய்விடாது. கட்டுப்பாடு, ஓர் உறுதி என்பது எதற்கும் நன்மை. நீங்கள் இப்படி வரம்பிற்கு மீறி நடப்பதானால் கல்யாணம் முடியும்மட்டும் உங்களைத் தனியிடத்தில் சந்திக்கவே மாட்டேன். அவ்வித ஸந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக்கொள்ள முடியும் முடியாது என்பது நம்மனம் அறிந்ததே" என்றாள்.

"அப்பா! என்ன பிகு. சரி இருக்கட்டும். உன்னிஷ்டப்படியே நடக்கிறேன். சந்தோஷமாகப் பேசுவதைக்கூட நிறுத்திவிடாதே. நாழியாய்விட்டது. நான் போகட்டுமா? நாளை ரயிலுக்குப்போகுமுன் வருகிறேன். அப்பொழுது இச்சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொள்ள முடியுமல்லவா??" என்று சிரித்தான்.

"எப்படியோ பார்க்கலாம்" என்றாள் அலக்ஷ்யமாக.

"சரி கை குலுக்குவதினால் யாதொரு தப்பிதமில்லையல்லவா" என்று சொல்லிக்கொண்டே கையைக் குலுக்கிவிட்டுச் சென்றுவிட்டான். நான் உடனே படுக்கையில் போய்ப் படுத்துக்கொண்டேன். சாரு அவ்விடம்வந்து விளக்கைப் போட்டாள். என்னைப் பார்த்ததும் திடுக்கிட்டவளாய், "சித்தி நீ இவ்வளவு நாழி இவ்விடம்தான் படுத்துக்கொண்டிருந்தாயா?" என்றாள். அவள் முகம் பயத்தினால் வேர்வை அரும்பிற்று. வார்த்தை தடுமாறிற்று.

"தலையை வலித்தது. அதனால் இவ்விடம் வந்து படுத்துக்கொண்டேன். சாரு! இப்படி வா" என்றேன். அருகில் வந்ததும் என் பக்கத்தில் உட்காரவைத்து அவளை அணைத்துக்கொண்டேன். அவள் நெஞ்சு 'திடுக், திடுக்' என்று அடித்துக்கொண்டது தெரிந்தது. "சாரு! ஏன் இவ்விதம் பயப்படுகிறாய்?" என்றேன். சிரித்தவாறே "சித்தி" என்றாள். மேலே பேசமுடியவில்லை. கண்களில் நீர் துளித்தது.

நான் அவள் கண்களைத் துடைத்துவிட்டு, "அசடே! எதற்காக அழுகிறாய். பயப்படாதே. உனது லக்ஷ்யம் நிறைவேற என்னால் கூடிய மட்டும் பிரயாசைப்படுகிறேன்" என்றேன்.

"சித்தி நீ முழுவதும் கேட்டுக்கொண்டிருந்தாயல்லவா? இந்த ஆண் பிள்ளைகளுக்கு லஜ்ஜை என்பதே தோன்றாதோ. நான் எவ்வளவு நாட்களாக லஜ்ஜையினால் உன்னிடம் கூட சொல்லமனமில்லாமல் கஷ்டப்பட்டேன். இன்று எவ்வளவு ஸர்வஸாதாரணமாகக் கேட்டுவிட்டார். நான் வரும்பொழுதே இவ்விடம் யாருமில்லையா என்று பார்ப்பதற்காகச் சென்றபொழுது, ஒருவருமில்லை, நான் பார்த்துவிட்டுத்தான் உன்னைக் கூப்பிட்டேன் என்றார். உன்னைப் பார்க்கவில்லைபோலிருக்கிறது. இல்லையானால் கேட்டால் கேட்கட்டும். என்ற தைரியமோ. நல்லவேளை சித்தி. நீயாக இருந்ததே எதற்கும் நன்மையாகப் போய்விட்டது. வேறே யாராகிலுமானால் என் மானம் என்னவாகும்? இவ்வளவு நாள் ஜாக்கிரதையாக நடத்துவந்து, இன்று அவர் அழைப்பிற்கு, அவர் பார்வையில் நிலைதடுமாறி வந்துவிட்டேன். சித்தி! நான் நடந்தது தவறானால் சொல்லிவிடு. இனிமேல் எச்சரிக்கையாக இருக்கிறேன்" என்றாள்.

"சாரு, உன்மீது ஒரு குற்றமுமில்லை. உனது காதல், நேர்மையான முறையில் செல்லுகிறது. சாலா அத்தையின் பிள்ளை அந்தக் காவாலியைவிட, வாஸன் எவ்வளவு சிறந்தவன்? ஒரு விஷயம் உன்னை எச்சரிக்க வேண்டியது எனது கடமை. உங்கள் ஸம்பாஷணையிலிருந்து, இதுவே முதல் தடவையான காதல் சந்திப்பு என்பது தெரிந்தது. இனிமேல் இப்படிப்பட்ட ஸந்தர்ப்பத்தை எதிர் நோக்கும்படியான மனப்பான்மை ஏற்பட்டுவிடும். அதிலும் நீ சற்றுமுன்பு சொன்னதுபோல் ஆண்மை ஹ்ருதயம் அது விஷயத்தில் எதையும் பொருட்படுத்தாது. சமூகம் இக் குற்றத்தின் பொறுப்பைப் பெண்களின்மீதே சாட்டும், ஆண்மைக்கு ஆதரவு காட்டும். அதனால் வீட்டிற்குள் ஒருநாளும் அவனுடன் தனிமையில் பேசாதே. வெளியிடங்களிலும் தனித்த சந்திப்பிற்கு இடம் வைத்துக்கொள்ளாதே. இனிமேல், பிரதி சனி ஞாயிறு விடுமுறைகளில் நான் அவசியம் இவ்விடம் வருகிறேன், அவனும் வருவான். யாவரும் பீச்சுக்குச் செல்லுவோம். அவ்விடம் சில நிமிஷங்கள் தனிமையில் பேச வசதி அளிக்கிறேன். அவ்வளவுதான் தற்சமயம் நடக்கக்கூடியது. கட்டுப்பாட்டின் உறுதியில் எதிர்பார்க்கும் காதல், அதிக இன்பத்தை அளிக்கும் பிரேமையின் பாசம், இறுகப் பிணைக்கும். வீட்டில் நீ அவனிடம் தனிமையில் பேசுவதைப் பாட்டி பார்த்துவிட்டால் அனர்த்தம் வேறு வேண்டாம். வீணாக அந்தப் பிள்ளையைப் பொல்லாப்பில் மாட்டிவிட நேரும் என்றேன்."

"அதற்கு என்ன பதில் சொன்னாள்?" என்றான் சங்கர்.

"சித்தி, உன் குணமறியாமல் ஒரு காலத்தில் விரோதிபோல் நினைத்தேனே. இப்பொழுதெல்லாம் அதை நினைத்து நினைத்து வருத்தப்படுவேன். தாயார் என்றால் இதைவிட என்ன செய்வாள்? உன் புத்திமதிப்படியே நடக்கிறேன் என்றாள்." சிறிது நேரம் இருவரும் பேசாமலிருந்தோம். பிறகு "சித்தி நான் உன்னை ஒன்று கேட்கிறேன். அது தப்பு என்றால் மன்னித்துவிடு, நீயோ அழகின் அவதாரம். உயர்தரப் படிப்பு, பாட்டு இவையெல்லாம் அமையப்பெற்ற நீ, அப்பாவைக் கல்யாணம் செய்துகொள்ள எப்படிச் சம்மதித்தாய்?" என்றாள்.

"அதற்கு நீ என்ன பதில் சொல்லியிருப்பாய் என்பதை நான் சொல்லட்டுமா? 'காதல்' என்ற பதத்தைச் சிந்திக்கக்கூடமுடியாதபடி, படிப்பும், வீட்டில் மாற்றாந்தாயின் கொடுமையும் உதவிசெய்தன. இரண்டிலிருந்து விடுதலை பெறவும், தகப்பனாரின் வறுமையின் காரணமாகவும், இவைகளைவிட மேலான லக்ஷ்யம் 'மாற்றாந்தாய்க் கொடுமை' என்ற சொல்லையே அகராதியிலிருந்து எடுத்துவிடும்படி நடத்திக்காட்டவேண்டும் என்ற மனப்பான்மையாலுமே கல்யாணத்திற்கு ஒப்புக்கொண்டேன்" என்பதே.

"கூட இருந்து கேட்டாற்போல் சொல்லிவிட்டீர்களே" என்றாள்.

"உனது லக்ஷ்யம் என்னவென்பதை நான் இன்னும் அறியாமலிருக்க முடியுமா? உனது லக்ஷ்யம் தியாகத்தின் சிகரம், எனது லக்ஷ்யம் காதலின் சிகரம். அதுபோகட்டும். பிறகு விஷயத்தைச் சொல்லு."

"பிறகு என்ன. தாயார் காணாத காதலின் ஜோதியைப் பெண்ணாவது காணட்டும் என்ற நினைப்பில், நான் சொன்னபடி வசதியளித்தேன். அவனும் அவர்கள் வீட்டில் கல்யாணப் பேச்சு நடக்கும்பொழுது, தற்சமயம் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லிவிட்டான். நானும் லக்ஷ்மியும் முடிவுசெய்துவிட்டோம். அவர்கள் வீட்டில் சாருவைக் கல்யாணம் செய்துகொள்ள மிகவும் ஆசைப்படுகிறார்கள். இன்றுகூட அவனும் இவ்விடம் வந்திருப்பான். சாரு, பாலுவுடன் உங்களையும் பார்க்க வந்தாலும் வருவான்."

"எல்லாம் சரிதான். என்னுடைய தகவல் இல்லாமலே என்ன தைரியத்தில் விஷயங்களைத் தீர்மானம் செய்தாய்?"

"ஒன்று சொல்லுகிறேன். என்னை மன்னிக்கவேண்டும். உலகத்தில் பரம பக்தர்களாகச் சரித்திரங்களில் இடம் பெற்றவர்களெல்லாம் முன்னால் காதலில் முழுகிக் காமத்தில் மிதந்து, கடைசியில் வெறுப்புற்று, தங்கள் லக்ஷ்ய பதவியை அடைந்தார்கள். தாங்கள் யௌவன காலத்தில் காதலில் நம்பிக்கை அற்று, காமத்தில் வெறுப்புற்று, 'கடமை' என்ற லக்ஷ்யத்தில் மூழ்கியிருந்து, அதில் எதிர்பார்த்த லக்ஷ்யம் கைகூடப்பெறாததால், அதில் வெறுப்புற்று, காதலே ஸர்வத்திற்கும் ஆதாரம், காதலே ஜீவியத்தின் லக்ஷ்யம் என்ற முடிவிற்கு வந்தவர். காதலின் ஜோதியில் கலந்திருப்பவர் காதலை விரும்புவார்கள் என்பது முக்காலும் உண்மையான விஷயமாதலால்தான் முடிவு செய்தேன்" என்றாள்.

"சரி, மாப்பிள்ளை தேடவேண்டிய படலத்தை ரத்துசெய்துவிட்டாள் சாரு. நன்றாகப் படிப்பவனாதலால், சீமைக்கு அனுப்பிப் படிக்க வைக்கவேண்டிய செலவின் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். மிக்க உயர்வான பதவியில் சாருவின் தாம்பத்யம் நடக்கட்டும்."

"சரிதான். காதல், காதல் என்ற உங்கள் லக்ஷ்யத்தில், பிரிவு அதிகத் தொடர்பு என்ற கொள்கையைச் சாருவிஷயத்தில் அனுஷ்டிக்க வேண்டாம். வருகிற வருஷம் கல்யாணத்தை முடித்து, அவர்களின் காதல் படகு ஆனந்த சாகரத்தில் ஒன்றாக மிதக்கட்டும். ஒரு விஷயம் மறந்து போய்விட்டேனே. மறுநாள் அவன் ரயிலுக்குப் புறப்படுமுன், அவனைத் தனியாகக்கண்டபொழுது மாப்பிள்ளை ஜாக்கிரதையாக இருங்கள்" என்றேன்.

"சாரு யாவும் சொல்லிவிட்டாளா? எல்லாம் உங்கள் ஆசீர்வாதத்தால்தான் நடக்கவேண்டும்" என்று சிரித்துக்கொண்டே போய்விட்டான். அதுமுதல் வெகு ஸ்வதந்திரமாகவே நடந்துவருகிறாள் என்றாள்.

அந்தச் சமயம் சாருவும் பாலுவும் "சித்தி இருட்டும் சமயமாகிவிட்டதே, வீட்டிற்குப் போவோமா" என்று கேட்டுக்கொண்டே வந்தார்கள்.

"பாலு! வாசன் மாமா வரவில்லையா?" என்றாள் பவானி.

இழந்த சக்தி

மூல சக்தியை இழந்து தாம்பத்ய வாழ்க்கையை அனுபவிக்க முடியவில்லையா? அப்படியானால்—

ஜாய் கெமிகல் ஒர்க்ஸ்
தயாரிக்கும்

ரெஜுவெண்டாவை

இன்றே உபயோகியுங்கள்

3 மணி நேரத்தில் நல்ல பலன் அளிக்கும் புத்துயிர், ஊக்கம், வலிமை வரும். ஸ்திரீகளின் போக வெறுப்பை நீக்கும்.

பாட்டில் ஒன்றுக்கு	ரூ. 2—8—0
டஜன் பாட்டில்கள்	ரூ, 27—0—0

வினியோகிப்பவர்:—
டாக்டர் ஆர். மகலநோவிஸ்,
போஸ்ட் பாக்ஸ் நெ. 10013, கல்கத்தா.

குறிப்பு:—நம்பத்தகுந்த ஹோமியோபதி, பயோகெமிக் மருந்துகள் டிராம் ஒன்றுக்கு ரூ. 0—3—6 வீதம் ஷை விலாசத்தில் கிடைக்கும்,

"வந்தார், சாருவுடன் பேசிக்கொண்டே ஜலக்கரையோரம் நின்றுகொண்டிருந்தார். நான் கடலை வாங்கிக்கொண்டு திரும்பும் பொழுது சாருமாத்திரம்தான் வந்தாள்" என்றான்.

"சாரு! எங்கேயடி போனான் உன்னுடைய லவ்" என்றார் சங்கர்.

"என்னப்பா போங்கோ அப்பா, இப்படி எல்லாம் கேலி பண்ணுகிறீர்கள்" என்று வெட்கத்தின் அங்கசேஷ்டைகளுடன் பவானியின் கையைத் திருகியவண்ணம் நின்றாள்.

எங்கோ பார்த்துக்கொண்டிருந்த பாலு, "வாஸன் மாமா! இங்கே வாங்கோ, எங்க சித்தி கூப்படறா. அப்பா கூப்படறா" என்று கத்தினான். அவ்விடம் வந்த வாஸன் நமஸ்காரம் குட்ஈவினிங்" என்றான்.

"ஹலோ மாப்பிள்ளை ஸௌக்யந்தானே" என்று அவன் முதுகில் அன்புடன் தட்டிக் கொடுத்தார். இதென்ன இப்படி நடந்து கொள்ளுகிறார்" என்று நினைத்தாள் பவானி.

"சிரித்துக்கொண்டே சுகம்தான்" என்று பதிலளித்தான்.

"நேரமாகிவிட்டது, வீட்டிற்குப் போவோம்" என்று சொல்லிவிட்டு வாஸனின் கையைப் பிடித்துக்கொண்டு நடந்தான் சங்கர்.

வாயில், ஏதேதோ மனதில் எழும்பும் உத்ஸாகத்தின் வேக வார்த்தைகள் வெளிவந்தன. நாம் "காதல்" என்னும் பதத்தை அலக்ஷ்யம் செய்த காலத்து வாழ்க்கை ஜீவனற்றதாகத் தோன்றியது. காதலே ஜீவியத்தின் லக்ஷ்யம் என்று அறிந்துகொள்ளும்படி செய்த, பவானியின் சகிப்புத் தன்மையின் விளைவால் தான் செய்த ஏற்பாடுகள் எவ்வித ஆனந்தத்தை அளிக்கின்றன. எனது லக்ஷ்யம் காதல்தான். காதல் நிறைவேறியது என்றது சங்கரின் மனம்.

"எல்லாம் ஒருவிதமான நன்மையான முடிவிற்கே வந்தன. ஆனாலும் இரண்டு வருஷ காலம் குழந்தைகளைவிட்டு ஹாஸ்டலிலிருந்த பொழுது, 'மாற்றாந்தாய் தானே, குழந்தைகளைப்பற்றி அவளுக்கென்ன?' என்ற சொல்லானது நாம் எண்ணிவந்த, எதிர்பார்த்துவந்த லக்ஷ்யத்தைச் சிதைவுறச் செய்தது" என்றது பவானியின் மனம்.

"மங்களமும் பெறுவர் மங்கையரெல்லாம் உன் பெயர் சொன்னால்" என்ற பாட்டு ரேடியோவிலிருந்து வந்தது.

"பவானி, இப் பாட்டு உன்னையே குறிக்கிறது என்று சொல்லியபடி வாஸனுடன் காரில் ஏறினான் சங்கர். யாவரும் ஏறி, கார் புறப்படும்பொழுது, 'பூம்' என்ற சப்தத்துடன் "வனிதா மணியே" என்ற ரேடியோவின் குரல் யாவர் மனதிலும், பவானியின் தூய சந்திர பிம்பம்போன்ற முகத்தோற்றத்தின் பாவம் தோன்றினது.

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு

வரப்பிரசாதி

கமலா பத்மநாபன்

தஞ்சைமாநகரில் வாழ்ந்துவரும் பலருக்கும் மூலை ஹனுமார் கோவில் எங்கே இருக்கிறதென்று நன்கு தெரிந்திருக்கலாம். மேல ராஜ வீதியும் வடக்கு ராஜ வீதியும் கூடும் மூலையில் கிழக்குப் பார்த்து நிற்கிறது இக் கோவில். இப்பொழுது அதன் நிலைமை எப்படி இருக்கிறதோ நான் அறியேன். கிட்டத்தட்டப் பதினைந்து வருஷங்களுக்கு முன்பு என் உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்துவிட்ட இந்தத் தேவாலயத்தின் தோற்றத்தை இங்கே சுருக்கமாய்ச் சொல்லுகிறேன்.

முன்புறமெல்லாம் பாதி இடிந்தும் இடியாததுமாய்ச் சரிந்து நிற்கும் கோபுர வாசல். "கோபுரத்தைப் பொம்மைதான் தாங்குகிறதோ" என்ற வசனத்தைப் பொய்யென்று நிரூபிக்கவே கட்டப்பட்டதுபோல் இக் கோபுர வாசலில், மேல் அந்தஸ்த்தில், செதுக்கப்பட்டிருக்கும் சில பொம்மைகள் தம் இடுப்பை வளைத்துக்கொண்டு முழங்கால்களின் மேல் கையை ஊன்றிக்கொண்டு நிற்கும் காட்சி கவனித்துப் பார்ப்பவர்களுக்கு ஆச்சர்யத்தையே விளைவிக்கும். ஏனெனில் இப்படி முதுகுகளை வளைத்துக்கொண்டு நிற்கும் பொம்மைகளின் மேல் ஓர் அந்தஸ்து கட்டிடம் கட்டி, அதன் மேல் பிறைபோல் அமைக்கப்பட்டுள்ள கூடுகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவிதச் சிற்பம் நிற்கும். நான் சிறுபையனாக இருந்த காலத்தில் அந்தக் கோபுர வாசலையும் அதன்மேல் நிறுத்தப்பட்டிருக்கும்பொம்மைகளையும்பார்க்கும்பொழுது "ஆம், கோபுரத்தைப் பொம்மைதான் தாங்குகிறது. இதில் என்ன சந்தேகம்!" என்று எண்ணிக்கொள்ளுவேன்.

—

கோபுரவாசலைக் கடந்து உள்ளே நுழையும்பொழுதே நம் தலைக்குமேலே இறக்கைகளைப் படபடவென அடித்துக்கொண்டு பறந்து செல்லும் வெளவால் படையின் துர்க்கந்தம் மூச்சை அடைக்கும். அதையும் சஹித்துக்கொண்டு, மேடும் பள்ளமும் ஆகிய நிலத்தின் மீது தட்டுத்தடுமாறி நடந்து சில கஜதூரம் முன்னேறினால், ஒரே அந்தகாரத்தில் மூழ்கிக் கிடக்கும் கர்ப்பக்கிரஹத்தை அடையலாம். அங்கே, அந்தக் கும்மிருட்டில்தான் சாக்ஷாத் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியின் ஆருயிர்ப்பக்தனான ஆஞ்சனேயசுவாமி சிலாரூபத்தில் கோவில் கொண்டிருப்பதாகப் பலராலும் நம்பப்பட்டு வந்தது—ஏன்—இன்னும் நம்பப்பட்டு வருகிறது! தினசரி, மூல விக்ரஹத்துக்கு அருகில், காலை மாலையில், மினுக் மினுக்கென எரியும் நான்கைந்து அகல்களின் மங்கிய வெளிச்சம் தன் ஜோதியை வேண்டா வெறுப்பாய் வீசிக்கொண்டு அழுது வடியும். எண்ணெயிலும் சாம்பலிலும் போட்டுப் புரட்டி எடுக்கப்பட்டதோவென்று சந்தேகம் கொள்ளும்படி அவ்வளவு அழுக்கடைந்த, சிகப்புக் கரை போட்ட, ஒரு நான்குமுழத் துண்டு, விக்ரஹத்தின்மேல் அலட்சியமாய்ச்சுற்றப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு நாளும் இந்தக் கோவிலில் திரிகாலமும் பூஜையும் நைவேத்தியமும் தவறாமல் நடந்து வருவதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கே குருக்கள் (பூஜாரி) வேலை பார்த்துவந்தவர் ஓர் ஐயங்கார் கிழவர். கிட்டத்தட்ட அறுபது வயது மதிக்கலாம். இவர் மணி அடித்துக்கொண்டே மந்திரத்தை முணு முணுத்த வண்ணம், தாம் வீட்டிலிருந்து தூக்கி வந்த ஒரு தாம்பாளத்தில், அழுக்குத் துணிக்கு அடியில் ஒளிந்துகொண்டிருக்கும் ஏதோ ஒன்றை ஆஞ்சனேயருக்கு நிவேதனம் செய்துவிட்டுப் போவதை நான் அடிக்கடி நேரிடப் பார்த்திருக்கிறேன்.

நிற்க, இந்த மூலை அனுமார்கோவில் சுவாமிக்கு "வரப்பிரசாதி" என்ற பேரும் புகழும் எப்போதும் உண்டு. எப்பொழுது யாரால் அளிக்கப்பட்ட பட்டமோ அது எனக்குத் தெரியாது. கோவிலுக்குச் சுற்றுப்புற வட்டாரங்களிலிருக்கும் பக்தாதிகளைத் தவிர, தூரத்திலிருந்துங்கூட அனேகர் சனி,வியாழன்தோறும் இந்தத் தேவஸ்தானத்துக்கு வந்து ஆஞ்சனேயருக்கு வடைமாலை சாத்திவிட்டு வணங்கிப் போகும் கைங்கரியத்தை மேற்கொண்டிருந்தனர். அப்பொழுதெல்லாம் நம் கிழக் குருக்களின்பாடு வேட்டைதான்! (பதினைந்து வருஷத்திற்குமுந்தி என் நினைவுத் திரையில் தீட்டப்பட்ட சித்திரத்தைக் கூறுவதால் நான் அடிக்கடி இறந்த காலத்திலேயே பேசுவதை நான் உணராமல் இல்லை. இதனால் வாசகர்கள் இப்பொழுது மேற்சொன்ன ஹனுமார் கோவிலில் பக்தாதிகள் வந்து வடைமாலை சாத்தும் வழக்கத்தை வைத்துக்கொண்டிருக்கவில்லை என்று எண்ணிவிடக்கூடாது)

கோவில் பிராகாரம் சற்றே விசாலமாய்க் காற்றோட்டமுள்ளதாய் இருக்கும். தென்புறக் கோடியில் இரு பன்னீர் மரங்களும், செவ்வரளிச்செடி ஒன்றும், நான்கைந்து நந்தியாவட்டைச் செடிகளும் உண்டு, எங்கள் அக்காவுக்குப் புஷ்பங்கள் என்றால் ரொம்ப ஆசை. அதுவும் பன்னீர்ப் புஷ்பத்தின்மீது அவளுக்கு எப்பொழுதும் ஒரு அலாதிப் பிரீதி உண்டு.

எங்கள் வீடு இந்தக் கோவிலுக்குக் கூப்பிடு தூரத்திலேயே தான் இருந்தபடியால் நான் தினம் சாயந்திரம் பன்னீர்மொட்டுப் பறிப்

பதற்காக இங்கு வருவேன். இரு பன்னீர் மரங்களிலும் மொட்டுக்கள் வஞ்சனையில்லாமல் குலுங்கும். மாலை வெய்யில் மறைந்ததும் மரங்களில் உள்ள மொட்டுக்கள் தம்இதழ்களை நிதானமாய் விரிக்கத்தொடங்கும்பொழுது இலேசான அந்திக்காற்றில் மிதந்துவரும் அம் மலர்களின் நறுமணம் வெகு மனோரம்யமாக இருக்கும். கோவில் குருக்கள் ஐந்து மணிக்கே கோபுரவாசலைத் திறந்துவிட்டு, வெளிப் புறத்து இடிந்த திண்ணையின்மீது அமர்ந்து பூணூல் நூற்றுக்கொண்டிருப்பார். ஆறு மணி சுமாருக்கு நான் கோவில் பக்கம் போய்ப் பிராகாரத்தைப் பார்க்க ஓடி, பன்னீர் மரத்தின் மீது தொத்தி, மொட்டுக்களை எல்லாம் பறித்து என்மேல் துண்டில் முடிந்துகொள்ளுவேன், யாருக்காக? என் அருமை அக்காவுக்காகத் தான்!

"டேய் அம்பி! இதென்னடா அனியாயம்! தினமும் இப்படி ஒரு மொட்டு விடாமல் பன்னீர் மொட்டுக்களை எல்லாம் நீயே திருடிக் கொண்டு போய்விடுகிறுயேடா! சுவாமி பூஜைக்கு ஒரு அரும்புகூட விடமாட்டேன் என்கிறுயே!" என்று திண்ணையில் உட்கார்ந்து பூணூல் நூற்றுக்கொண்டிருக்கும் பூஜாரிக் கிழம் கரடியாய்க் கத்தும். அதுபாட்டில் தன் பல்லவியைப் பிரதி தினமும் பாடிக்கொண்டிருப்பதும் நான் பாட்டில் என்காரியத்திலேயே கண்ணுக இருப்பதும்தான் மிஞ்சுமே தவிர, குருக்களின் கூப்பாட்டிற்கும் திட்டுக்கும் அஞ்சி நான் ஒரு நாள்கூட பூவில்லாமல் வெறுங்கையோடு வீடு திரும்பமாட்டேன்.

இந்த வழக்கப்படி ஒரு நாள் நிறையப் பன்னீர் மொட்டுக்களைப் பறித்து மேல் துண்டில் முடிந்துகொண்டு வீடுசென்று "அக்கா, இதோ பார்! இன்று எவ்வளவு கிடைத்திருக்கின்றன!" என்று மகிழ்ச்சியுடன் கூவிக்கொண்டே துண்டைப்பிரித்து அத்தனைமொட்டுக்களையும் அவளெதிரே கீழே கொட்டினேன்.

"ஆ! ஆ! என்ன காரியமிது அம்பி! புஷ்பத்தை இப்படிக் கீழே கொட்டலாமா? போனல் போகிறது போ. உனக்குத்தெரியாது. இனிமேல் இப்படிச்செய்யாதே. பூக்கொண்டு வந்தவுடன் என்மடியில் போடு. நான் இல்லாவிட்டால் ஏதாவது தட்டிலோ கிண்ணத்திலோ கொட்டிவை. தெரிந்ததா?" என்று அன்புடன் என்னைக்கடிந்துகொண்டே நான் அவளெதிரில் கொட்டிய புஷ்பத்தைச் சடுதியில் வாரித் தன்மடியை நிரப்பிக்கொண்டாள். நான் என் அசட்டுத்தனத்துக்கு வெட்கித் தலை குனிந்த வண்ணம் "ஆகட்டும் அக்கா, இனி மேல் புஷ்பத்தைக் கீழேபோட மாட்டேன்" என்று பதிலளித்தேன்.

உள்ளே சென்று நார் எடுத்துவந்து பன்னீர் மொட்டுக்களை எவ்வளவு நெருக்கமாய்த் தொடுக்கமுடியுமோ அவ்வளவு நெருக்கமாய்த் தொடுத்துப் பட்டையாய் மடித்துத் தனது கருங்குழலில் வெகுலாகவமாய்ச் சூட்டிக் கொண்டாள் அக்கா.

நான் அக்காவின் செய்கையையே உற்றுப் பார்த்தவண்ணம் அவள் எதிரில் சில வினாடிகள் நின்றேன்.

"என்னடா அம்பி! அப்படிப் பார்க்கிறுய்?" என்று புன்சிரிப்புடன் பூவைச் சரிசெய்தபடி கேட்டாள் அக்கா.

"நீ ரொம்ப அழகாய் இருக்கிருய் அக்கா. உன் தலைமயிர் சுருட்டை சுருட்டையாய் அலை போல் இன்னும் அழகாய் இருக்கிறது. அதில் நீ சூடிக்கொண்டிருக்கும் புஷ்பம் உனக்கும் உன் கூந்தலுக்கும் பன்மடங்கு அதிக அழகை அளிக்கிறது. அதுதான் அத்திம்பேர்கூட உன்னை......" என்று என் மனதில் அந்தச் சமயம் எழுந்த எண்ணங்களை வெளிப்படையாய்க் கூறிவிட்டேன்.

அக்கா என்னை மேலே பேசவிடாமல் என் வாயை இறுகப் பொத்திஞள். "வாயை மூடுடா போக்கிரி! உனக்கு இவ்வளவெல்லாம் பேசத்தெரிந்துவிட்டதா? விடிய விடிய இன்னும் பன்னிரண்டு வயதுகூட பூர்த்தியாகவில்லை!" என்று கூறிவிட்டு இலேசாக என் கன்னத்தை நிமிண்டிஞள்.

பிறகு அவள் என்வாயிலிருந்து தன் கையை எடுத்தவுடன் பேச்சு உரிமைபெற்ற நான் "அக்கா! அத்திம்பேரிடமிருந்து கடிதம் வந்ததா? பரீக்ஷை ரிஸல்ட் தெரிந்ததாமா?" என்று வினவினேன்.

அத்திம்பேர் என்ற சொல்லைக்… அக்காவின் வதனம் பாஸ்கரனை… ஜம்போல் மலர்ந்தது. தன் … விதழ்களில் புன்முறுவல் பூக்க… யுடன் கட்டி அணைத்துக்கொண்… கடிதம் வந்தது அம்பி. ரிஸல்ட… காலை தெரியுமாம். முதல் கிளாஸ… எதிர்பார்த்துக்கொண்டிருப்பதா… …தியிருக்கிருர். மேலும் திங்கட்கிழமை ரி… தெரிந்தவுடன் நமக்குத் தந்திமூலம் சந்தோ… சமாசாரத்தைத் தெரியப்படுத்தப்போவதாகக் கடிதத்தில் எழுதியிருக்கிருர். நாளைக்குச் சனிக்கிழமை அல்லவா? ஆஞ்சனேயர் கோவிலுக்குப்போய் வடைமாலை சாத்திவிட்டு வருவோம். கூடிய சீக்கிரம் நல்ல சமாசாரம் வரட்டும்" என்று தன் குரலில் ஆனந்தமும் பக்தியும் தொனிக்கக் கூறிஞள் அக்கா.

"சரியாய்ப்போச்சு! உனக்குக்கூட இந்த ஆஞ்சனேயர் பைத்தியம் பிடித்துவிட்டதா அக்கா? அந்தக் கோவிலில் சுவாமி குடியிருக்கிருர் என்ரு நீ எண்ணிக்கொண்டிருக்காய்? எனக்குச் சிறிதும் நம்பிக்கையில்லையம்மா. சுவாசத்தை அடைக்கும்படியான வௌவால் புழுக்கை நாற்றத்தைச் சேவித்துக்கொண்டு சுவாமி எப்படித்தான் அங்கு இருப்பார் நீயே சொல்?" என்று கேட்டு நான் அக்காவின் மூட பக்தியை எடுத்துக்காட்டி அவளைம் பரிகஸித்தேன்.

"உச்! அப்படியெல்லாம் சொல்லக்கூடாது அம்பி! எல்லோரும் நம்புவதைத்தான் நாமும் நம்பவேண்டும். தெய்வ நிந்தனை பெருங் குற்றமல்லவா? கேள். என் கல்யாணத்திற்கு முன்பு இந்த வரன் (உன் அத்திம்பேர்) கிடைக்கவேண்டுமென்று மனமாரப் பிரார்த்தித்துக்கொண்டு, அம்மா ஆஞ்சனேயர் கோவிலுக்குப்போய் வடைமாலை சாத்திவிட்டு வந்தாள். நான்கு தினங்களுக்கெல்லாம் உன் அத்திம்பேர் என்னைவந்து பார்த்துவிட்டுப் பெண் பிடித்திருப்பதாகச் சொல்லிப்போஞர். பிறகு அதி சீக்கிரத்திலேயே தகராறு ஏதும் இல்லாமல் எங்கள் விவாகமும் இனிது நடந்தேறியது. நீ மூன்று வருஷங்களுக்குமுன்பு டைபாயிட் ஜ்வரத்தில் படுத்துப் பிழைக்கமாட்டாமல் கிடந்தாயே! அப்பொழுதும் அம்மா கண் கண்ட தெய்வமாகிய இந்த ஹனுமாருக்குத்தான் வேண்டிக்கொண்டாள். டாக்டர்களே அதிசயப்படும்படி வியாதி தெறித்துப்போய் நீ சுகமடைந்து எழுந்துஉட்கார்ந்தாய்" என்று ஒரு விதப் பரபரப்புடன் பேசிக்கொண்டே போஞள் அக்கா.

நான் அதற்குப் பதில் ஒன்றும்கூருமல் சும்மா இருந்துவிட்டேன்.

மறு தினம் சனிக்கிழமை அக்காளும் நானும் ஹனுமார் கோவிலுக்குப் போய் வடைமாலை சாத்தி விட்டு அஷ்டோத்தரமும் செய்துவிட்டு வந்தோம். அம்மாவுக்கு ஜ்வரமாக இருந்தபடியால் எங்களிருவரை மாத்திரம் கோவிலுக்கு அனுப்பிவிட்டு, தான்வீட்டிலேயே தங்கிவிட்டாள், அக்கா அன்று முழுவதும் ஒரே உற்சாகத்தில் மூழ்கிக்கிடந்தாள். காரணம் அன்று நாங்கள் தேவஸ்தானத்துக்குப் புறப்பட்டது முதல் மறுபடியும் வீடு திரும்பும் பரியந்தம் ஒன்றின் மேல் ஒன்ருய் நல்ல சகுனங்கள் நேர்ந்துகொண்டே இருந்ததுதான்.

எவரெஸ்டு & அமர்ஜோதி

பேஸ்பவுடர், சந்தனுதி, அரைக்—கீரைவிதை, பிருங்காமலக—தைலம் வகையராக்களை வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பவர்கள்:

வி. ஆர். & கோ.
கும்பகோணம்

ஏஜண்ட்ஸ்:

வாஸன் & கோ.
6656/5 கிங்ஸ்வே :: செகந்தராபாத்

ஞாயிற்றுக்கிழமை மாலை நான் வழக்கம் போல் கோவிலுக்குப்போய், பன்னீர் மரத்தில் ஏறி வேண்டியமட்டும் மொட்டுக்களைப் பறித்துக்கொண்டேன். அன்றென்னவோ தினத்தையும்விட அசாத்தியமாக மொட்டுக்கள் குலுங்கின. என்னால் அரைப்படி மொட்டுக்கள் தான் பறிக்க முடிந்தது. கை சோர்ந்து போயிற்று. மரத்திலிருந்து குதித்து, பறித்த மொட்டுக்களை மேல் வேஷ்டியில் முடிந்து கொண்டு வீட்டைப்பார்க்க ஓடினேன். இருட்டிவிட்டது. வழியில் ஒரு கல் தடுக்கி விழுந்து முழங்காலில் சிராய்த்துக்கொண்டேன். இன்று ஏராளமாய்ப் புஷ்பம் கிடைத்திருக்கும் நற் செய்தியை அக்காவுக்கு அறிவிக்கப்போகும் துடிப்பிலும் சந்தோஷத்திலும் முழங்கால் காயத்தைக்கூட லக்ஷயம் செய்யாமல், மண்ணை தட்டிவிட்டுக்கொண்டே எழுந்து மறுபடியும் ஓட்டமாகவே ஓடி வீட்டை அடைந்தேன்.

வாசற்படி ஏறியவுடன் "அக்கா! அக்கா!" என்று சந்தோஷத்துடன் கூச்சலிட்டேன்.

"அம்பி! பூக்கொண்டுவந்தாயா? எங்கே எவ்வளவு இருக்கிறது காண்பி, பார்க்கலாம்" என்று ஆவல் துள்ள வாசல்புறம் ஓடிவந்து என்னை வழக்கமாய் எதிர்கொண்டழைக்கும் அக்காவைக் காணமல் சுற்று முற்றும் ஏமாற்றத்துடன் பார்த்தேன். ஒரே அந்தகாரத்தில் மூழ்கிக்கிடந்த காமரா உள்ளில் தன் முழங்கால்களின் மேல் முகத்தைக் கவிழ்த்துக்கொண்டு விசித்துவிசித்து அழுதுகொண்டிருந்த என் அருமை அக்காவைக் கண்டவுடன் என் மனம் துணுக்குற்றது.

"அக்கா, இதென்ன? ஏனிப்படி அழுகிறாய்? இந்தா பூ" என்று அவள் முகத்தை நிமிர்த்திவிட்டு என் துண்டில் வைத்திருந்த புஷ்பத்தை அவள் மடியில் கொட்டினேன்.

அக்கா சர்ப்பம் தீண்டியவள்போல் துள்ளி நகர்ந்தாள். நான் அவள் மடியில் கொட்டிய புஷ்பத்தை அப்படியே உதறிக் கீழே தள்ளினாள். "அம்பி, போ, போ! எனக்குப் பூ வேண்டாம். அந்தப் பாக்கியம் இல்லை எனக்கு இனி மேல்!" என்று தீனமாய் அலறிவிட்டு, குப்புறத் தடாலென்று படுத்துக்கொண்டு முன்னிலும் பன்மடங்கு அதிகமாய் விம்மிவிம்மி அழத் தொடங்கிவிட்டாள்.

புஷ்பத்தைக் கீழே கொட்டலாகாது என்று எனக்கு ஒரு சமயம் புத்திபுகட்டிய அதே அக்கா, இன்று இப்படிப்பூவை அலக்ஷியமாய்த் தரையின்மீது எறிவதென்றால், எனக்கு ஒன்றுமே புரியவில்லை. திக்பிரமை பிடித்தவன் போல் சில நிமிஷநேரம் ஸ்தம்பித்து நின்றேன்.

இதற்குள் கட்டிலில் ஜ்வரத்துடன் படுத்துக்கொண்டிருந்த எனது அம்மாவும் ஏதோ தீராத்துக்கத்தினால் வேதனைப்படுபவள்போல் குமுறிக் குமுறி அழும் ஓசையைக்கேட்கச் சட்டென்று அம்மாவிடம் சென்றேன். அப்பா ஊரில் இல்லை. ஏதோ காரியமாக வெளியூர் சென்றிருந்தார்.

"அம்மா, அம்பா! என்ன சமாசாரம்? ஏன் நீயும் அக்காவும் இப்படி அழுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

அம்மா விம்மல்களுக்கிடையே "அம்பி! தந்தி வந்ததே! உனக்குத் தெரியாதா?" என்று கூறும்பொழுதே அவள் தொண்டை அடைத்துக்கொண்டது.

"அத்திம்பேருக்கு பரீக்ஷை தவறிவிட்டதா?" என்று வினவினேன் நான் அடக்கமுடியாத வியப்புடன்.

"இல்லையடா கண்ணே! பரீக்ஷை தவறியிருந்தால் தேவலையே! உன் அத்திம்பேரே தவறிப் போய் விட்டாராமடா! எலெக்டிரிக் ஷாக்கினால் திடீரென்று மரணமடைந்துவிட்டதாகச் சம்பந்தி அர்ஜென்ட் தந்தி அடித்திருக்கிறார். ... பசுங்கிளிபோல் இருக்கும் உன் அக்... டி மூலையில் உட்கார்த்திவிட்டுக் ...க்கொண்டுவிட்டானே அந்தக் ... பெத்த வயிறு பத்திக்கொண்டு ...ன் என்ன செய்வேனடா!" ...மாய்ப் பிரலாபிக்க ஆரம்பித்து ...மா.

அம்... கோரப் பிரலாபத்துடன் அக்காவின் பரி...கரமான அழுகையும் விம்மல்களும் கல...வந்து என் செவிகளில் சோகமும் பயங்கரமும் நிறைந்த கீதமாய் ஒலித்தன. என் வயிற்றை என்னமோ சங்கடம் செய்தது. என்னை அறியாமல் என் தேகம் நடுங்கிற்று.

மறு க்ஷணமே ஏதோ வெறி பிடித்தவன் போல் ஆவேசத்துடன் கீழ்க்கண்டபடி கத்தத் தொடங்கினேன்.

"வரப்பிரசாதியாம், வரப்பிரசாதி! வடைமாலையை முழுங்கி ஏப்பம்விடும் மோசக்காரச் சுவாமி! பக்தி சிரத்தையுடன் நம்பும் மனுஷரை வஞ்சிக்கும் கபி! ஈவு இரக்கமற்ற குரங்கு! உன்னையும் ஒரு சுவாமியாக எண்ணிக் கோவில் கட்டிவைத்துக் கும்பிடுகிறார்களே அவர்களையல்லவோ சொல்லவேண்டும்."

"அம்பி! நிறுத்து, தெய்வ நிந்தனை ஆகாதடா! நாம் இப்போது அனுபவிக்கும் துன்பம் போதாதா? தெய்வத்தை நிந்தனை செய்து அதனால் வேறு இன்னும் பாப மூட்டையைக் கட்டிக் கொள்ளவேண்டுமா?" என்று தன் துயரத்திலும் கூட எனக்கு உபதேசம் செய்ய ஆரம்பித்துவிட்டாள் அக்கா

நான் வாயை மூடிக்கொண்டேன். ஆனால் என் உள்ளக் கொதிப்பைத் தணிக்க முடியவே இல்லை!

தொடர் கதை

இதென்ன உலகம்!

மூல ஆசிரியர்

மொழி பெயர்ப்பாளர்:— கிருத்திவாஸ் இலா சந்திரஜோஷி

8

அப்பாவும் அம்மாவும் உணவருந்தும் மேஜையில் எங்களை எதிர் நோக்கிய வண்ணம் அமர்ந்திருந்தனர். டாக்டரைக்கண்டதும் மலர்ந்த முகத்துடன் 'வாருங்கள் டாக்டர். வெகுதினங்களுக்கு அப்புறம் இன்றுதான் தங்களுடன் சேர்ந்து உணவருந்தும் பாக்கியம் கிட்டுகிறது' என்று வரவேற்றாள் அம்மா.

ராஜு எங்களுடன் வரவில்லை. அதனால் அப்பா, வேலைக்காரன் வந்ததும், 'ராஜு'வை ...ழைத்துவருமாறு ஏவிவிட்டு 'நேற்றைய ...டகம் எப்படியிருந்தது டாக்டர்?' என்று ...க்டரைப் பார்த்துக் கேட்டார்.

டாக்டர் நாணத்துடன் பல்தெரியும் நிலையில் சிரித்தவண்ணம், 'நாடகம் அவ்வளவாக நன்றாயில்லை. இருந்தாலும் பையன்கள் பெண்கள் வேஷம் தரித்து நடிப்பதுபோலப் பெண்களும் ஆண்கள் வேஷம் தரித்து நடித்தனர். பெண்களின் இப் புது முயற்சி எனக்கு வெகுவாகப் பிடித்தது' என்று கூறினார்.

அப்பா 'ஆபாஸக் களஞ்சியம்' என்று கடிந்தார்.

டாக்டர் 'என்ன ஸார் அப்படிக் கூறுகிறீர்கள்?' என்றார்.

'அச்சம், நாணம் இவைகளைக் களைந்தெறிந்து, ஆண்வேஷம் பூண்டு நடிக்கும் பெண் என்னதான் செய்யமாட்டாள்?'

எனக்கும் அம்மாவிற்கும் சிரிப்பு வந்தது. ஆனால் டாக்டர் சிறிது கம்பீரமாக, 'தங்களது இந்த ஸெண்டிமெண்டை' (மனத்துதிக்கும் அபிப்பிராயத்தை) நியாயமானது என்று கூறமுடியாது. பையன்களுக்குப் பெண்வேஷம் தரித்து நடிக்கும் உரிமையுண்டு. பெண்களுக்கு ஆண்வேஷம் பூண்டு நடிக்க உரிமை கிடையவே கிடையாது என்று கூறி, குற்றம் சாட்டுவது சரியல்லவென்று எனக்குப் படுகிறது' என்றார்.

'ஸெண்டிமெண்டா?' ஏன் 'ஸெண்டிமெண்டை' மதிப்பற்றதாகக் கருதுகிறீர்கள்? உலகத்தில் யுக்திமட்டும் தானா இருக்கிறது? 'ஸெண்டிமெண்டை' ஆதாரமாகக் கொண்டுதான் இச்சிருஷ்டி நடக்கிறது என்பது தங்க...க்குத் தெரியாதுபோலும். நாணம், மடம், ...ச்சம், பயிர்ப்பு என்பவை பெண்களின் ...தானமான குணங்கள். நம் தேசத்துப் ...களிடம் மட்டுமல்ல. உலகத்துப் பெண்...ளிடமும் இக் குணங்கள் நிரம்பியிருக்... இக் குணங்கள் காரணமாகத்தான் ... பெண்களிடம் ஈடுபடுகிறார்கள். ...காட்பாடு)யில் பெண்ணினம் ஆணைத்தேவனாக நினைக்கிறது என்று கூறுகிறோம், ஆனால் அது உண்மையில் ஆணிடம் 'தேவத்துவம்' இருக்கிறது என்பதைக் கற்பனைகூட செய்து பார்ப்பதில்லை. அது ஏன் செய்வதில்லை என்பதுபற்றி இச்சமயம் நான் வாதிக்க விரும்பவில்லை. ஆனால் ஆண்களின் இதயத்தில், பெண்கள்மீது எவ்வளவு கொடுஞ்செயல்கள் புரிந்தபொழுதிலும், பெண்ணின் தேவித்தன்மை வேரூன்றி, பக்தி, சிரத்தையை ஏற்படுத்தியுள்ளது. ஆண்களைப் பின்பற்றுவதனால் 'பெண்ணினத்தின் 'பெண்மை' மறைந்துவிடுகிறது. அதனால் தான், 'ஆண்வேடம் பூண்டு நாடகமேடையில் நடிக்க முன்வரும்—தனக்குப் பெரும் கௌரவம் கிட்டிவிட்டதாகப் பொய்க் கௌரவம் பாராட்டும்—பெண்களிடத்து, பெண்மைக்கே தலைசிறந்த, தாயுள்ளத்தின் இனிய அன்பும் கம்பீரமும், செழித்திரா, அதே போல அரசியல்—சமூக—மேடைகளில் ஆண்களின் காரியத்தைக் செய்யப்புகும் பெண்களும் 'தாய்ப்பதவி பெறத்தகுதியற்றவர்கள்' என்று கூறுகிறேன்." என்றார்.

'சின்ன ஐயா' உடம்பு சரியாயில்லை அதனால்வரவில்லை என்றுசொல்லுகிறாக" என்று வேலைக்காரன் வந்து கூறினான்.

இப்பேச்சில் ஈடுபட்டு விட்டதனால், ராஜுவைப்பற்றிய சிந்தனையே எங்களுக்கில்லை.

அம்மாவும் அப்பாவும் கவலையுற்றனர். 'உடம்பு சரியாயில்லையா? என்ன உடம்பாயிருக்கலாம்? டாக்டர்தான் இதோ இருக்கிறாரே!—வாருங்கள் ஸார் பார்த்துவிட்டு வருவோம்' என்றார் அப்பா.

இவ்வளவு நேரம் வரை என்னிடம் பேசிக்கொண்டிருந்தாரே. என்னிடம் அப்பொழுது ஒன்றும் சொல்ல வில்லையே' என்றார் டாக்டர்.

இதற்குள் ராஜு அங்கு வந்து 'எனக்குஎன்னவோ சிறிது வயிற்றை வலிக்கிறது. அதனால் தான் இப்பொழுது சாப்பிட விரும்பவில்லை. நீங்கள் சாப்பிடுங்கள், கவலைப்படாமல்' என்றான்.

உடனடியாக அவன் திரும்பிச் சென்றுவிட்டான். டாக்டருக்கும் அவன் செய்யும் பாசாங்கு சிறிது புரிந்துவிட்டதுபோலும், அதனால் புன்முறுவலுடன் 'தூங்குவதற்குமுன், வெந்நீரில் ஹிங்காஷ்டக சூர்ணத்தைக் கலந்து இவருக்குக்கொடுங்கள்' என்றார்.

எல்லோரும் கலகலவென நகைத்தோம். 'டாக்டர், தேவலையே. உங்களுக்கு ஆயுர்வேதமும் வரும்போலிருக்கிறதே. மேல் நாட்டுத் தண்ணீரை உதறித் தள்ளிவிட்டு 'ஹிங்காஷ்டகம்' கொடுக்கச் சொல்கிறீர்களே!' என்றார் தந்தை.

219016
N424.4-5
சென்னை-600 00

"இவருக்குக் கண்டிருக்கும் நோயும் நம் நாட்டினுடையதுதான். சின்னஞ்சிறு விஷயங்களுக்கெல்லாம் கோபித்துக்கொண்டுவிடுகிருர். கோபம் வயிற்றில் வலியை வரவழைக்கும் என்பது எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்பட்டதுதானே. அதனுல்தான் நம்நாட்டு மருந்து சாப்பிடச் சொன்னேன்."

9

என்னவோ, எனக்கு ராஜுவின்போக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. 'பெண்கள் ஸ்வதந்திரத்திற்காக நாடு பூராவும் கிளர்ச்சி வலுத்துக்கொண்டிருக்கும் இக்காலத்தில் — அதுவும் பெண்களுக்கு ஸ்வதந்திரம் அளிக்கப்பட்டிருக்கும் எங்களது குடும்பத்தில்—டாக்டரிடம் நான் அச்சமின்றி வார்த்தையாடுகிறேன் என்பதற்காக ராஜு ஏன் என்னை வெறுக்கிருன். அவன் இம்மாதிரி செய்வது அநியாயம். அநியாயத்தை எதிர்த்துப் போராடத்தான் வேண்டும். ராஜுவிற்கு மரியாதை கொடுப்பதினுலும், அவனிடம் பயப்படுவதனுலும், ஒரு பயனுமில்லை' என்று எண்ணினேன்.

உணவருந்தி முடிந்ததும் டாக்டருடன் எனதறையை அடைந்தேன். "இன்று பாலஸ் தியேடரில் ஒரு புதுப்படம் நடக்கிறது அங்கே போவோ[illegible]ருர் டாக்டர்.

ராஜுவிற்கு எரிச்சலையுண்டுபண்ணுவதற்கான முயற்சியில் ஈடுபட்டேன், ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாமல், மறைமுகமாக, டிரைவரைக் கார் எடுத்துக்கொண்டு வரச்சொல்லி இருவரும் கிளம்பிவிட்டோம். நான் மேலிற்கு கம்பளிக் கோட்டும், தலைக்கு மப்ளரும் கட்டிக்கொண்டிருந்தேன். இருந்தாலும் குளிரினுல் தேகம் நடுங்கிற்று. அது உண்மைக் குளிர் தானு அல்லது பொய்க் குளிரா என்று என்னுல் சொல்ல முடியாது. நான் மோட்டாரில் அமர்ந்ததும் டாக்டரின் கழுத்தை இறுகத் தழுவிக்கொண்டேன். வெகுநேரம் வரை நாங்கள் இருவரும் வாயடைத்து உட்கார்ந்திருந்தோம். திடீரென டாக்டர் ரொம்ப மெதுவான குரலில் 'லஜ்ஜா, சினிமா'விற்கு அவசியம் போகவேண்டுமா?' என்ருர்.

'வேறெங்கே போகிறது?'

'திரும்பிப் போய்விடுவோமே!'

'ஆனுல் இவ்வளவு தூரம் வருவானேன்?'

"சினிமாவிற்குப் போகவேண்டாம். வேறெங்கேயாவது போவோமே."

"எங்கே போவது?"

"சரி, சினிமாவிற்கேதான் போவோம்."

சந்தேகமும், சஞ்சலமும் நிறைந்த டாக்டரது வார்த்தைகளைக்கேட்டு, இன்னும் அதிகமாக அச்சமுற்றேன். அச்சத்தில் அவரை இன்னும் இறுகக் கட்டிக்கொண்டேன்.

'சினிமா'க் கொட்டகையை அடைந்தபின், மின்ஸார வெளிச்சத்தைக் கண்டு சற்றுப்பயம் குறைந்தது. 'ராஜுவிற்கு எனது இக்காதல் வெறியின் செய்தி எட்டியிருக்குமா, இராதா என்ற யோசனையில் எனக்கு மயிர்க்கூச்சலெடுத்தது.

படக்காட்சி ஆரம்பமாகியது. அமெரிக்கன் பிலிம். அது உள்ளத்திற்கு உத்வேகமூட்டும் படம்' என்று டாக்டர் கூறியிருந்தார். எனக்கு எல்லாம் ஒன்ருகத்தான் பட்டது. யுவனும் யுவதியும், புரியும் இடையூறற்ற சுதந்திர லீலைகள், காதல் வெறியில் ஏற்படும் லீலா விநோதங்கள்!

படம் முடிந்து திரும்பும்பொழுது எனதுள்ளத்தில் துயரமும் ஜடத்துவமும் கவிழ்ந்துகொண்டன. வீட்டையடைந்தபின், டாக்டரிடம், 'நீங்கள் இன்று இங்கேயே இருக்கவேண்டும். தனிமையாயிருக்கப் பயமாயிருக்கிறது. முந்தாநாளெல்லாம் லீலா என்னுடனிருந்தாள். இன்று ஒருவருமில்லை. ஆகையால் இன்று இரவு பூராவும் கண்விழித்தவண்ணம் ஏதாவது வம்பளந்துகொண்டிருப்போம்' என்றேன்.

"நேற்றிரவு கண்விழித்ததனுல் உனது கண்கள் சிவந்து கிடக்கின்றன. இன்றும் விழித்துக்கொண்டிருப்பாயாகில் உடம்பு கெட்டுவிடும்"

"ஊஹும்! எனக்குத் தனியாயிருக்கப் பயமாயிருக்கிறது. நான் தனியாயிருக்கமாட்டேன்?"

,'எனக்கொன்றும் ஆக்ஷேபணையில்லை. உன் நன்மைக்காகத்தான் சொன்னேன்?"

நான் கட்டிலில் படுத்துக்கொண்டேன். டாக்டர் என்னைப் பார்த்தவண்ணம், அருகிலிருந்த 'கோச்' சில்படுத்துக்கொண்டார். காதலின் இனிய வெறியை உண்டுபண்ணும் அமைதி நிலவிய இரவில் காதலர்களாகிய நாங்கள் இருவரும் நிர்மானுஷ்யமான அவ்வறையில், சோம்பரும் இன்பமும் கலந்த மயங்கிய நிலையில் எவ்வித இடையூறுமின்றி ஸ்வதந்திரமாகப் படுத்திருந்தோம். ஆனுல் என்னுள்ளத்தினுள் ஒருவித அத்புதமான படபடப்புக் குடிகொண்டிருந்தது. டாக்டரது நிலையும் அவ்விதம் தானே இருக்கும்?

அன்றைக்கு எந்தத் தெய்வத்தின் நல்லெண்ணமோ, நான் படுகுழியில் விழாமல் தப்பிவிட்டேன். அனர்த்தத்தை விளைவிக்கவிருந்த அந்தப் படுகுழியை நினைத்தாலே என் மனம் துணுக்குறுகிறது.

'உட்கார்ந்து ஏதாவது வம்படிப்போம்' என்று நான் சொன்னேன். ஆனுல் வம்படிக்கும் சக்தியே அன்று எங்களிடமில்லை, இ[illegible] வரும் ஆசை, மோகம், மயக்கம், சோம்ப[illegible] இவைகள் புடைசூழ எவ்விதச் சுய நி[illegible] மின்றிப் பலஹீனமாகப் படுத்துக்[illegible] தோம். தூங்காமலிருக்க எவ்வளவே[illegible] றேன். ஆனுல் கண்கள் எனது விழி[illegible] அயர்ந்துவிட்டன. ([illegible]

ஜன்னலுக்கு வெளியில்

—சாரி—

அன்றொரு நாள். கார்த்திகை மாதம். உடம்பை ஒடுக்கும் குளிர். மனிதனின் சோம்பலை விருத்திசெய்து இழுத்துப் போர்த்துப் படுத்துக்கொள்ளத் தூண்டும் ஒரு காலை நேரம். மணி 5 அடித்துச் சற்று நேரம் ஆகி இருக்கும். கட்டிலில் படுத்தவாறு ஜன்னலுக்கு வெளியில் நோக்கினேன். இருளில் அம்மணியின் குடிசை தென்பட்டது. ஆனால் வழக்கம்போல் ஏன் அதில் வெளிச்சம் இல்லை? குளிருக்குப் பயந்து, ஒடுங்கி எல்லோரும் படுத்திருக்கிறார்களோ? இநக்கலாம்.

எழுந்து ஜன்னலண்டை போய், கூர்ந்து கவனித்தேன். ஆம், வெளிச்சமே தென்படவில்லை. என்ன காரணம்?

"அம்...மா......அப்...பா". பாவம்! கந்தசாமியின் குரல்தான் அது. சென்ற இரண்டு நாளாகப் பெய்த மழையின் ஈரம் அவனுக்கு ஆகவில்லை போலும். மறுபடியும் ஜ்வரத்தில் கஷ்டப்படுகிறான், நோயாளி. அவனுடைய முணகலைத்தவிர வேறொரு சப்தமுமில்லை.

சற்றுநேரம் ஜன்னல் கம்பியைப் பிடித்த வண்ணம் நின்றேன். பிறகு நானும் இழுத்துப் போர்த்துப் படுத்துக்கொண்டேன். பரிதாபம் நெஞ்சில் இருந்தது. ஆனால் நோயாளியின் கஷ்டத்தை நிவர்த்திக்க என்ன செய்வது?

இது ஆறு வருஷத்திற்கு முன்பு நடந்தது. அதற்கு முன்னும், பிறகும், அனேகம் தடவை ஜன்னலருகில் நின்று வெளியே குடிசையில் நடக்கும் எவ்வளவோ நிகழ்ச்சிகளைக் கவனித்திருக்கிறேன். இன்று என்ன புதுமை இருக்கக்கூடும்?

— 2 —

அம்மணி எங்கள் தெருக்கோடியில் இருக்கும் பால்காரி. கந்தசாமி அவளுடைய புருஷன். அவர்களுக்கு ஐந்து பெண்களும், இரண்டு பிள்ளைகளும் உண்டு. ஏதோ பட்டரையில் அன்றாடக் கூலிவேலை செய்து பிழைத்தவன் கந்தசாமி. வறுமைப் பேயின் வாயில் அகப்பட்டுத் தத்தளிக்கும் தன் பெரிய குடும்பத்தைப் பராமரிக்க, ரொம்பவும் பாடுபட்டான். என்றைக்குமே அவன் நோயாளிதான். ஆனால் வாலிப முடுக்கில், நல்ல தேக திடங்கொண்டவனாயிருந்தது என் நினைவிற்கு வருகிறது.

அம்மணியைக் கல்யாணம் செய்துகொள்ளு முன்பு, கந்தசாமி பட்டாளத்தில் சேர்ந்து, ஐந்துவருஷ காலம் சண்டைக்குப்போய், அதிகம் பணத்துடன் ஊருக்குத் திரும்பி வந்தவன்.

கையில் சேர்ந்திருந்த பணத்தைப்போட்டு நூறு அடி விஸ்தீரணமுள்ள ஒரு சிறு கொல்லையை விலைக்கு வாங்கினான்; அதன் ஓரத்தில் நின்ற குடிசை அவன் குடியிருக்கும் வீடாயிற்று.

அம்மணி எங்கள் தெருவில் பரம்பரை பால்காரி வீரம்மாவின் ஒரே மகள். நல்ல சிகப்பாய், தலை நிறைய மயிரும் எருமைப் பால், தயிரை உண்டு வளர்ந்த பளபளப்பான மேனியும் கொண்டவள். ஆகவே, இவளையே தனக்கேற்ற மனைவியென்று கந்தசாமி தேர்ந்தெடுத்தான்.

கொல்லையை வாங்கியதுபோக, கையில் மிகுதியாக இருந்த பணத்தில் சில நகைகள் வாங்கி, அம்மணிக்கு அணிவித்து, கந்தசாமி அவளுடைய நிகரற்ற அழகில் பெருமை கொண்டான்.

இந்தக் கலியாணம் நடந்த பிறகு, வீரம்மா அதிக காலம் உயிருடன் இருக்கவில்லை. சாகும் தருணத்தில் தன் ஆஸ்தியான இரண்டு எருமை மாடு, நான்கு கறவைப் பசு இவைகளைத் தன் அருமை மகள் அம்மணிக்குச் சீதனமாகக்கொடுத்துக் கண் மூடினாள்.

— 3 —

பிறகு அவர்களிடையில் துன்பம் தலை காட்டத் தொடங்கிற்று.

இப்பொழுது கோடித்தெரு என்று விளங்குவது, அந்த நாளில் ஊருக்கு வெளியில் உள்ள ஒரு பொட்டல். அதன் ஒரு கோடியில் கந்தசாமியின் கொல்லையும் குடிசையும் இருந்தன. சிறுகச் சிறுக, கொல்லையை ஒட்டி, சிறுசாக வீடுகள் தோன்றின. பார்வைக்கு அழகான தெரு உண்டாயிற்று.

ஆனால் அவ்விடத்தில் பூமி சற்றுப் பள்ளத் தாக்காக அமைந்த காரணத்தினால் மழைநாட் களில், தெருவே ஒரு ஓடும் நதியைப்போல் தோன்றும்.

குடிசையைப் பற்றியோ கேட்கவேண்டாம். நாற்புறமும் ஜலம் தேங்கி ஒரு சிறிய ஏரி போலிருக்கும். நடுவில் உள்ள குடிசையும் மா, பலா மரங்களும் தீவுகள்! இவ்வளவு சதுப் பான இடமாகையால், குடிசையின் உட்புறத் தில் ஸதா ஈரக்கசிவும், குளிர் வாடையும் தோன்றும்.

இந்த ஈரமும், குளிர்ந்த காற்றுமே கந்தசா மிக்கு எமனாக வந்து வாய்த்தன—பாவம்! பட்டாளத்தில், அவனையறியாமல் தொத்திக் கொண்ட க்ஷயம் என்கிற கொடியநோய் நாள டைவில் அவன் உடலில் தலைகாட்டத்தொடங் கிற்று.

பிரதி வருஷமும் ஐப்பசி மாதத் துவக்கத் தில் ஆரம்பிக்கும் இருமல், மாசிமாத முடி வில்தான் சற்றுக் குறைந்து காண்பிக்கும். நடு வில், சில நாட்களில், குளிர் காய்ச்சலும் சேர்ந்துகொண்டு, நெருப்பு மாதிரிவீசி அவன் உடலைக்குலைத்தது. அப்பொழுதெல்லாம் கந் தசாமியைச் சிலவாரங்கள் வரையில் பாயும் படுக்கையுமாக வீழ்த்தி, பட்டரைவேலைக்குப் போய்ச் சம்பாதிக்க இயலாமற்செய்துவிடுவது முண்டு.

அப்படியும் இப்படியுமாகப் பதினைந்து வரு ஷங்கள் சென்றன — அம்மணியிடம்மட்டும் சிறிதளவும் மாறுதல் தென்படவில்லை. ஏழு குழந்தைகளின் தாய் என்று அவளை யாரும் சொல்லமுடியாது. பதினைந்துவயதுள்ள அவர் களுடைய பெரியபெண்ணைப் பார்ப்பவர் அம் மணியின் தங்கை என்று சொல்லக்கூடும்.

கந்தசாமியின் தேக நிலைமை வரவரக் கே டாகி வருவதை உணர்ந்தாலும், அம்மணி தன் மனச்சோர்வை வெளிக்குக் காட்டவில்லை. சம்பாத்தியம் குறைந்து வருவதை நினைத்து வியாபாரத்தை விருத்திசெய்ய நினைத்தாள். குழந்தைகளின் போஷாக்குக்கு உபயோகப் பட்ட, பாலும் தயிரும்கூட இப்பொழுது விற்ப னைக்குக் கிளம்பிற்று; குழந்தைகள் மெலிந்தன.

வருவாயை அதிகப்படுத்தவேண்டி, குடிசை யின் முன்பக்கத்தில் பெரிய காய்கறித் தோட் டம் உண்டாயிற்று. அவரை, வெண்டை, புடல், பூஷணி, பறங்கி, கீரைத்தினுசுகள்-இம்மாதிரி என்ன காய்கறி வேண்டுமானாலும் எங்கள் தெருவில் உள்ளவர்கள் அம்மணியிடம் விலைக்கு வாங்கிக்கொண்டார்கள்.

சலிப்பின்றி, ஓய்வில்லாமல் அம்மணி வேலை செய்தாள். குளிரோ வெய்யிலோ மழையோ, எதையும் பொருட்படுத்தாமல் காலை 5 மணிக் கே எழுந்து வீட்டு வேலைகளை முடித்து, 6½ மணிக்குள் மாடுகளை ஓட்டிக்கொண்டு எங்கள் தெருவுக்குப் பால்கறக்க வந்துவிடுவாள்.

தெம்பாக இருக்கும் சில நாட்களில், கந்த சாமி தோட்டத்து வேலி வரையில் அவளுடன் மெல்ல நடந்துவந்து மாட்டை அவிழ்த்துத் தந்து, பட்டிக் கதவை மூடிக்கொண்டு, அம் மணி செல்லும் வழிமேல் விழிவைத்துச் சற்று நேரம் நிற்பான். பிறகு இருமிக்கொண்டே சில் லறையான தோட்ட வேலையைக் கவனிப்பான். குழந்தைகளும் அவனைச் சுற்றிக்கொண்டு, மண்வெட்டியால் கொத்தி, பாத்தி அடித்து, பந்தல், போட்டு தோட்டத்தை விருத்திசெய் வார்கள்.

நாட்கள் சென்றன.

— 5 —

சென்ற வருஷம் கார்த்திகை மாதத்தில் வழக்கம்போல் இருமல், சுரத்துடன் கந்த சாமி கஷ்டப்பட்டான். அப்பொழுது இரண்டு முறை இரத்தம் கக்கியதால், உடலுக்கு அதிக பலவீனம் ஏற்பட்டது. நடக்கவும் சக்தியில் லாமல், ஆகாரத்தில் தேட்டமேயின்றி, நிரந் தரமான நோயாளியாகிவிட்டான்.

அம்மணி என்ன செய்வாள், பாவம்! மனத் தில் திகில் பிடித்துக்கொண்டது. அதை வெளிக்குக் காண்பிக்கவேயில்லை. கந்தசாமி இனி வேலைக்குப் போகக்கூடாதென்று திட் டம் செய்தாள். அவனுடைய வரும்படியில்லா மல் இந்தப் பெரிய சம்சாரத்தை எப்படி நடத்துவது?

இப்பொழுதெல்லாம் ஜன்னலண்டைபோய் அம்மணியின் முகத்தைப் பார்க்க நேரிட்டால், அதில் காணும் சோர்வும், சோகமும் என் நெஞ்சை அள்ளிப் பிடுங்கும். கடவுளே! ஏழை ஜனங்களுக்கு, அதிலும் பேதைப் பெண் களுக்கு, ஏன் இவ்விதத் துன்பங்களைத் தந்து வேடிக்கை பார்க்கவேண்டும்? கருணைக்கடலே என்று உம்மை எப்படி அழைப்பது?

குழந்தைகளில் மூன்று பெண்கள் கிறிஸ்தவப் பாதிரிகளின் பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்று வந்தனர். இலவசமாகவே கல்வி பயின்றாலும் மேற் செலவுகள் அதிகம் இருந்தன, நல்ல உடை உடுத்தவும் பள்ளிக்கு வேண்டிய புத்தகங்கள் வாங்கவும் சக்தியில்லை. இந்த நிலைமையில் பெரிய பெண்கள் இருவரையும பள்ளிக்கூடத்திலிருந்து நிறுத்துவதாக அம் மணி நிச்சயம் செய்துகொண்டாள்.

— 6 —

ஒரு நாள் மூத்தபெண் கண்ணம்மா வெகு சந்தோஷமாகப் பள்ளிக்கூடத்திலிருந்து திரு ம்பி வந்தாள். அச் சமயம் அவள் 3-ஆம் பாரத் தில் படித்துக் கொண்டிருந்தாள்.

''அம்மாடி! இன்னிக்கு ஒரு நல்லசேதி கேட் டியா. எங்க பாலர் வகுப்பு சொல்லிக் கொடுத்த மேரி என்கிற பெண் கல்யாணம் பண்ணிக்கொள்வதால் வேலையை விட்டு விட் டாள். அந்த வகுப்பில் சொல்லிக்கொடுக்க எனக்கு இஷ்டமாஎன்று பாதிரியாரு என்னைக் கூப்பிட்டுக் கேட்டாரு. நான் உன் இஷ்டத் தைத் தெரிந்துகொண்டு பதில் சொல்வதாகச் சொன்னேன். மாதம் 15 ரூபாய் சம்பளம்— நான் வேலைக்குப் போறேன். அம்மாடி, அய்யாருகூட சம்பாதிக்காமே நீ என்னவெல் லாம் கஷ்டப்படறே'' என்று தாயாரைக் கட்

டிக் கொண்டாள். இதைக் கேட்டதும் அம்மணியின் கண்களில் நீர் நிறைந்தது. பெண்ணை அன்புடன் தழுவிக்கொண்டாள். கடவுளே இரங்கி இந்த வழியைக் காட்டியதாகநினைத்து, தனக்குச் சம்மதமே என்று தலையை அசைத்தாள்.

கந்தசாமிக்கு இந்த ஏற்பாடு முதலில் கசப்பாக இருந்தது. தான் உயிருடன் இருக்கும் பொழுது, மனைவியும் மகளும் கஷ்டப்பட்டு வேலை செய்வதா என்று ஏங்கினான். மேலும் வயதுவந்தபெண், எதற்காக வெளியில்போய்ச் சம்பாதிக்கவேண்டும் என்றும் நினைத்தான். தன் உடல்நலம் கெட்டுப்போனதால் அல்லவா அம்மணிக்கு இவ்வளவு துன்பங்களும் ஏற்பட்டன என்று எண்ணி வருந்தினான். அதிக நேரம் யோசிக்கவும் அவனுக்குச் சக்தியில்லை.

கண்ணம்மா, மறு நாளே பாலர் வகுப்பு வாத்திச்சியாக அமர்த்தப்பட்டாள். அன்று அவளை வழியனுப்ப, இருமிக்கொண்டே கந்தசாமி அவரைப்பந்தல் வரையில் வந்தான். பிறகு, தள்ளாடிக்கொண்டே உட்கார்ந்து, மகள் சென்ற பாதையை நோக்கிக் கண்ணீர் சொரிந்தான்.

— 7 —

இது நடந்தும் 6 மாதமாகிறது. நோயாளி பாயும்படுக்கையும்ஆகிவிட்டான். எழுந்திருப்பதேயில்லை. இருமலும் தேகத்தை ஒடுக்கிக் குலைத்துப் பார்வைக்கு விகாரமான தோற்றத்தைக் கொடுத்தது.

அம்மணி? பாவம்! இன்னமும் அவள் அழகாகவே இருக்கிறாள். சுருண்ட தலை மயிரைச் சீவுவதில்லை. முகத்தில் சிரிப்பைக் காண்பதே அரிதாகி விட்டது. வாட்டமே குடிகொண்டிருந்தது. ஓய்வு ஒழிவு இல்லாதவேலை அவள் உடலைத் துரும்பாக இளைக்க வைத்தது.

இந்த ஆறு மாதத்தில் நடந்த சில நிகழ்ச்சிகள், அவர்களை ஊராரின் அன்புக்கும், நன்மதிப்புக்கும் தகுதியற்றவர்களாக்கிவிட்டன.

கண்ணம்மா வாத்திச்சி வேலைக்குப் போனாளல்லவா? அதே பள்ளிக்கூடத்தல் 8 ஆம் வகுப்பில் கற்றுக்கொடுக்க தேவநேசன் என்று ஓர் இளைஞன் இருந்தான். கண்ணம்மாவுக்கும், அவனுக்கும் எப்படியோ நட்பு உண்டாயிற்று. அது கடைசியில் காதலாக மாறி, இருவரும் கல்யாணம் செய்துகொள்வதென்று தீர்மானித்தனர்.

அம்மணிக்கு இந்தச் செய்தி ஒருநாள் எட்டியது; தூக்கி வாரிப்போட்டமாதிரி இருந்தது அவளுக்கு. போயும் போயும் கிறிஸ்தவப் பையனுக்கு எப்படிக் கண்ணம்மாவைக் கட்டிக் கொடுப்பது? கண்ணம்மா சிரித்தாள்.

''அம்மாடி! நானும் மதத்தில் சேரப் போகிறேன். அப்பொத்தான் என்னை அவரு கட்டிக்குவாரு'' என்றாள்.

''அடி கண்ணு, உன் புத்தி இப்படியா போகணும்? நம்ம உறவுக்காரன், முறைமைக்காரன் எவ்வளவுபேர் இருக்கிறாங்க. உனக்கா ஒருவரும் அகப்படவில்லை?'' என்று கதறினாள் அம்மணி.

''யாரு அம்மாடி, என்னைக் கட்டிக்கத் துணிஞ்சு வந்தான்கள்? மாமன் மகன், மாமன், அத்தை மகன் எல்லாரும் நாம்ப ஏழைன்னிட்டு கிட்டவே வரலே. பள்ளிக்கூடத்திலேவேறே வேலை செய்வதால் நான் இப்பவே கிறிஸ்தவச்சி யாகிவிட்டேன் என்று இளக்காரம் செய்யரானுங்க......அம்மாடி என்னைத் தடை செய்யாதே. இவரைத்தான் நான் கட்டிக்குவேன். நாங்க ரெண்டுபேரும் சம்பாதிச்சு ஐயாவையும், உன்னையும் காப்பாத்துவோம்'' என்று கண்ணம்மா பதில் சொன்னாள்.

விதியின் வழியை யாரால் தடுக்கமுடியும்? கண்ணம்மா முதலில் ''ஞானஸ்தானம்'' பெற்று ரூத் மேரி என்கிற பெயர்களுடன் தேவநேசனைக் கலியாணம் செய்துகொண்டாள்.

கந்தசாமிக்கு இந்த உலக சிந்தனையே வர வரக் குறைந்து வந்தது. தன் நினைவின்றி வியாதியின் சோர்வினால், படுக்கையில் கிடப்பான்.

— 8 —

கண்ணம்மாவின் கணவன் நற்குணம் படைத்த வாலிபன். கண்ணுவைக் காதலித்தே மணம் புரிந்துகொண்டாலும் அவளைச் சேர்ந்தவர்கள் ஹிந்துக்களாக இருந்தது அவனுக்கு அருவருப்பைக் கொடுத்தது.

ஒருநாள் தன் மாமனைப் பார்வையிட நல்ல வைத்திய யோக்யதை பெற்ற, தங்கள் மடத்துப் பாதிரியார் ஒருவரைத் தேவநேசன் அழைத்துவந்தான்.

அதன் பிறகு கந்தசாமிக்கு ஒருவகையில் நல் [illegible] காலம் பிறந்ததென்று சொல்லலாம். பா [illegible] யார் வைத்யத்தில் தேர்ச்சிபெற்றவரெ [illegible] துடன், மடத்திலும் அதைச் சேர்ந்த [illegible] கிறிஸ்தவக் குடும்பத்திலும் மாபெரும் [illegible] என்ற புகழுங் கொண்டவர். அவருடை [illegible] வைத்யமும், இனிய சொற்களும் கந்தசாமியின் பலவீனமான நிலைமையில் அவனுக்குப் பெரிய ஆறுதலைக் கொடுத்தன.

அரைகுறையான ஞாபகத்தில் ஸதா இருந்து வந்த அவனுடையை சகல சௌகரியங்களையும் கவனித்துக்கொள்ளவும், பிற்காலத்தில் தன் மனைவி குழந்தைகளின் பராமரிப்பையும் தங்கள் பொறுப்பாக ஏற்றுக்கொள்ளவும் மடத்தில் உள்ள பாதிரிகள் தயாராயிருந்த விஷயம் போதிக்கப்பட்டது. மேலும் 'ஞானஸ்தானம்' பெறுவதானல் கிட்டும் மோக்ஷ சாம்பிராஜ்யத்தின் பெருமையைப் பற்றியும் அவன் பாதிரியாரின் சம்பாஷணையின் மூலம் அரைகுறையாகப் புரிந்துகொண்டானென்றே சொல்லலாம்.

''அம்மணி இதையெல்லாம் மௌனமாகவே கவனித்து வந்தாள். கந்தசாமிக்குத் தன் மருமகன் ஏதோ வைத்தியம் செய்வதாக முதலில் நினைத்துக்கொண்டாள். தினசரி தன் வேலைகளைக் கவனிப்பதன்றி, சந்தோஷமாக ஒருவருடனும் பேசுவதில்லை.

கண்ணம்மா தேவநேசனைக் கலியாணம் செய்துகொண்டதும் அம்மணியின் மனதில் ஏற்பட்ட அதிர்ச்சி அவளை முற்றிலும் வேறு

மனுஷியாக மாற்றிவிட்டது. இத்துடன் ஊர் ஜனங்களின் அவமதிப்புக்குப் பாத்திரமானதையும் அவர்கள் தன்னை முன்போல அன்புடன் நடத்தாமல் வெறுத்துத் தள்ளியதையும் அவளால் பொறுக்கமுடியவில்லை. அனேக நாள் இரவு முழுதும் நித்திரையின்றி தன் குடிசையின் ஒரு மூலையில்போய் உட்கார்ந்துகொள்வாள்.

"நான் வீரம்மா மக இல்லே? ஆத்தா! வீராயி! உன் கோயிலில் நெய் விளக்குப் போட்டு, உனக்கு படையல் போடறேன். இந்தப் பாதிரிப் பூண்டே இங்கு இல்லாமே அளச்சிப்புடணும்" இதுதான் அவள் ஸதா முணமுணப்பது!

— 9 —

நான் ஆறு மாதம் வெளியூருக்குச் சென்று திரும்பி வந்தேன். நடுவில் எவ்வளவோ விஷயங்கள் நடந்தனவென்பது பின்னால் தெரிய வந்தது.

அம்மணியின் கொல்லையில் இப்பொழுது அழகிய சிறு ஓட்டுக் கட்டிடமொன்று தென்படுகிறது. பழைய சிறு குடிசையும அதன் அருகே நின்றது. காய்கறித் தோட்டம் செழித்துத் தழைத்து அதன்மூலம் ஒரு நாளைக்குச் சுமார் ரூ. 10 மதிப்புள்ள காய்கறிகள் சந்தையில் விற்கப்பட்டன,

கந்தசாமிக்கு என்ன ஆயிற்றென்று விசாரித்தேன். ஐயோ, பாவம்! அவன் இந்த உலகத்தையும் அதன் இன்னல்களையும் துறந்து பரம பிதாவின் பாதம் சேர்ந்து நற்கதி அடைந்து விட்டானும்.

நான் ஊரைவிட்டுச்சென்ற ஒரு மாதத்திற்[illegible]ல்லாம் ஒரு நாள் கந்தசாமிக்கு "ஞானஸ்[illegible]ம்" கொடுக்கப்பட்டது. அவன் குடும்பப் [illegible]ர் சாமுவேல் ஆக மாறி, குழந்தைகளுக் [illegible]வவ்வேறு அழகிய பெயர் இடப்பட்டது. [illegible]துமுதல், நோயாளியான சாமுவேலுக்குத் தேவையான மருந்து, ஆகாரம், படுக்கை முதலிய சௌகரியங்களைப் பாதிரிமார், தாங்களே கவனித்துக்கொண்டார்கள். குழந்தைகள் அனைவரும் இலவசமாகப் படிக்கத் தொடங்கினார்கள். கந்தசாமியின் நிலத்தை மடத்தின் கவனிப்பில் எடுத்துக்கொணடு, வேறு அறை ஒன்று அமைத்து அதில் அவனைக் குடிபோகச் செய்தார்கள். மேலேசொன்ன நினுசில் கறிகாய்த் தோட்டமும் செழிக்கத் தலைப்பட்டது. புதுக் குடிசைக்கு மாற்றப்பட்ட சில தினங்களில் கந்தசாமியின் ஆவியும் உடலைவிட்டுப் பிரிந்து சென்றது. அதற்கு முன்பு, ஒவ்வொரு நாளும் மாலை நேரத்தில் பாதிரிமார் வந்து, கட்டிலின் அருகில் ஜபம்செய்து. அன்புடன் அவனுக்கு நல் உபதேசம் செய்தார்களாம். கந்தசாமியின் உடலும் கிறிஸ்தவ வழக்கப்படி மாதாகோவில் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது.

இவ்வளவு நிகழ்ச்சிகளுக்கும் நடுவே அம்மணி என்ன செய்தாளாம? பேதைப் பெண்ணே, உன்விதி இப்படியா இருந்தது?

அரைப் பைத்தியமாக இருந்த அம்மணி தன் கணவனுக்கு "ஞானஸ்தானம்" செய்விக்கும் ஏற்பாடுகளைக் கண்டவுடன், ஒரே பாய்ச்சலாக ஓடி, தன்னுடைய பழைய குடிசைக்குள் புகுந்து, உளளே தாளிட்டுக்கொண்டாளாம்,

அம்மம்மா! அன்று அவள்போட்ட கூச்சல் இப்பொழுது நினைத்தாலும் பயங்கர ஸ்வப்னம் போல இருக்கிறதாம். அவளுடைய குழந்தைகளும், மடத்து ஜனங்களும், கதவைத் திறக்கும்படி வற்புறுத்தியதை அவள் கவனிக்கவேயில்லை. பத்துநாள் கழித்துத் தானுகவே, அடங்கி ஒடுங்கிக் கதவைத் திறந்து வெளியில் வந்தாளாம். பார்வையில் ஒளியேயில்லை. உடல்ஒரு துரும்பாக இளைத்து, கறுத்து, உருத் தெரியாமல் மாறிவிட்டது. தலையில் மருந்துக்குக்கூட ஒரு கறுப்பு மயிர் கிடையாது; ஒரே தும்பைப்பூ வெளுப்பாக மாறியிருந்தது.

ஆம், அம்மணி ஒரு பைத்தியம் ஆனுள்.

— 10 —

இன்று ஜன்னலைத் திறந்து அச்சத்துடன் வெளியில் நோக்கினேன்.

ஆம். அவளேதான் அந்த உருவம்! பட்டினியால் உலர்ந்துபோன உடல்; நிற்கச் சக்தி இல்லை. குடிசையின் வாயிற்படியில் உட்கார்ந்து தலையை ஒருபுறமாகக் கதவில் சாய்த்துக் கொண்டிருக்கிருள். கண்களில் ஓர் அர்த்தமற்ற பார்வை. வாய் ஸதா எதையோ முணுமுணுத்தது.

ஐயோ கடவுளே! பழைய அழகி அம்மணி எங்கே; இதோ என்முன் தென்படும் விகாரத் தோற்றத்தையுடைய ஸ்திரீ எங்கே. அந்த அழகெல்லாம் எங்கே பறந்துசென்றது?

தூரத்தில் உள்ள என்னையே வெறித்துப் பார்த்தாள். கண்களில் ஒரு க்ஷணநேரம் ஏதோ புரிந்துகொண்டது போன்ற ஒரு பார்வை. அருகில் வரச்சொல்லி எனக்கு சமிக்ஞை செய்தாள்.

சற்று யோசித்துப் பிறகு மெள்ள அவள் அருகில் சென்றேன். "அம்மணி உனக்கு உடம்பு எப்படி இருக்கிறது? தேவலையா"

சட்டென்று என் கைகளைத் தாவிப் பிடித்துக்கொண்டாள். அப்பா, அவள் சிரிப்புத்தான் என்ன பயங்கரம்! குரல்கூடவா இப்படி மாறிப்போகும்?

"கந்தசாமி.........என் ராசா.........செத்துப் பூட்டான்......ஐயோ ... இல்லே......இல்லே ...இல்லே......அவனே பிசாசு எடுத்துக்கிட்டு வேறே ஒரு சவத்தை இங்கே கொணடுவந்து போட்டிருக்கு......நான் வீராயிக்கு விளக்கல் வச்சிருக்கேன்......ஆ...வீராயீ, வீராயீ! கொண்டா...என் பட்டாளத்து ராசா கந்தசாமியே கொண்டா..." மறுபடி ஒரே சிரிப்பு...சற்று நேரத்தில் பழையபடி கூச்சல்.

பிறகு என்கையை உதறித் தள்ளிவிட்டு ஓட்டமாக ஓடி, குடிசைக்குள்போய்த் தாளிட்டுக் கொண்டாள். சற்று நேரம் நின்று பார்த்தேன். ஒருவிதச் சத்தமுமில்லை.

அப்பப்பா...என்ன கோரம்!...இனி ஜன்னலருகில்போய் வழக்கம்போல் வெளியில் எட்டிப்பார்க்க என் நெஞ்சில் துணிவு இல்லை, ஜன்னலுக்கு ஒரு திரை கட்டவேண்டியதுதான்.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.